தேர்தல் ஸ்பெஷல் - 3

# கல்கி

KALKI 21.3.2004 ரூ.6.00



# உலா வரும் உணர்வுகள்!

உள்ளே...
'செல்'லே... செல்லமே!
மினி கல்கி

With Best Compliments From

# தினமலர்

## தேசிய தமிழ் நாளிதழ்

# DINAMALAR

**National Tamil Daily**

*Printed Simultaneously From*

- Chennai
- Vellore
- Pondicherry
- Erode
- Coimbatore
- Tiruchi
- Madurai
- Tirunelveli
- Nagercoil
- Salem

விற்பனையில் சாதனை படைத்து வரும் தரமான No.1 நாளிதழ்

அடுத்த இதழ்

# கல்கி

## கமகமக்கும் ஆயுர்வேத சிறப்பிதழாக மலர்கிறது





படிக்க...
பயன்பெற...
பாதுகாக்க...

**2** புத்தகங்கள்

உங்கள்..
டாக்டர் எல்.மகாதேவன் வழங்கும்

**ஊக்கம் தரும் தூக்கம்**

மினி **கல்கி**

# அக்னிசர்மா பக்கம்

# நடக்குமென்பார்:

**பிரியங்கா சோப்ரா இந்த வாரம் அதிர்ஷ்டமானத் திருப்பத்தை எதிர்பார்க்கலாம். விருச்சிக ராசிக்காரராச்சே!**



**மேஷம்:** எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு. எல்லா விஷயத்திலும் முன்னேற்றமான திருப்பம் உண்டு. அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலை நிலவும். எதிர்பார்த்த கடன் உதவி தேடி வரும். ஏற்றுமதி இறக்குமதி தொழில்களில் லாபம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புதிய சொத்து சேர்க்கைக்கு வாய்ப்பிருக்கிறது - பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

**ரிஷபம்:** இதுவரை இருந்து வந்த மனக்குழப்பம், அலைச்சல் எல்லாம் விலகும். துணிவு, தன்னம்பிக்கை அதிகரிக்கும். திடீர்னு தெய்வபலம் அதிகரிக்கப் போகுது. புதிய வேலை வாய்ப்பு முயற்சிகள் நன்மை தரும். வேலை விஷயமா வெளியூர், வெளி நாடு போக வாய்ப்பிருக்கு. பொருளாதார சிரமம் குறையும். சனி இரண்டாம் சுற்றில் இருப்பவங்களுக்கு நன்மைதான். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு ஆதாய வாரம்.

**மிதுனம்:** குடும்பத்துல ஒற்றுமை, உறவினர்கள் வருகைன்னு உற்சாகம் கரைபுரளும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்புத் தேடி வரும். வழக்கு விவகாரங்கள்ல வெற்றி உண்டு. எதிர்பாராத பண வரவு தேடி வரும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு உண்டு. இதுவரை இருந்து வந்த தடைகள், குறுக்கீடுகள் மாயமாகும்.

**கடகம்:** பண நடமாட்டம் தாராளமாக இருக்கும். பொருளாதாரச் சிக்கல் மறையும். கடன்காரன் தொல்லை இருக்காது. அலுவலகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். குருபலம் நிறைந்து இருக்கறதால சுபமங்கள காரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு. வழக்கு விவகாரங்கள்ல நன்மை உண்டு. கொடுக்கல் வாங்கல்ல உஷாரா இருங்க.

**சிம்மம்:** மனசுல துணிவு, தன்னம்பிக்கை கூடும். எதிர்ப்புகள் மறையும். உற்சாகமான மனநிலை ஏற்படும். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி தேடி வரும். கஷ்டமான வேலைகளையும் சுலபமா செய்து பாராட்டுப் பெறுவீங்க. உயரதிகாரிங்க ஆதரவு, பாராட்டு கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கலாம். எதிர்பாராத பண வரவு உண்டு.

**கன்னி:** எந்தவொரு காரியத்தையும் திட்டமிட்டபடி செய்து முடிப்பீங்க. இதனால புகழ், பாராட்டு கிடைக்கும். சுயமாகத் தொழில் பண்றவங்களுக்கு லாபம் உண்டு. கொடுக்கல் வாங்கல் உதவும். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும். சுமுகமான உறவு நிலவும். பெண்களுக்கு எல்லா வகையிலும் அதிர்ஷ்டம் உண்டு.

**துலாம்:** தெய்வபலம், தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். புதியவங்க அறிமுகம் உண்டு. இவங்களால நன்மை விளையும். உத்தியோகத்தில் இதுவரை இருந்த குழப்பங்கள் பிரச்னைகள் தடைகள் விலகும். தாமதமாகி வந்த பதவி உயர்வு இப்போ வந்து சேரும். புதிய வேலை வாய்ப்பு தேடறவங்களுக்கு இது நல்ல நேரம். இதுவரை இருந்து வந்த பொருளாதார நெருக்கடி குறையும். மாணவர்களுக்கு முன்னேற்றம் உண்டு.

**விருச்சிகம்:** குடும்பஸ்தானத்தைக் குரு பார்க்கறதால, சுபமங்கள காரியங்கள்

நடக்க வாய்ப்பிருக்கு. எதிர்பார்த்த நல்ல செய்தி தேடி வரும். இதுவரை இருந்து வந்த குழப்பங்கள் மறையும். எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், டிராவல்ஸ் துறைகளைச் சேர்ந்த வங்களுக்கு வளர்ச்சி உண்டு. சுயதொழில் வியாபாரத்தில் அதிர்ஷ்டமான திருப்பம் உண்டு.

**தனுசு:** எந்த காரியத்தையும் வெற்றிகரமா செயல்படுத்துவீங்க. பணவசதி தாராளமா இருக்கும். புதிய முயற்சிகள்ல வெற்றி உண்டு. சிலர் புது வீடு, மனை வாங்க வாய்ப்பிருக்கு. சொத்து விவகாரத்தில் நன்மை உண்டு. பெண்களுக்கு இது ஒரு அதிர்ஷ்டமான வாரம்.

**மகரம்:** உத்தியோகத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்னைகள், குழப்பங்கள் விலகும்.

# நடக்கும்!

எதிரிகள் ஓடி ஒளிவாங்க. மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் பிறக்கும். முக்கியமானவங்களோட சந்திப்பு நிகழும். அந்தச் சந்திப்பில் ஆதாயமும் உண்டு. வேலை விஷயமாக சிலர் வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. பெண்கள் தங்கள் எண்ணங்கள் நிறைவேறப் பெறுவார்கள்.

**கும்பம்:** குடும்பத்துல குதூகலமான சூழ்நிலை உண்டாகும். குருபலம் பூர்ணமா இருக்கறதால பொன், பொருள், ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படும். கல்யாணம் போன்ற சுபகாரிய முயற்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு. உடன் பிறந்தவங்களால நன்மை உண்டு. குடும்பத்தில் இருந்து பிரிந்திருந்தவர்கள் இப்போ ஒன்று சேருவாங்க. வேலையில் இதுவரை இருந்து வந்த குழப்பங்கள், பிரச்னைகள் விலகும்.

**மீனம்:** இந்த வாரம் செலவுகள் கட்டுக்கடங்காது. சிக்கனம் அவசியம். குடும்பத்தில் கருத்து வேறுபாடு காரணமா சில குழப்பங்கள் ஏற்படலாம். எங்கேயும் அனாவசியமா பேச வேண்டாம். எல்லாரிடமும் சுமுகமா பேசிப் பழகுறது நல்லது. புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுங்க. எதிர்பார்த்த பண உதவி வந்து சேரும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க.


**கல்கி**

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு



> நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்ததுபோல ஆகிவிடும்.

**க**டற்கரையை நெருங்கும் முன்பே இரட்டை இலை வரையப்பட்ட மெகா சைஸ் மஞ்சள் பலூன் வானில் தலையசைத்துக் கூப்பிட்டது. சென்னை பல்கலைக் கழகம் வழியே மெரினா சாலையில் நுழைந்தால்,

• பிரசாரத்தைத் தொடங்கும் ஜெ.





• நெரிசலுக்கிடையில் நாதஸ்வரம் ரசிக்கும் ஃபாரின் ஜோடி

# முப்பத்தாறு மேள ஸெட்

இருமங்கிலும் 'ஜெ'வின் வரவை எதிர்பார்த்து முட்டி மோதிக் கொண்டிருந்தார்கள் தொண்டர்கள். அ.தி.மு.க., பா.ஜ.க. என்று தொண்டர்கள் தூக்கிப் பிடித்திருந்த கட்சிக் கொடிகளுக்கு நடுவே, காங்கிரஸ் கொடிகளும் பறக்க நமக்கோ அதிர்ச்சி! ஆவலோடு நெருங்கிப் பார்த்த பிறகுதான் தெரிந்தது - அவை வாழப்பாடியார் தொடங்கிய ராஜீவ் காங்கிரஸ் கொடிகள் என்பது.

விவேகானந்தர் இல்லத்தை ஒட்டி அமைக்கப் பட்டிருந்த மேடையில், லக்ஷ்மண் ஸ்ருதி இசைக்குழு எம்.ஜி.ஆர் - ஜெ. டூயட் பாடல்களைப் பாடி இரண்டு மணி முதலே தொண்டர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தது. மதியம் இரண்டரை மணிக்கெல்லாம் ஜெ. வருகை தந்து, தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கி விடுவார் என்று எதிர்பார்த்தனர் தொண்டர்கள். மூன்று மணியாகியும் ஜெ. வரவில்லை என்றதும், பசியைக் கட்டுப்படுத்த தர்பூசணி, பட்டாணி, சுண்டல், ஐஸ்கிரீம், குச்சி ஐஸ், சுக்குக் காபி என்று தூள் கிளப்பினார்கள். இதற்குள், "நல்ல நேரம் நான்கு முப்பது மணிக்குத்தான் தொடங்குகிறது. அதுக்கு அப்புறம்தான் அம்மா வருவாராம்" என்று செய்தி பரவியது. இசைக்குழுவோ, எம்.ஜி.ஆர்.

# மன்மதராசா மெட்டு!

பாடல்களையும், ஜெ. புகழ் மாலையும் பாடி அலுத்துப் போனதில், திடீர் உற்சாக வெள்ளம் கரை புரண்டு ஓடும் படியாக அதிரடியில் இறங்கியது. 'மன்மதராசா' மெட்டில் அமைந்த



• மன்மதராசாவுக்கு மகளிரணியின் நடனம்



• அதிர்ச்சி தந்த கொடிகள்...

பிரசாரப் பாடலை, சாட்சாத் அதே மாலதி லட்சுமண் பெருங்குரலெடுத்துப் பாட, கடற்கரையே கிடுகிடுக்கிற மாதிரி அங்கே குவிந்திருந்த மகளிரணி உறுப்பினர்கள், மும்தாஜ்களாகவும் சாயாசிங்குகளாகவும் மாறி ஆடினார்கள்!

மகளிரணிக்குத் துணையாக தொண்டர்களும் ஆட்டத்தில் தூள் கிளப்ப -



• நெற்றி நிறைய இரட்டை இலை


வெள்ளை நிற சபாரியில் ஆடி, அனைவரையும் வசீகரித்துக் கொண்டிருந்தார் ஓர் இள ரத்தம். அவரை நெருங்கிப் பார்த்ததும் நமக்குப் புல்லரித்து விட்டது. காரணம், தமது நெற்றி முழுக்க இரட்டை இலை சின்னத்தை பச்சை குத்தியிருந்தார். காமெராவைப் பார்த்த நொடியில், ஆட்டத்தை நிறுத்திவிட்டு சூப்பராக போஸ் கொடுத்தார். அன்னார் பூங்கா நகர நாகராஜனாம், தலைமைக் கழகப் பேச்சாளர். நாகராஜன் படம் பிடிக்கப் பட்டது. "என்னை எடு, உன்னை எடு' என்று நெஞ்சு, கை, கால்களில் பச்சை குத்தியிருந்த இரட்டை இலையை, போட்டிப் போட்டுக் கொண்டு காட்டிய தொண்டர்களிடமிருந்து எஸ்கேப் ஆகி, ஜெ.வுக்கு வரவேற்பு அளிக்கத் தயாராக அமைச்சர்கள் நின்று கொண்டிருந்த மேடை அருகே வந்தோம்.

அங்கே லக்ஷ்மண் ஸ்ருதிக்குப் போட்டியாக (கூட்டல் தொகை ஒன்பது வருகிற மாதிரி) முப்பத்து ஆறு நாதஸ்வர - தவில் கலைஞர்கள் வாசித்துக்

கொண்டிருந்தார்கள்! நாதஸ்வர இசையை ரசித்தபடி படமெடுத்துக் கொண்டிருந்தது, கனடாவிலிருந்து வந்திருந்த சுற்றுலா ஜோடி.

**மா**லை ஐந்தேகால் மணிக்கு டெம்போ டிராவலர் வேனில் ஃபோகஸ் விளக்குகளின் ஒளியில் நனைந்தபடி வந்து சேர்ந்தார் ஜெயலலிதா. ஜெயின் அருகிலேயே சீரியஸ் முகபாவத்தோடு உயிர்த் தோழி சசிகலா.

அமைச்சர்கள் ஜெ.வுக்கு பூங்கொத்துக்கள் தர முண்டியடிக்கும் முன்பு, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் பூரண கும்ப மரியாதை செய்யப்பட்டது.



• கும்பிடு போடும் வேட்பாளர்கள்...

மைக்கைப் பிடித்த முதல்வர், சோனியாவை ஒரு பிடிபிடித்தார்.

"அரசியல் அரைவேக்காடு, கத்துக்குட்டி" என்று பொறுக்குமணி விமர்சன வசவுகள் பொழிந்தார் அனாயாசமாக!

மதுராந்தகம் பொதுக் கூட்டத்தில் இன்னும் ஒருபடி மேலே போய், ஆவேசமாகத் தனிநபர் தாக்குதல் செய்தார்.

கூட்டம் முடிந்தவுடன் "என்னய்யா இது... வெற்றி கொண்டான் மாதிரி தரக்குறைவா தாக்குறாங்க" என்று தொண்டர்கள் பேசிக் கொண்டனர். இது உண்மையோ என்று எண்ணும்படி 'தத்துவப் பச்சோந்திகள், நல்லதற்கும், கெட்டதற்கும் வித்தியாசம் தெரியாத நிறக்குருடர்கள்' என்று கம்யூனிஸ்டுகளையும், 'ஜாதிவெறியர்' என்று டாக்டர் ராமதாஸையும், 'தமிழக மக்களுக்கு உதவாத தண்டக் கட்சி நடத்தி வரும் வாய்ச்சவடால் பேர்வழி' என்று வைகோவையும் தாக்கினார். 'இவர்களை பாராளுமன்றத்துக்குள் அனுமதித்தால், "நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்ததுபோல ஆகிவிடும்" என்று கிராமத்து மக்களுக்குப் புரியும்படியான பழமொழிகளை உதிர்த்தவர், "ஜனநாயக நாட்டமோ, முற்போக்குக் கொள்கையோ இல்லாத சந்தர்ப்பவாதம் பெற்றெடுத்த சைத்தான்! காங்கிரஸ் - திமுக. கூட்டணி" என்று காட்டமாக, கை உயர்த்திப் பேசியபோது அலைகடல் ஆர்ப்பரிப்பு!

**செ**ன்னையில் பாலகங்கா, பதர் சையீத் இருவரையும் அறிமுகப் படுத்தி முடித்த கையோடு குரோம்பேட்டை, தாம்பரம், கூடுவாஞ்சேரி என்று கூட்டம் திரண்டிருந்த இடங்களில் எல்லாம், இதே பாணியில் சோனியாவைத் தாக்குவதில் அதிக ஆர்வம் காட்டினார் ஜெ.

தொடக்க நாள் பிரசாரத்திலேயே புரட்சித் தலைவி நூற்று அறுபது கிலோ மீட்டர் பயணம் செய்து காட்டியது, அ.தி.மு.க. தொண்டர்களை உற்சாகப் படுத்தியிருக்கிறதாம்.

**டை**யில் பீஸ்: சென்னை கிண்டியில் தொடங்கி மதுராந்தகம் வரை, பல இடங்களில் தடைசெய்யப்பட்ட கூம்பு வடிவ ஒலிபெருக்கிகளைக் கட்டி பாடல்களை ஒலிபரப்பியதை, காவல் துறை கண்டு கொள்ளவில்லை. தேர்தல் கமிஷன் கவனிக்கவுமில்லை!

— ஜெயந்தன்

படங்கள்: ராஜன், ஜெய்

# புத்திசாலிகள் வெற்றி கொள்ளும் வழி!

சில விஷயங்கள் என்றும் நம் நினைவில் நிலைத்து நிற்கின்றன. அவைகள் நம் வாழ்வின் மிகச் சிறந்த தருணங்களை நமக்கு அடிக்கடி நினைவூட்டுகின்றன. அவை பருவகால மாற்றங்களையும் அவ்வப்போது மாறும் சூழ்நிலைகளையும் வென்று, நிலையாக நிற்பவை.




**புத்திசாலிகள் போற்றும் முதலீடு:** திட்டமிட்டு வெற்றி பெறும் புத்திசாலிகள் தேர்ந்தெடுப்பது, ஆபத்து இல்லாத, அதிக லாபம் தரும், முதலீட்டு முறையே.

ஏல உச்ச வரம்பு **40%**

**ஸ்ரீராம் சீட்டுத் திட்டம்:** சேமிக்கவும், அதிலிருந்தே கடன் பெறவும் வகை செய்யும் இருவழி சேமிப்பு முதலீட்டுத் திட்டம். சீட்டு ஏல உச்ச வரம்பு 40% ஆனதால் ஈசுறுத் தொகை (Dividend) உயர்ந்து வருகிறது.

**ஸ்ரீராம் சிட்ஸ் சிறப்புகள்:** • 30 ஆண்டுகளாக பல லட்சம் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு வழி காட்டி • ரூ.10,500 கோடிக்கு மேல் சீட்டுத் தொகை பட்டுவாடா • பலருக்கு வேலை வாய்ப்பு • தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் 465க்கும் மேற்பட்ட கிளைகள்



**புதுமைப் பொலிவு பெறுங்கள்:** தாரண தமிழ்ப் புத்தாண்டை வரவேற்க ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு வாருங்கள். சிறுகச் சேமித்து செழிப்படையும் கலையையும், எளிதாகக் கடன் பெறும் நுட்பத்தையும் அறிந்து, புதுமைப் பொலிவு பெறுங்கள்.

## புதிய அஸ்திவாரம்

குவைத்திலிருந்து தாயகம் திரும்பி வந்த எனக்கு இங்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சோர்வு சூழக் கவலையோடு அமர்ந்திருந்த போது மனைவி சொன்னாள்: சொந்தமாக ஆட்டோ அல்லது டாக்சி வாங்கி உங்கள் சம்பாத்யத்தை தொடங்குங்கள். பணத்துக்கு எங்கே போவது? அப்போது தான் என் மனைவியின் முன் யோசனை எனக்குப் பேருதவியாக இருந்தது. நான் அனுப்பிய பணத்தில் ஒரு தொகையை ஒதுக்கி ஸ்ரீராம் சிட்டில் சேர்த்திருக்கிறாள். அது முடிவடையும் சமயம், என் புது வாழ்க்கைக்கு ஸ்ரீராம் புதிய அஸ்திவாரமானது.

-ஐ. குணசீலன், சென்னை - 116.


**ஸ்ரீராம் சிட்ஸ்**

தமிழ்நாடு (பி) லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 002. போன்: 5201 1833

WORDCRAFTS

இந்தியாவுக்கும் இத்தாலிக்கும் நடக்கும் மேட்ச். வாஜ்பாய் அணி 299. அதில் அத்வானி 121 நாட் அவுட்.




• ஸ்கோர் போர்ட்

சோனியா அணி பெற்றது 123. அதில் காங்கிரஸ், தி.மு.க, பா.ம.க பெற்றது எல்லாம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ''வாஜ்பாய் அணியில் உள்ள அ.இ.அ.தி.மு.க பெற்றது எவ்வளவு என்பதை ஏன் தனியாகக் காட்டவில்லை?'' என்று ஸ்கோர்போர்டு அட்டையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த ராஜபாளையம் பா.ஜ.க தொண்டர்களைக் கேட்டோம். ''அவங்க தயவே தேவையில்லை'' என்று பளீரென்று ரியாக்ட் செய்தார் தொண்டர் ஒருவர்! தொண்டர்கள் விவரமானவர்கள்தாம். அத்வானியின் 'பாரத் உதய் யாத்திரை'யை நேரடியாக ஒளிபரப்பிக் கொண்டிருந்த நான்கு தொலைக்காட்சி நிறுவன காமிராக்களின் முன்பு நின்று, அட்டையைத் தாங்கிப் பிடித்தவாறு ''வந்தே மாதரம்; பாரத் மாதா கி ஜெய்'' என்று முழங்கிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு கட்டமாக நடத்த இருக்கும் தமது 8000 கி.மீ 'பாரத் உதய் யாத்திரை'யை குமரியில் இருந்து துவக்குவதற்காக முதல்நாள் இரவே வந்து விட்டார் அத்வானி. உடன் மனைவி, மகள். குமரியில் பந்தோபஸ்து அசத்தியது.

நாதஸ்வரம், மேளம்,

• தமிழ்மக்களுக்கு வணக்கம்...




# உலா வரும் உணர்வுகள்!



மங்கல ஒலியுடன் துவங்கியது விழா. தமக்கு பேச வாய்ப்பில்லை என்ற காரணத்தாலோ என்னவோ, மைக் முன்னால் நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தார் எல். கணேசன். உடன் சிவகங்கை ஹெச். ராஜா. தொடர்ந்து ஒலிபெருக்கியில் 'சாரே பாரத் வாஸியோங்' என்ற இந்திப்பாடல் வேறு. கும்பல், கும்பலாக திடலுக்கு வந்த தொண்டர்களின் கழுத்தில் காவித்துண்டுகள். தெற்கத்திய பாணியில் வேட்டி கட்டிக் கொண்டு, கூலிங்கிளாஸோடு வித்தியாசமான கெட்-அப்பில் இருந்தார் பிரமோத் மகாஜன். முக்கூடலிலிருந்து கிளம்பிய காற்று, அவரது வேட்டியை ரொம்பவே அலைக்கழித்தது. அடிக்கொருமுறை மேடைக்கு எதிரில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்தின் உள்ளே ஏறி இறங்கிப் பார்த்துக் கொண்டிருந்தார் மகாஜன். சத்தீஸ்கர் மாநில பா.ஜ.க பிரமுகர் ஜூதேவ் தயாரித்து அனுப்பியிருக்கும் பேருந்து இது. பன்னிரண்டு இருக்கைகள், கம்ப்யூட்டர், தொலைத்தொடர்பு என்று நவீன வசதிகள். மூன்று பக்கங்களிலும் வாஜ்பாய் புன்னகைத்துக் கொண்டிருந்தார். இதற்கிடையில் மைக் - செட்காரர் பா.ஜ.க- தி.மு.க உறவின்போது தயாரிக்கப்பட்ட பழைய காஸெட்டைப் போட, அதில் உதய சூரியனுக்கு கவுண்டமணி குரலில் ஒருவர் வாக்குக் கேட்க, கூட்டம் 'ஓ'வென்று கூச்சல் போட்டு நிறுத்தியது! ''கிடைத்தது உங்களுக்குப் பெட்டிச் செய்தி'' என்றார் எல். கணேசன்.



பொன். ராதாகிருஷ்ணன், ஜி.பி.





* பொன்னாடை போர்த்தும் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த்

ராதாகிருஷ்ணன் ஆகியோர் பேசிய பிறகு, வெங்கையா மைக்கைப் பிடித்தார். நெளிவு சுளிவு இல்லாத நேரடியான பேச்சு, வேகம், சந்தம். அவர் பேச, உடனுக்குடன் ராஜா அதை மொழி பெயர்க்க, இந்துத்துவ மத போதகர் பிரசங்கத்தை நினைவூட்டியது.

அத்வானியை 'யாத்திரை நாயகன்' என்று சொல்லலாம். இது அவருக்கு மூன்றாவது யாத்திரை. முதலில் அயோத்தி நோக்கி; அதன் பிறகு ஸ்வர்ண ஜெயந்தி யாத்திரை, இப்போது பாரத் உதய் யாத்திரை. தயாரித்த உரையிலிருந்து அப்படியே படிக்காமல், அதிலிருந்த சாரத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, இந்தியிலும், ஆங்கிலத்திலும் மாறி, மாறி வெளுத்துக் கட்டினார் அவர். பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துள்ள ஜெ. தே.ஜ.மு.வில் சேருவது பற்றி இதுவரை வாயைத் திறக்கவில்லை. ஆனால் அத்வானி பேசும்போது, 'அ.தி.மு.க.வும் தே.ஜ.மு. கூட்டணியில் இருக்கும்' என்று குறிப்பிட்டார். ஸ்வர்ண ஜெயந்தி யாத்திரையை மேற்கொண்ட போது, தேசத்தின் விடுதலைக்காகப் போராடிய தலைவர்களின் பிறப்பிடங்களுக்குச் சென்றதைச் சொன்ன அத்வானி, மறக்காமல் மண்ணின் மைந்தர் காமராஜைப் பற்றிக் குறிப்பிட்டார். அத்வானி ஒன்றிரண்டு முறை ஜெ. பெயரைக் குறிப்பிட்ட போது, கூட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து மட்டும் கைதட்டல். தட்டியவர்கள் அமைச்சர் தளவாய் சுந்தரத்துடன் வந்திருந்த அம்மாவின் ரத்தங்கள். குமரி சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினர் அமைச்சர். இந்தத் தொகுதி திருச்செந்தூர் பாராளுமன்றத் தொகுதியுள் அடங்கியது. மேடையில் திருநாவுக்கரசர் பக்கத்தில், திருச்செந்தூர் அ.தி.மு.க வேட்பாளர் தாமோதரன் அமர்ந்திருக்க, பக்கத்தில் தளவாய் சுந்தரம். வேட்பாளரும், அமைச்சரும், திருநாவுக்கரசர் முகம் பார்ப்பதைக் கூட தவிர்த்தார்கள்.

அத்வானி பேசும்போது அயோத்தி பற்றியோ, சோனியா பற்றியோ, சிறுபான்மை சமூகத்தினரை சங்கடப் படுத்தும் அளவுக்கோ, எந்த வீச்சும் இல்லை... ''இந்தியாவை ஒருங்கிணைக்கிறார் வாஜ்பாய். சாலைகள் மூலமாக, தொலைத் தொடர்பு மூலமாக. இப்போது நான் இந்தியர்களின் மனங்களை ஒருங்கிணைக்க யாத்திரை மேற்கொள்கிறேன்'' என்றார் அத்வானி. அயோத்தி பற்றி அத்வானி குறிப்பிடவில்லையென்றாலும், இந்த யாத்திரையின் அடிநாதமாக அயோத்தி இருக்கும் என்பது, கொட்டாரம், சுசீந்திரம் ஆகிய இடங்களில் வைத்திருந்த ராமர் கட் அவுட்களையும், துணி பேனர்களையும் பார்க்கும்போது புரிந்தது. அத்வானி யாத்திரை அந்தப் பகுதியைக் கடப்பதற்கு முன்பும், கடந்த பின்பும் ஒலி பரப்பப்பட்ட பாடல்கள், சங்கக் குடும்பத்தின் பாடல்களே!

சரியாகப் பன்னிரண்டு மணிக்கு

ஆடம்பரப் பேருந்தில் (ஸாரி... ரதத்தில்) ஏறினார் அத்வானி. அதற்கு முன்பு மேடையில் அவரை 'புதுமுகங்களான' ஆலடி அருணா, தீரன், கிரிக்கெட் ஸ்ரீகாந்த் ஆகியோர் வாழ்த்தினார்கள். விஜயசாந்தி, எஸ்.வி. சேகர் கூடுதல் அட்ராக்ஷன். துவக்க விழாவுக்கு வந்திருந்த கூட்டம் அதிகபட்சமாக பத்தாயிரம் இருக்கும். 'ஜெய், ஜெய் யாத்திரா... பாரத் உதய் யாத்திரா' என்ற தொண்டர்கள் கோஷம் அலைகடலுடன் போட்டியிட, அத்வானியின் பேருந்து, மெதுவாகத் தனது நீண்ட பயணத்தைத் துவங்கியது. பேருந்தின் உச்சியில் வண்ண நிழற்குடை. கிளம்பிய சில நிமிடங்களில் மரக்கிளையில் தட்ட, வளைந்துவிட்டது அது! உடனே இறக்கி வைத்து விட்டார்கள். கடற்கரையில் இருக்கும் காந்தி மண்டபத்தைத் தாண்டியதும், பேருந்துக்குள் அமர்ந்து கொண்டார் அத்வானி. வேகம் எடுத்தது பேருந்து... உள்ளிருந்து கையாட்டினார் அத்வானி. அடுத்து அவர் பேசியது கசிந்திரத்தில்தான். பேருந்தின் படிக்கட்டுகளில் இருந்தவாறு பேசினார். தலைமைப் பிரச்னையால் தடுமாறும் காங்கிரஸை ஒரு பிடி பிடித்தார். போகப் போக வோட்டு அறுவடையை மனத்தில் கொண்டு, சூட்டைக் கிளப்பும் பேச்சுகளை அத்வானியிடமிருந்து எதிர்பார்க்கலாம்.

முதல்கட்ட யாத்திரையில் நூற்றியிருபது பாராளுமன்றத் தொகுதிகளைக் கவர் செய்கிறார் அத்வானி. அத்வானியுடன் அவர் மகளும் மனைவியும் உலா வந்தனர். குடும்பத்தினர் விரைவில் வீடு திரும்பிவிடக்கூடும். ஆனால், அத்வானியோடு இணைந்து இடைவிடாது உலா வரும் உணர்வுகள்தான் அவர் கட்சிக்கும் கூட்டணிக்கும் மிக அரிய ஆயுதம். ஆயுதங்கள் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

— ப்ரியன்

படங்கள்: மீடியா ராமு


**என்னது...?**

**இன்னும் வேலை கிடைக்கலையா ?**

**அல்லது நல்ல வேலை இல்லையா ?**

☆ நீங்கள் ஒரு பட்டதாரிதானே

☆ உங்கள் வயது 26-ஐ தாண்டிவில்லையே.

☆ அப்படியானால் கவலையை விடுங்கள்.

☆ வெளிநாட்டு கம்பெனிகளிலும் பிரபல உள்நாட்டு கம்பெனிகளிலும் வேலை உங்களுக்கு காத்திருக்கிறது.

☆ மாத சம்பளம் எவ்வளவு தெரியுமா ?

☆ ரூ. 8000/- முதல் ரூ. 10000/- வரை

☆ என்ன ? நீங்கள் ரெடியா ?

☆ உடனே தொடர்பு கொள்ளவும்.

**APSE**

The Academy For Pharmaceuticals Selling Expertise
# 26- T, Pandu Klix Plaza, II Floor
330 (Old No.168) Thambu Chetty Street,
Chennai - 600 001. Ph : 044 - 2535 4577

**B.A., B.Sc., B.PHARM., D.PHARM., P.G., M.B.A.,**

**BOTH MALE & FEMALE ARE ELIGIBLE**



போஸ்ட்கார்டு கதைகள் வரவேற்கப்படுகின்றன

# அடி... தோழி... அடி... தோழி...!

பில்கேட்ஸ்

"ஆபீசுக்குப் போற அவசரத்துல இது வேறயா... ஏய், ஜெயா! இவ என்னமோ கேக்கறா, வந்து என்னன்னு பாத்துத் தொலை... இந்த வாட்சை எங்க வச்சேன்?" என்று சொல்லியபடியே பரந்தாமன் தேட ஆரம்பித்தான்.

விஜி ஏமாற்றத்தோடு மீண்டும் ஷாலுவின் அருகில் வந்தாள்.

"குட்மார்னிங் ஷாலு..."

"..................."

இந்த முறையும் பதில் இல்லை.


"இனிமே எங்கூட பேச மாட்டியா ஷாலு...? பெட்ல இருந்து கீழே விழுந்துட்டேன்னுதானே கோபமா இருக்கே...? உனக்குத்தான் ஒண்ணும் ஆகலியே, பேசு ஷாலு..." - கொஞ்சம் அழுகையோடு சேர்த்துச் சொன்னாள். பிறகு அம்மாவிடம் வந்தாள்.

"நான்தான் ஸாரி சொல்லிட்டேன்ல, ஷாலுவைப் பேசச் சொல்லு மம்மி!"

"ஏய் முனியம்மா... இவ என்னமோ கேக்கறா பாரு. எங்கடி போய்த் தொலைஞ்சே..." அம்மாவுக்கும் ஆபீசுக்குக் கிளம்பும் அவசரம்.

வேலைக்காரி முனியம்மா கீழே கிடந்த ஷாலுவை எடுத்து, சரி செய்து சாவி கொடுத்தாள்.

அந்த வெளிநாட்டு பொம்மை அன்பான புன்னகையோடு, விஜியைப் பார்த்து 'குட்மார்னிங்' சொன்னது! ○




## சாணக்கியம் அறியாத சோனியா!

மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தி நிறுவப்பட்டுள்ள 'இந்தியா ஒளிர்கிறது' விளம்பரப் பலகைகளை உடனடியாக அகற்றுமாறு தேர்தல் கமிஷன் உத்தரவு பிறப்பிக்கிறது. நாடெங்கும் அந்த நடவடிக்கை எடுக்கப்படுகிற தினத்தில், பாரதிய ஜனதா கட்சியின் ரத யாத்திரை விளம்பரம் நாளிதழ்களில் வெளியாகிறது. அவ் விளம்பரத்தின் வாசகம் : "ஒளிரும் இந்தியா உதய யாத்திரை"!

இத்தனை நாளாகக் கோடிக்கணக்கில் மக்களின் வரிப்பணத்தைக் கொட்டி, பாரதிய ஜனதா கட்சிக்குத்தான் (இந்தியா ஷைனிங்) விளம்பரம் செய்யப்பட்டது என்பதை நிரூபிக்க வேறென்ன வேண்டும்!

இந்த யாத்திரையின் காரணமாக, மதக் கலவரங்கள் நிகழாது என்று கட்சி சார்பில் கூறப்படுவதை ஏற்கலாம். பலத்த பாதுகாப்பினாலும், நன்கு திட்டமிடுதலாலும் கலவரங்களைத் தடுப்பது சாத்தியமாகலாம். ஆனால் பா.ஜ.க. இத் தேர்தலில் வகுத்துள்ள வியூகம், எதிர்காலம் குறித்து நம்மைக் கலவரப்படுத்துகிறது. 'விச்வ ஹிந்து பரிஷத், யாத்திரையில் கலந்து கொள்ளாது; ஆனால், அதன் உறுப்பினர்கள் விரும்பினால் பங்கேற்கத் தடையில்லை' என்பதாக வி.எச்.பி. தலைவர் அறிவித்திருப்பது, 'நிச்சயமாக வி.எச்.பி. தொண்டர்கள் யாத்திரைக்கு உழைக்க வேண்டும்' என்று விடுக்கப்படுகிற அழைப்பே ஆகும்.

ஆர்.எஸ்.எஸ். ஒரு படி மேலே சென்றிருக்கிறது. பா.ஜ.க.வின் தேர்தல் பணிகள் அனைத்திலும் பங்கேற்கத் தீர்




**கல்கி**



2004 மார்ச் 21
சுபானு பங்குனி 8
மலர் : 62
இதழ் : 34

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



மானித்திருக்கிறது. பிரதமர் உள்பட பல முன்னணி பா.ஜ.க. தலைவர்களும், ஆர்.எஸ்.எஸ். தலைவர்களும் கூடி ஒரு திட்டம் தீட்டியுள்ளனர். அதன்படி, அனைத்து வேட்பாளர் தேர்வுக் குழுக்களிலும் இரண்டு ஆர்.எஸ்.எஸ். முக்கியஸ்தர்கள் இருப்பார்கள். போதும் போதாததற்கு, ஒவ்வொரு வடமாநிலத்திலும், மேற்கு மாநிலத்திலும் பா.ஜ.க. நிச்சயமாக ஜெயிக்கக்கூடிய தொகுதி ஒன்று, ஆர்.எஸ்.எஸ். வேட்பாளருக்கென ஒதுக் கப்படும்.

பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கை கூட, ஆர்.எஸ்.எஸ். விரும்பும் பல அடிப்படைவாத அம்சங்களை உள்ளடக்கியதாகத்தான் அமையும்.


கூட்டிக் கழித்துப் பார்த்தால், ஆர்.எஸ்.எஸ்.ஸின் கை இத் தேர்தலில் மிக ஓங்கியிருக் கும். தேர்தலுக்குப் பிறகும் அதன் ஆதிக்கம் தொடரும்.

'ஆர்.எஸ்.எஸ்.ஸின் தொடர்பு அப்படி என்ன கேடு விளைவித்து விடும்?' என்று கேட்கலாம். கட்டுப்பாடுக்கும் ஒழுங்குக்கும் பெயர் போனதுதான் அவ்வியக்கம். ஆனால் அதற்கு மதச்சார்பின்மையில் அடியோடு சம்மதம் கிடையாது. ஏற்கெனவே ஆர்.எஸ். எஸ்.ஸின் கைப்பாவையாக இருந்து வரும் பா.ஜ.க., இந்தத் தேர்தலுக்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ்.ஸின் பினாமியாகவே மாறிவிடும். தப்பித் தவறி பி.ஜே.பிக்குத் தனி மெஜாரிட்டி கிடைத்து விட்டாலோ, கேட்கவே வேண்டாம். அப்புறம் நாட்டில் நடப்பது வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். ஆட்சியாகத்தான் இருக்கும்.

இந்த முடிவை நோக்கி விரையும் வகையில், பல மாநிலங்களிலும் பலமான கூட்டணி அமைத்துக் கொண்டு விட்டது பா.ஜ.க. போதாக்குறைக்கு, சினிமா, கிரிக்கெட் நட் சத்திரங்களை டஜன் கணக்கில் பிரசாரக் கூட்டங்களுக்குப் பயன்படுத்தி வருகிறது.

எதிர் அணியான காங்கிரஸ், தமிழகம், மஹாராஷ்டிரம் தவிர வேறு எந்த மாநிலத் திலும் இன்னும் தேர்தல் உடன்படிக்கை செய்து முடிக்கவில்லை; கூட்டணிகள் உறுதிப் படுத்தவில்லை. கூட்டணி உறுதியான மாநிலத்திலும், வேட்பாளர் பட்டியல் வெளியிட்ட பாடில்லை. (இத் தலையங்கம் எழுதப்படும்போது)

'கிராமம் கிராமமாகச் சென்று சோனியா காந்தி பிரசாரம் செய்கிறாரே... சென்ற




இடமெல்லாம் எளிய மக்கள் அவரை அங்கீகரித்து ஏற்றுக் கொள்கிறார்களே; இது நம் கட்சியின் செல்வாக்குக்கு அடையாளம்தானே' என்று காங்கிரஸ் கட்சியினர் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ராஜீவின் மனைவி, இந்திராவின் மருமகள், ராஹுல் - ப்ரியங்காவின் அம்மா என்கிற முறையில் சோனியாவுக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் வரவேற்பு கிடைக்கவே செய்யும். காங்கிரஸ் தலைவி என்ற முறையிலும் வரவேற்று மகிழ்வார்கள். தாங்கள் தேர்ந்தெடுக்கப் போகும் வருங்காலப் பிரதமர் என்ற முறையில் அல்ல! ஜெயலலிதா தமது முதல் பிரசாரக் கூட்டத்திலேயே பிரயோகித்துள்ள 'சோனியா அன்னியர்' அஸ்திரம்தான், பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். முழக்கமாகவும் நாடெங்கும் ஒலிக்கும். அந்த முழக்கம் காங்கிரஸையும் அதன் தலைவியையும் வீழ்த்தாமலிருந்தால் அது உலக மகா அதிசயம்தான்!


சட்டபூர்வமாக, சோனியாவுக்குப் பிரதமராவதற்குத் தகுதி உண்டு. ஆனால் உணர்வு பூர்வமான நிலை வேறு. உணர்வு பூர்வமாகத்தான் மக்கள் முடிவெடுப்பார்களேயொழிய, அறிவார்த்தமான விவாதங்களுக்குச் செவி சாய்க்கிற மனோநிலை எளியோரிடம் இல்லை.

இதை உத்தேசித்துத்தான், சோனியா வேறு மூத்த தலைவர் பிரதமராவதற்கு வழி விட்டு, கட்சிப் பணியையும் தலைமையையும் மட்டுமே கவனிக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னோம். அவ்வாறு அவர் செய்திருந்தால், இன்று பீஹார், உ.பி. போன்ற மாநிலங்களில் காங்கிரஸ் கூட்டணி ஸ்திரமாக அமைக்கப்பட்டிருக்கும். இனிமேல் சோனியா பின்வாங்கினால், தோல்வி அச்சத்தில் மனத்தை மாற்றிக் கொண்டார் என்ற அவப்பெயரே உண்டாகும். பா.ஜ.க. மட்டும் தனிப்பெரும்பான்மை இடங்களைப் பெற்றுவிட்டால், இந்தியாவின் மதச்சார்பற்ற நிலை தகர்ந்து போகும். இது தார்மிக ரீதியில் நமது உயர்பண்புகளுக்கும், நெறிகளுக்கும் தோல்வியாக அமையும். அரசியல் ரீதியில் எடை போட்டால், பேரபாயத்தை நமக்கு நாமே தேடிக் கொண்டதாகும்.

தேர்தல் வியூகம் வகுப்பதில் சாமர்த்தியமும் சாணக்கியமும் தேவை. சோனியாவிடம் சாமர்த்தியம் உள்ள அளவுக்குச் சாணக்கியம் இல்லாதது காங்கிரஸின், தேசத்தின் துரதிர்ஷ்டம். ○

## குவிஸ் போட்டி (15) முடிவுகள்

ஆஹா! ரூ.10,000 பரிசு!




# பிடியுங்க பரிசை!

குவிஸ் போட்டி 15க்கு சரியான விடைகள் எழுதியவர்களில் குலுக்கல் முறையில் பரிசை வென்றவர்:

என். கமலம்மாள் ரங்கசாமி
81/12-A , சுப்புராய முதலியார் வீதி,
கோணவாய்க்கால்பாளையம்,
போத்தனூர், 641 023
கோவை மாவட்டம்.

ஆறுதல் பரிசாக ரூ.100 பெறுபவர்கள்:

1. ந. இந்திராணி, கல்லிடைக்குறிச்சி, 2. ஏ.கே. ராஜசேகரன், சென்னை - 11, 3. ஏ. ராமு, முகப்பேர் கிழக்கு, 4. ரா. அன்னஜெர்திஸ்வரன், சேரன் மகாதேவி, 5. எஸ். மாடசாமி, விருதுநகர், 6. எஸ். இராதாகிருஷ்ணன், நெல்லை - 1, 7. எஸ். ஸ்ருதி, ஸ்ரீரங்கம், 8. எஸ். கணேசன், அம்பலவாணபுரம், 9. வே.ந. கதிர்வேல், வேலூர் - 6, 10. ஆ. பெரியசாமி, நெல்லிக்குப்பம், 11. ஜி. நடராஜன், மதுரை - 10, 12. டி.கே. சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம், 13. எஸ். சாந்தா, வடக்கு காருக்குறிச்சி, 14. எல். மீனாட்சி சுந்தரம், மதுரை - 10, 15. அ. ஞானபாஸ்கரன், நெல்லிக்குப்பம், 16. ஆ. சங்கரன், அம்பா சமுத்திரம், 17. ஆர். உமாதேவி, காட்பாடி, 18. எம். பானு, மடிப்பாக்கம், 19, நீலா ராம் கோபால், பெங்களூர் - 41, 20. பி. விக்னேஷ், தஞ்சை - 1.

**குவிஸ் போட்டி 15க்கான விடைகள்:**

1. 'சங்கீதக் கனவுகள்' நூலை எழுதிய தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர் **இளையராஜா.**

2. ஹார்மோனியத்தைக் கண்டுபிடித்தவர் **பெஞ்சமின் பிராங்ளின்.**

3. அமெரிக்காவில் சுதந்திர தேவி சிலை நிறுவப்பட்டிருக்கும் தீவின் இப்போதைய பெயர் **லிபர்டி - எல்லிஸ் தீவு.**

4. இந்திய ஜனாதிபதிக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பவர் **உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி.**

5. லாட்டரிச் சீட்டு திட்டத்தை இந்தியாவில் முதன்முதலில் நடத்திய மாநிலம் **கேரளா.**

6. நடிகை சதாவின் முதல் தமிழ்ப் படம் **ஜெயம்.**

## வாழ்த்துகள்

மார்க் வாங்கலாம் வாங்க! 11

# மூளைக்குள்ளே கான்கிரீட் சாலை!

**பேராசிரியர் ப. இராம்கோபால்**



நீங்கள் ஒரு கல்லூரியில் தாவரவியல் படிக்கும் முதலாமாண்டு மாணவர் என்று வைத்துக் கொள்வோம். தாவரங்களைச் சேகரிப்பதற்காக மலைப் பகுதிக்குச் செல்கிறீர்கள். திடீரென்று அபூர்வமான தாவரம் ஒன்று உங்கள் கண்களில் படுகிறது. சற்றுத் தூரத்தில் இந்தத் தாவரம் ஏராளமாக இருப்பதைப் பார்க்கிறீர்கள். உடனே மற்ற மாணவர்களிடம் இதைப் பற்றிச் சொல்ல எண்ணித் திரும்புகிறீர்கள். அங்கே யாரையும் காணோம். நடுக்காட்டில், நண்பர்களை விட்டுத் தொலைதூரம் வந்துவிட்டதை உணர்கிறீர்கள். நடுக்காட்டில் மாட்டிக் கொள்கிறீர்கள். களைப்பில் அப்படியே கண்ணுறங்கி விடுகிறீர்கள். பொழுது விடிந்ததும் யாரோ உங்களைத் தட்டி எழுப்புகிறார்கள். பயத்துடன் 'ஐயோ!' என்று கூச்சலிட்டுக் கொண்டே எழுந்து பார்க்கிறீர்கள். சுற்றிலும் நண்பர்கள். எல்லோருக்கும் மகிழ்ச்சி. 'என்ன நடந்தது?' என்று நண்பர்கள் கேட்க, வித்தியாசமான தாவரத்தைப் பற்றி நீங்கள் சொல்கிறீர்கள். எல்லோரும் அதைப் பார்க்க ஆசைப்பட, நீங்கள் வழிகாட்டிக் கொண்டு பேராசிரியரையும் சக மாணவர்களையும் அழைத்துக் கொண்டு செல்கிறீர்கள். சிறிது நேரத்தில் தாவரம் அகப்பட எல்லோரும், கண்டுகொண்டேன், கண்டு கொண்டேன் என்று மகிழ்ச்சியில் குதிக்கிறார்கள். பேராசிரியருக்கோ பெரு மகிழ்ச்சி. இந்த முறை தாவரத்தைத் தேடிச் சென்ற போது, வழியில் சில அடையாளங்களை விட்டுச் சென்றதால், திரும்பி வருவது சுலபமானது.



கல்லூரியில் உங்கள் கண்டுபிடிப்பைப் பற்றிய செய்தி காட்டுத்தீ போல் பரவ, நீங்கள் ஒரே நாளில் 'ஹீரோ நெம்பர் 1' ஆகி விட்டீர்கள். மற்றக் கல்லூரிகளுக்கும் செய்தி பரவுகிறது. மாணவர்களும் பேராசிரியர்களும் தாவரம் இருக்கும் பகுதிக்குப் படையெடுக்க ஆரம்பிக்கின்றனர். நீங்களும் உங்கள் நண்பர்களும் இந்தத் தாவரத்தைத் தேடிச் சென்றபோது உங்கள் கால்களால் மிதிபட்டு, வழியிலிருந்த சிறு செடிகள், புற்கள் அப்படியே தரையோடு தரையாக அமுங்கிப் போயின. பார்ப்பதற்குச் சற்றே அகலமான ஒரு கோடு போல் இது காட்சியளிக்கிறது. மாணவர்கள் மீண்டும் மீண்டும் இந்தக்

கோட்டிலேயே நடந்ததால், ஒரு ஒற்றையடிப்பாதையாக மாறி விடுகிறது. இந்தத் தாவரத்திலிருந்து சார்ஸுக்கு மருந்து (சும்மா, ஒரு கற்பனைதான்!) தயாரிக்கலாம் என ஓர் ஆராய்ச்சியாளர் கண்டுபிடிக்கிறார். இதையறிந்த மருந்துக் கம்பெனிகள் தாவரத்தை நாடிவர, ஒற்றையடிப் பாதை மண் சாலையாகவும், மண் சாலை, தார்ச் சாலையாகவும் சில மாதங்களில் உரு மாறுகிறது. ஒரு பன்னாட்டு நிறுவனம் இதையெல்லாம் கேள்விப்பட்டு, மருந்து தயாரிப்பில் குதிக்கிறது. இப்போது தார்ச்சாலை கான்க்ரீட் ரோடாக மாறுகிறது. இதுவரை நடந்தது என்ன? கொஞ்சம் யோசியுங்கள்.

நீங்களும் உங்கள் நண்பர்களும் ஒரு கோடு போட்டீர்கள். இந்தக் கோட்டின் மேல் மற்றவர்கள் மீண்டும் மீண்டும் நடக்க, கோடு, ரோடானது. அதாவது 'நடத்தல்' என்ற செயல் இங்கே மீண்டும் மீண்டும் நடந்ததால் ஒரு சிறிய கோடு கான்கிரீட் ரோடானது. இனி இதை யாராலும் அழிக்க முடியாது.

நமது மூளை ஓர் அடர்ந்த காடு என்று வைத்துக் கொள்வோம். ஒரு புதிய தகவல் இந்தக் காட்டுக்கு வரும் போது, அது திக்கு திசை தெரியாமல் தடுமாறி, வெளியே வந்து 'தொப்' பென்று விழுந்து விடுகிறது. ஆனால் இதே தகவல் மீண்டும், மீண்டும் 'உள்ளே' அனுப்பப்படும்போது அது மூளைக்குள் ஒரு 'நினைவுப்பாதையை' (memory pathway) உருவாக்கிக் கொள்கிறது. இந்தப் புதிய தகவல் மூளையில் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டு, அங்கேயே வசிக்க ஆரம்பித்து விடுகிறது. இந்தத் தங்குதல் (retention/storing) நடந்தால்தான், நமக்குத் தேவையானபொழுது அதை நம்மால் வெளியே எடுக்க, நினைவுகூர (recall) - முடியும். இதைத்தான் law of repetetion - repetetion itself increases the probability of repetetion என்று கூறுகிறார்கள். இந்த 'மீண்டும் மீண்டும்' டெக்னிக்கின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள, இதோ இன்னும் சில தகவல்கள்:

ஒரு பாடத்தை முதன்முதலாகப் படித்தபின், ஒரு மணி நேரம் வரை அந்தப் பாடத்தின் பல பகுதிகள் நினைவில் இருக்கும். ஆனால் இவற்றில் 80 சதவிகிதம் அடுத்த 24 மணி நேரத்தில் மறைந்து விடும். மீதமிருக்கும் 20 சதவிகிதம், சுமார் ஒரு வாரத்திற்குள் மறைந்து விடும்.

மறந்து போதலை எப்படித் தடுத்து நிறுத்துவது? இதற்கு ஒரே வழி, 24 மணி நேரத்திற்குள் மீண்டும் குறைந்தபட்சம் ஒரு முறையாவது அப்பாடத்தைத் திரும்பப் படிக்க வேண்டும்.


ஒரே பாடத்தை எத்தனை முறைதான் திரும்பத் திரும்பப் படிப்பது? போரடிக்குமே, அதற்கொரு வழி சொல்லுங்கள்?' என்று கேட்பது காதில் விழுகிறது. கவலையை விடுங்கள். போரடிக்காமல் பாடங்களை மீண்டும் மீண்டும் படிக்க - படித்தலை ஒரு மிகச் சுவாரசியமான செயலாக மாற்ற, சில டெக்னிக்குகள் இருக்கின்றன. இவை நமக்குள்ளே ஒளிந்து கிடக்கும் படைப்பாற்றல் என்ற ஒப்பற்ற திறனை வெளியே இழுத்து வந்து விடும்!

(தொடரும்)

''அண்ணே... நம்ம கட்சியின் மகளிர் அணி செயலாளர் எதிர்க்கட்சிக்கு போயிட்டாங்க...''

''தெரியும்-நான்தான் அந்தக் கட்சியை இரண்டா உடைக்க அவங்களை அங்கே அனுப்பி வச்சேன்...''

- வி. கிருஷ்ணகுமார்



ஜான்சர் விஷன் சாரிடபிள் ட்ரஸ்ட் (பதிவு எண் : 124/BK IV) பதிவு அலுவலகம் :

**அரவிந்த சாய் கண் மருத்துவமனை,**

**நெ.1, கணேசன் தெரு (பம்மல் மெயின் ரோடு), கிருஷ்ணாநகர், பம்மல்,**

**சென்னை - 600 075.**

ஏழை எளிய மக்கள் மற்றும் நலிவுற்றோருக்கு கண்ணுக்குள் லென்ஸ் வைக்கும் நவீன கண்புரை அறுவை சிகிச்சை முற்றிலும் இலவசமாக ட்ரஸ்ட் மூலம் அரவிந்த் சாய் கண் மருத்துவமனையில் செய்யப்படுகிறது. கண் சிகிச்சை முகாம்கள் காஞ்சி, திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்களில், மாவட்ட பார்வை தடுப்பு கழகத்தின் அங்கீகாரத்துடன் செய்யப்படுகிறது. மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்படும் நோயாளிகளுக்கு உணவு, மருந்து, தங்குமிடம் மற்றும் ஆபரேஷன் ஆகியவை **முற்றிலும் இலவசம்.** மேற்கூறிய ட்ரஸ்ட்க்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு 80 ஜி பிரிவின்கீழ் வருமான வரிவிலக்கு உண்டு. (Exempted under 80G IT Act)

(ஜான்சர் விஷன் சாரிடபிள் ட்ரஸ்ட்) Jansar Vision Charitable Trust என்ற பெயரில் DD அல்லது செக் அனுப்பலாம்.

பார்வை என்பது ஆண்டவனின் அருட்கொடை. அதனால் பார்வையிழப்பை முற்றிலும் திரும்பப் பெற்றவர் என்றும் தனது நன்கொடையாளருக்கு நன்றியுடையவராக இருப்பார்.

**JANSAR VISION CHARITABLE TRUST,**
**ARAVIND SAI EYE HOSPITAL,**
Ph : 22482045, 22485594, Cell : 31151224
E-mail : aravind_sai1997@yahoo.com
Website : www.jansarvisiontrust.com

சமூக சேவை அமைப்புகள் இலவச கண் சிகிச்சை முகாம் நடத்த மேற்கூறிய முகவரியைத் தொடர்பு கொள்ளவும்.


---


**ESTD : 1959** ஸ்ரீ குரு ராகவேந்த்ராய நமஹ **Phone : 28444538, 28442850**

**புனித யாத்திரை** **43 வருட அனுபவமுள்ள ஸ்தாபனம்**

ஸ்தாபகர் : **வி. சுப்பாராவ்** உரிமையாளர் : **எஸ்.பத்ரி** செல் : 9444019151

**26.03.04** : 4 நாட்கள் கொண்ட மந்திராலயம் டூர். நெல்லூர், ஸ்ரீசைலம், மந்திராலயம், மகாநந்தி, அஹோபிலம் ஆகியன. கட்டணம் ரூ.**1,500/-**

**10.04.04** : 8 நாட்கள் கொண்ட தமிழ்ப் புத்தாண்டு கங்கா ஸ்நான யாத்திரை. காசி, கயா அலகாபாத் ஆகியன. கட்டணம் ரூ.**4,000/-**

**14.04.04** : 14 நாட்கள் கொண்ட பஞ்சதுவாரகா யாத்திரை. அகமதாபாத், டாக்கூர் துவாரகை, கோமதி துவாரகை, பேட் துவாரகை, நாகேஸ்வரம், ஹரிசித்திமாதா, போர்பந்தர், புஷ்கர் பாலக், வீரப்பூர், மாத்துருகயா, அம்பாஜி, ஸ்ரீநாத் துவாரகா, காங்ரோலி துவாரகா, ஏக்லிங் ஆகியன. கட்டணம் ரூ.**6,500/-**

**06.05.04** : 12 நாட்கள் கொண்ட காசி யாத்திரை. பூரி, புவனேஸ்வர், கோனார்க், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம், ஆகியன. கட்டணம் ரூ.**5,500/-**

**06.05.04** : 22 நாட்கள் கொண்ட பூரி, புவனேஸ்வர், கோனார்க், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம், ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், டெல்லி, ஆக்ரா, மதுரா ஆகியன. கட்டணம் ரூ.**8,100/-**

**15.05.04** : 14 நாட்கள் கொண்ட பத்ரிநாத் யாத்திரை. பத்ரிநாத், கேதார்நாத், டெல்லி, ஆக்ரா, மதுரா, ஹரித்துவார், ரிஷிகேஷ், ஆகியன. கட்டணம் ரூ.**5,500/-**

**06.06.04** : 12 நாட்கள் கொண்ட காசி யாத்திரை. பூரி, புவனேஸ்வர், கோனார்க், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம், ஆகியன. கட்டணம் ரூ.**5,500/-**

**06.06.04** : 22 நாட்கள் கொண்ட பூரி, புவனேஸ்வர், கோனார்க், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம், ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், டெல்லி, ஆக்ரா, மதுரா ஆகியன. கட்டணம் ரூ.**8,100/-**

**15.06.04** : 14 நாட்கள் கொண்ட பத்ரிநாத் யாத்திரை. பத்ரிநாத், கேதார்நாத், டெல்லி, ஆக்ரா, மதுரா, ஹரித்துவார், ரிஷிகேஷ் ஆகியன. கட்டணம் ரூ.**5,500/-**

**06.08.04** : 14 நாட்கள் கொண்ட மஹாராஷ்டிரா யாத்திரை கோலாப்பூர், நாசிக், திரியம்பகேஸ்வர் ஷீரடி, குருஷ்னேஸ்வரம், எல்லோரா, சனிசிங்கணாப்பூர், நாகநாதம், பரலிவைத்தியநாதம், பண்டரிபுர், பீமாசங்கர், மகாகாலேஸ்வர், ஓங்காரேஸ்வர் ஆகியன. கட்டணம் ரூ.**6,500/-**

60 நாட்கள் முன்பு ரயில்வே டிக்கெட் ரிசர்வேஷன் செய்ய இருப்பதால் 2 மாதங்களுக்கு முன்பே பெயர், வயது, அட்வான்ஸ் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்.

**குறிப்பு : காலை காபி, டிபன், 2 வேளை சாப்பாடு தங்கு தங்கும் இடவசதி, ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு அனைத்தும் கம்பெனியருக்கு உட்பட்டது.**

மேலும் விவரங்களுக்கு **ஸ்ரீ விஜயா டிராவல் சர்வீஸ்**

New No.1/12, II Floor பார்த்தசாரதி அபார்ட்மெண்ட்ஸ், ஆரிமுத்து ஆசாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை -5. ✆ : 28444538, 28442850 Cell : 9444019151 Email : srivijayatravels@yahoo.com

தேர்தல் வாக்குகளை அள்ள, எதையாவது அள்ளிவிட வேண்டியிருக்கிறதே! போதிய சரக்கு கிடைக்காமல் திணறும் சூறாவளிப் பேச்சாளர்களுக்கு உதவுவதற்காக, கற்பனைக் குதிரையை ஓங்கிக் குட்டியபோது... ஸாரி! உதைத்தபோது கிடைத்த நோ லாஜிக், ஒன்லி மேஜிக் கதைகள் இவை. கட்சி பேதமின்றி யார் வேண்டுமானாலும், எந்த மேடையில் வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்ளலாம்!



மார்ச் 31-ஆம் தேதிக்குள் வீட்டு வரி கட்டியாக வேண்டும் என்ற நிர்பந்தம் நமக்கெல்லாம் இருந்தது போலவே, ராமசாமிக்கும் இருந்தது. மாதக் கடைசியில் அத்தனை பெரிய தொகைக்கு எங்கே போவது என குழம்பிப் போனார் ராமசாமி. கூட்டுறவு வங்கிகளில் குறைந்த வட்டி விகிதத்தில் இதற்காகக் கடன் தருகிறார்கள், என விவரம் சொன்னார் பக்கத்து வீட்டு பரமசிவம்.

ராமசாமியும் அந்த வங்கியை அணுகி, அப்ளிகேஷன் பாரத்தைப் பூர்த்தி செய்து கொடுத்து விட்டு ஆவலுடன் காத்திருந்தார்.

ராமசாமியின் அப்ளிகேஷனைப் பார்த்த வங்கி அதிகாரி மயக்கம் வராத குறையாக, ''வீட்டுவரி கட்ட, பத்து லட்ச ரூபாய் கடன் வேண்டுமா? நீங்கள் ராஷ்ட்ரபதி மாளிகைக்கா வீட்டு வரி கட்டப் போகிறீர்கள்?'' என பதற்றமாகக் கேட்டார்.

ராமசாமி பொறுமையாகச் சொன்னார், ''ஐயா! வீட்டு வரி

..H முத்திரை இருக்குதே!



கட்ட முதலில் வீடு ஒன்று சொந்தமாக இருக்க வேண்டும் அல்லவா? நீங்க பத்து லட்சம் லோன் கொடுத்தால், சிட்டியில் இல்லா விட்டாலும் புறநகர்ப் பகுதியிலாவது ஒரு வீட்டைக் கட்டி, வீட்டு வரியும் கட்டித் தொலைச்சுடுவேன்!''

நீதி: சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்? சொந்த வீடு இருந்தால்தானே வீட்டு வரி பற்றிக் கவலைப் படணும்?

அருணாசலம் தம்பு

... கட்டித் தொலைச்சுடுவேன்!






டைய ஒரே மகளுக்கு ஆசை ஆசையாகத் திருமணம் செய்து வைத்தார். மாப்பிள்ளை மன்னார்சாமி பிறர் தூங்கும் நேரத்திலெல்லாம் கூட

# நோ லாஜிக்; ஒன்லி மேஜிக்!



உழையோ உழையென உழைத்து, லட்ச லட்சமாக சம்பாதிப்பதாக கல்யாண புரோக்கர் மேகநாதன் சொல்லியிருந்தார். தவிர, மாப்பிள்ளை கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும் புரோக்கர் ஆதாரத்துடன் கூறியிருந்தார்.

இதையெல்லாம் நம்பி பெண்ணைக் கொடுத்த அருணாசலத்துக்கு, ஒரு நாள் தாம் கண்ட காட்சி பெரும் அதிர்ச்சியைத் தந்தது. கூட்டமான பஸ் ஒன்றில் ஏறிய அருணாசலம், தம் மாப்பிள்ளை மன்னார்சாமி அந்த பஸ்ஸில் இருப்பதையும், அவன் அருகில் தூங்கிக் கொண்டு இருப்பவனின் பாக்கெட்டில் பிளேடு போட்டு, பர்ஸைத் திருடுவதையும் பார்த்துவிட்டார். 'ஓஹோ! இதைத்தான் பிறர் தூங்கும் நேரத்தில் கூட உழைப்பான் என புரோக்கர் ஜாடையாக சொன்னாரோ!' என அவருக்குப் பொறி தட்டியது!

அருணாசலம் தமது கண்ணீர்க் கதையை சோணாசலத்திடம் கொட்டித் தீர்த்தார்.

"சரி! அவன் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன்னு புரோக்கர் சொன்னதை எப்படி நம்பினே?" சோணாசலம் கேட்டார்.

"அவனோட ரேஷன் கார்டில் 'எச்' முத்திரை இருந்ததே!" என்றார் அருணாசலம் அப்பாவியாக. சோணாசலம் தலையில் அடித்துக் கொண்டார்.

நீதி: கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரிப்பதே மெய்!

லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி லாவண்யா, ஏகப்பட்ட குழப்பத்தில் ஆழ்ந்திருந்தாள். காரணம், மாஜி அமைச்சர் ஒருவருக்குச் சொந்தமான இருபத்தைந்து வீடுகள், தமிழகம் முழுவதும் ஒரே சமயத்தில் ரெய்டு செய்

யப்பட்டும் பெரிய அளவில் பணமோ, அல்லது சொத்துக் குவிப்புக்கான ஆவணங்களோ சிக்கவில்லை.

லாவண்யாவுடைய பியூன் அவளிடம் ஏதோ சொல்ல முற்படுவது, அவளுக்குத் தெரிந்தாலும் அதை அவள் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

லாவண்யாவின் மேலதிகாரி அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "என்ன? ஏதாவது பெரிய மீனாகச் சிக்கியதா?" என டென்ஷனுடன் கேட்டுக் கொண்டேயிருந்தார்.

"பெருசா ஒண்ணும் பிடிபடலை சார். அவரோட வீடுகளில் ஆங்காங்கே டெஸ்ட் டியூப்களும், பிப்பெட், பியூரெட் போன்றவையும் தென்படுவதைப் பார்த்தால், உண்மையிலேயே விஞ்ஞானபூர்வமான ஊழலாத்தான் தெரியுது!" என்றாள்.

"நான்சென்ஸ்! எந் நேரத்தில ஜோக் அடிக்கறதுன்னு ஒரு விவஸ்தை வேண்டாமா? ஹூம்! நம்மையெல்லாம் தூக்கி தண்ணியில்லா காட்டுக்கு அடிக்கப் போறாங்க!" என கவலையுடன் சொன்னார் மேலதிகாரி. கடைசியில் அவர் சொன்ன மாதிரிதான் நடந்தது.

லாவண்யாவின் பியூன் மனசுக்குள் சலித்துக் கொண்டான். 'இருபத்தைஞ்சு வீடுகளை சல்லடை போட்டுத் தேடினாங்களே! முதலில் அந்த இருபத்தைஞ்சு வீடுகளும் எப்படி வந்ததுன்னு கேட்டாங்களா? நம்ம யோசனையை யாரு கேட்கறாங்க?'

***நீதி:- ஏழை சொல் அம்பலம் ஏறாது!***

ஓர் ஊரில் மிகப் பிரபலமான கைராசிக்கார டாக்டர் இருந்தார். ஆனால் அவர் போலி டாக்டர் என்பது நிறையப் பேருக்குத் தெரியாது.


ஒருமுறை ஒரு முக்கிய அரசியல் தலைவர், அவரிடம் தலைவலிக்காக வைத்தியம் பார்த்துக் கொண்டார். அந்த டாக்டர் கொடுத்த மருந்தில் தலைவலி சரியாகி விட்டது என்றாலும், பின்விளைவாக நம் அரசியல் தலைவருக்கு தூக்கத்தில் நடக்கும் வியாதி வந்து விட்டது. அரசியல் தலைவருக்கு அந்த மருந்தைச் சாப்பிட்டதன் பின் விளைவுதான் இது எனப் புரிந்தது. வேறு சில பிரபல வைத்தியர்களிடமும் இதைக் கேட்டு ஊர்ஜிதம் செய்துகொண்டு, அந்த போலி டாக்டரிடம் போய் 'காச் மூச்' என சத்தம் போட்டார். விஷயம் என்ன என்று விசாரித்த அந்தப் போலி டாக்டர், "அண்ணே அவசரப்பட்டுத் திட்டாதீங்க! எல்லாம் விஷயமாகத்தான் கொடுத்திருக்கேன்." என்றார் பவ்யமாக.

"என்னய்யா புடலங்காய் விஷயம்?" என்றார் அரசியல் தலைவர் "அண்ணே! நீங்க எதிர்க் கட்சி நபர். திடுதிப்புன்னு நட்ட நடுராத்திரில உங்களைக் கைது பண்ண வந்தாலும், நீங்க தூக்கத்துல நடந்து போயிடறதால தப்பிச்சுடலாம். தவிர, நீங்க தூக்கத்திலேயே நடந்துடறதால, காலைல தனியா வாக்கிங் போக வேணாம்! அதனாலே, உங்கக் கட்சியில இருக்கற எதிர்க் கோஷ்டிக்காரங்ககிட்டேயிருந்தும் தப்பிச்சுடலாம்" என்றார் சமயோசிதமாக. அரசியல் தலைவர் அசந்து போய் நின்றார்.

***நீதி:- வாயுள்ள பிள்ளை பிழைக்கும்!***

- பாஸு

---



"சாகித்ய அகாடமி விருதை தனக்குத்தான் கொடுக்கணும்னு நம்ம தலைவர் கேட்டுக்கிட்டிருக்காரே! என்னடா விஷயம்?"

"பொதுக்கூட்டத்தில் இதுவரை 1187 குட்டிக் கதைகள் சொல்லியிருக்காராம்!"

— உ. ராஜாஜி



# S.V.முதியோர் இல்லம்



## Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப்படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

**முதியோர் சேவை பெரியது!**

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

## S.V. HOME FOR AGED

### Charitable Trust (Reg)

**# 50 / 88, Panchali Amman Kovil Street, Arumbakkam, Chennai - 600 108.**
**(Near Panchali Amman Temple) Tel. Off: 044 - 2475 5700, 2475 1356, 2475 6700, 2475 5799**
**E-mail:svhome@vsnl.net**

---

ஞானவாபி - 2236444

# ஸ்ரீ காயத்ரி டிரஸ்ட்

45, லக்ஷ்மி நகர், குரோம்பேட்டை, சென்னை - 600 044.

## பெற்றோருக்கு புத்திரர்கள் கர்மா செய்வதன் பலாபலன்கள்

சரீரத்தை விட்டு ஆத்மா பிரிந்த பின், ஆத்மாவானது யமலோகம் சென்று அந்தக் கணமே பூலோகம் திரும்பி வந்து தன் சரீரத்தை பந்துக்கள் பார்த்து அழுவதையும், தன் சரீரத்தை சுற்றத்தார் தகனம் செய்வதைப் பார்த்து அல்லலுறும். இப்படி அலையும் ஆத்மாவிற்கு உரிய கர்மாக்கள் செய்யாவிடின் அந்த ஆத்மா பைசாசமாக உருமாறி அலையும். அலையும் ஆத்மா அல்லலுறாமல் இருக்க, இயன்றவரை தகனம் செய்த அன்றே கர்மாவை ஆரம்பிக்க வேண்டும்.

கர்மா செய்த பலனே ஆத்மாவிற்கு உரிய வழியைக் காட்டுகிறது. அழிந்த சரீரத்திற்காக 13 நாட்களும் விதிப்படி காரியங்கள் செய்தபின், தன் பிறவிப் பயன்படி யமலோகம் நோக்கி பயணப்படுகிறது. கர்மாக்களில் நாம் செய்யும் தானதர்மங்களே ஜீவனின் துயரத்தைக் குறைத்து, மறுபிறவியை அழித்து, கடவுளின் பாதாரவிந்தங்களை அடைவிக்கிறது. பலவித அசௌகர்யங்களைக் காட்டி கர்மா செய்யும் நாட்களைக் குறைத்து 9ம் நாளிலிருந்து ஆரம்பிக்கிறார்கள். இது ஜீவனுக்கு மிகவும் துயரம் தருகிறது.

எனவே பெற்றவர்களின் கர்மாக்களை எவன் ஒருவன் சிரத்தையுடன் செய்கின்றானோ, அவனுக்கு அந்த புண்ணியங்கள் சேரும் என்பதால், சிரத்தையுடனும் உள்ளன்புடனும் செய்ய வேண்டும் என்பது கருட புராணச் சான்றாகும்.

# 9 நோ, ஜோதிகா



சில இதழ்களுக்கு முன் வலுக்கட்டாயமாக சாப்பிடாமல் இருந்து அல்லல்படுகிற அனெரெக்ஸியா நெர்வோஸா பற்றியும், வலுக்கட்டாயமாக சாப்பிட்டு அல்லல் படுகிற புலுமியா நெர்வோஸா பற்றியும் எழுதியிருந்தேன். அதைப் படித்த சிலர் "ஸார், விரதம் அல்லது நோன்பு இருப்பது பற்றி ஒன்னுமே சொல்லவில்லையே? அப்படி சாப்பிடாமல் இருப்பது நல்லதா?" என்று கேட்டார்கள்.

'ஃபாஸ்டிங்' என்கிற பட்டினி இருத்தல் கண்டிப்பாக நல்லது தான். முதன்முதலில் உலகத்துக்கு மருத்துவத்தை அறிமுகப்படுத்தி வைத்த ஹிப்போக்ரட்ஸ் கூட, பல்வேறு நோய்களைத் தீர்ப்பதற்காக இப்படிப் பட்டினி கிடக்க வைத்திருக்கிறார். நம்முடைய இடத்தில் இந்த வார்த்தையை அழுத்தமாக மத நம்பிக்கைகளுடன் இணைத்து வைத்திருக்கிறார்கள். இதை அச்சத்திலாவது மக்கள் பட்டினி கிடப்பார்கள் என்பதற்காக வகுக்கப்பட்டிருக்கலாம்.

> **சாமிக்கு என்றால் ஒரு வேளைக்கு மேல் பட்டினி கிடக்காதீர்கள். வீட்டில் சண்டைக்கு என்றால் ஒரு நாளைக்கு மேல் பட்டினி கிடக்காதீர்கள். வீம்புக்கு என்றல் அதிகபட்சம் இரண்டு நாள்தான்.**

நோன்பில் பலவகை இருக்கின்றன. 'mono diet fast'ல் ஒரு வகையான உணவை மட்டுமே சாப்பிடுவார்கள். இன்னொன்று ட்ரைஃபாஸ்டிங். பட்டினி கிடப்பதாகச் சொல்கிறவர் ரஸ்க், உலர்பழம் என உலர் உணவு வகையை மட்டுமே சாப்பிடுவார். இது தவிர பழரச நோன்பு, ஹெர்பல் டீ நோன்பு என்றெல்லாம் இருக்கிறது. இதெல்லாம் பட்டினியா என்றால் என்னைப் பொறுத்தவரை இல்லை. 'கட்டுப்படுத்தப்பட்ட உணவு தினம்' மட்டுமே!

நிஜமான ஃபாஸ்டிங் என்பது, ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குத் தண்ணீர் தவிர வேறெதுவும் சாப்பிடாமல் இருப்பதுதான். இதை இப்போதெல்லாம் ஒரு மருத்துவ முறையாக செயல்படுத்தத் துவங்கியிருக்கிறார்கள்.

நம் உடலில் எண்ணூறு பில்லியன் செல்கள் தினமும் மாற்றப்படுகின்றன. குறைந்த

## வஸந்த் செந்தில்



பட்சமாக நம் உடல் செல்களில் நான்கில் ஒரு பங்கு இறக்கிறது அல்லது மூப்படை கிறது. இது தினமும் மாற்றப்பட வேண்டும். இப்படி நீக்கப்பட்டால்தான் புதிய திசுக்கள் உருவாக முடியும். புதியன வந்தால்தான் வளர்ச்சி. ஃபாஸ்டிங் இருக்கும்போது, பழையவை கழிவுப் பொருட்களாக சுல பத்தில் நீக்கப்படுகின்றன. இதை 'மெட் டாமார்போஸிஸ்' என்கிறார்கள்.

ஒருவேளைப் பட்டினி, ஓராயிரம் திசுக் களைப் புதுப்பிக்கிறது என்பதுதான் ஃபாஸ் டிங்கின் பலம். எத்தனை வேளை அல்லது எத்தனை நாளைக்குச் சாப்பிடாமல் பட் டினி கிடக்கலாம்?

இது பொதுவாக உடல் அமைப்பை யும், ஸ்டாமினா என்கிற உடலின் தாங் கும் சக்தியையும் பொறுத்தது. எனக்கு ஒரு மணி நேரம் சாப்பிடத் தாமதமானாலே தலை சுற்றி மயக்கம் வந்துவிடும். பரக்கப் பரக்க நாலு இட்லியைத் தள்ளினால்தான், இலேசாகக் கண் திறந்து பக்கத்திலிருப்பவர் பேசுவது காதில் கேட்கும். சிலர் சாப்பிட வேண்டும் என்கிற பிரக்ஞையே இல்லாமல் மணிக்கணக்கில் சீட்டாடுவதைப் பார்த் திருக்கிறேன். எப்போதுதான் இவர்களுக்குப் பசிக்கும் என்று பார்த்து விடுவது என்று நானும் காத்திருக்க, ஒன்றரை நாள் தாண்டி ஐம்பதாவது ஆட்டம் தொடரு வார்கள்.

பொதுவாக, தொடர்ந்து நான்கு நாட்கள் சாப்பிடாமல் இருப்பதை மருத்துவர்கள் 'லாங் - ஃபாஸ்ட்' என்கிறார்கள். இந்த நிலை வரும்போது, மருத்துவர்கள் தேவைப்படு வார்கள். யாராக இருந்தாலும் உடல் தாங் காது.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பட்டினியை உடைத்து விடுவது நல்லது. இல்லை யென்றால் முதலில் தலை வலிக்கும். பிறகு தூக்கம் போய்விடும். வாந்தி வருவது போன்ற உணர்வு, தலை சுற்றல், படபடப்பு, வெறுக் கத்தக்க உடல் நாற்றம், கால் வலி, தசைகள் வலி தொடர்ந்து வரும். பட்டினி கிடப்பது அதிகமாக அதிகமாக, இரத்த அழுத்தம் திடீரென்று குறைந்து, மயக்கம் வரும். மன சமநிலைக் குறைபாடு வரலாம். உடலில் திடீரென கழிவுகளின் கூட்டம் அதிகரித்து விடும். (யூரிக் அஸிட் போல) இதனால் சிலருக்குச் சட்டென்று கோமாகூட வரலாம்.

**சா**மிக்கு என்றால் ஒரு வேளைக்கு மேல் பட்டினி கிடக்காதீர்கள். வீட்டில் சண் டைக்கு என்றால் ஒரு நாளைக்கு மேல் பட் டினி கிடக்காதீர்கள். வீம்புக்கு என்றல் அதிகபட்சம் இரண்டு நாள்தான்.

யார் யார் பட்டினி கிடக்கக் கூடாது? தனுஷ் மாதிரி நண்பர்கள் பட்டினி கிடப் பது நல்லது இல்லை. ரம்பா, ஜோதிகா போன்றவர்கள் சற்று சமாளிக்கலாம். சரி யாகச் சாப்பிடாமல் உடல் சத்து குறைந்து, நசுங்கின கரப்பான் மாதிரி இருக்கிறவர்கள் பட்டினி கிடக்கக் கூடாது. கர்ப்பமாக இருக் கிற பெண்கள் பட்டினி கிடக்கக் கூடாது. இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்ற நீண்டநாள் நோய் இருக்கிறவர்கள், மற்றும் சிறுநீரகம் கெட்டு வேலை செய்யாமல் துன் பப்படுகிறவர்கள், கண்டிப்பாக பட்டினி கிடக்கக் கூடாது.

(தொடரும்)

''வாவ்...'' அலறினாள், சுமதி. காருக்குள் யமுனாவைப் பார்த்தவுடன்.

''எப்படி இருக்கு?'' கேட்டவாறே யமுனா கதவைத் திறந்துவிட்டாள். சுமதியின் கண்கள் விரிந்து போய் இருந்தது.

கண் கொட்டாமல் காரில் அமர்ந்து சொன்னாள். ''சூப்பர்ப். ஐ லைக் த கலர் ஆஃப் த ஜுவல்லரி - ப்ரவுனும் இல்லாம, ஓவர் ஷைனிங்கும் இல்லாம, பார்க்க gaudy ஆகவும் இல்லாம.... ம்.... குட்...''

''ஜிமிக்கி பார்த்தியா? Matching ஆ இருக்கில்ல?''

''ஆமாண்டி, ஸ்டோன்ஸ் கூட சோபரா, ரிச்சாக, இருக்கு... OK... எத்தனை பவுன் ஆகுது?''

''எத்தனை... பவுனா...? அடியேய்! TREND டச் விட்டுப் போயிருச்சா? இது 'SANGOLD' நகை.''

''ஹாங்... அப்படீன்னா...?''

''அரை கிராமிலிருந்து 2.... 3... கிராம் வரை.

# ''ப்ரவுனும் இல்லாம... ஓவர் ஷைனிங்கும் இல்லாம... பார்க்க GAUDY ஆகவும் இல்லாம...''

24 காரட் சொக்கத் தங்கத்தில், ஜெர்மன் டெக்னாலஜி யில் GOLDFORMING பண்ணியிருக்கிறாங்க. ஸ்வர்ணாலயா ஜுவல்லரியிலே மொத்த விலை FULL செட்டுக்கும் 2900 ரூபாதான். எண்ணூறு ரூபாயிலிருந்து இருக்கு. ரிசப்ஷன் செட்டுன்னே பேர்.''

''ஓ... இந்த 1 கிராம். ஜுவல்லரினு சொல்றாங்களே?''

''அதே தான் சுமதி. ஆனா, இந்த SANGOLD Brand தான் பெஸ்ட். எங்கம்மா 2001இல் ஸ்வர்ணாலயாவில் வாங்கிய 6 வளையல் செட் இன்னமும் மெருகு குலையாமல் ஜொலிக்குது.''

''வளையல்... அப்புறம்...?''

''வளையல், Antique Kada வளையல், குச்சி கெம்பு அகல வளை, கல் வளை, மெட்டி, கொலுசு, ஒட்டியாணம், Hip Chain, புடைவைக்கு புரூச், கொசுவப் பின், வங்கி, கீ செயின் -- எல்லாம் இப்ப மார்க்கெட்டில் அறிமுகப்படுத்தி யிருக்காங்க - Guaranty யோட...''

''யமுனா, இது GOLD தான். அசத்துதடி! இமிடேஷன் மாதிரி லுக்கே இல்லியே.''

''சுமதி இமிடேஷனுக்கும் இதுக்கும் சம்பந்தமேயில்லை. அம்மா 3ஆவது வருஷம் Daily - use பண்றாங்க. இமிடேஷன்னா, அது மாதிரி போட்டு அடிக்க முடியாது. நான் இப்ப கலாவோட ரிசப்ஷனுக்குத்தான் போறேன். நீ வரலியா?''

''இல்ல யமுனா.. வேலையிருக்கு. காலைல கல்யாணத்துக்குப் போவேன். ஆமா... என்ன வெங்கட் நாராயணா ரோடுல திரும்புற?''

''வா, வா. நீ வந்ததில்லியா ஸ்வர்ணாலயா வுக்கு?''

கார் ஸ்வர்ணாலயா ஜுவல்லரி வாசலில் நின்றது. செக்யூரிடி guard கார் கதவைத் திறந்துவிட்டார்.

''எப்படி... Self Drivingக்கு வசதியாக... உஸ்மான் ரோடில் நுழைஞ்சா அவ்ளோதான். என் மூடே அவுட்டாயிடும். உள்ள வா'' என்றபடி யமுனா சுமதியைக் கூட்டிக் கொண்டு ஜகஜ்ஜோதியாக ஜொலிக்கிற ஸ்வர்ணாலயா ஜுவல்லரிக்குள்ளே நுழைந்தாள்.

உள்ளே நிறுவன உரிமையாளர்கள் லலிதா சுகுமாரன் இரண்டு பேரும் எழுந்து ''வாங்க, வாங்க'' என்று சிரித்த முகத்துடன் கை கூப்பி வரவேற்றார்கள்.

''சுமதி... எப்படி ரிசப்ஷன்?'' என்று தோள் பக்கம் திரும்பி



கண் சிமிட்டினாள்.

''ம்ம்... எல்லாமே வித்யாசமா இருக்குடி! இவங்க மெயினா டயமண்ட், கோல்டு, வெள்ளி எல்லாம் விற்கிற ஜுவல்லரி என்று தெரியும்... SANGOLD...?'' இழுத்தாள் சுமதி.

''அதுவும் தான் வா.. இமிடேஷன் கடைக்குள் ஏற எனக்கு இஷ்டமில்லை. இது என்ன AMBIENCE, என்ன FEELING... அதுவும், இங்கே கிடைக்கிறது லக் தான் இல்லே?''


''ஆமா யமுனா... என்னடி இப்படி உபசரிக்கிறாங்க?''



திரு.சுகுமாரன்.

''சுகுமார் சார், லலிதா ஜுவல்லரியில் 15 வருஷம் M.D.யாய் இருந்தவர். அவரது ப்ளஸ் பாயிண்ட்டே அந்த உபசரிப்புதான்'' என்று யமுனா சொல்லவும், திரு. சுகுமார் பின்னால் வந்து நிற்கவும் சரியாயிருந்தது.

சிரித்துக் கொண்டே அவர் சொன்னார். "The Customer brought in by business is more important than the business brought in by the Customer, இல்லியா யமுனா? எப்டி இருக்கிறீங்க? அம்மா எப்படி இருக்கிறாங்க?'' நிழலாய் அருகில் வந்து நின்ற லலிதாவிடம் ''லலிதா... யமுனா'' என்றார். லலிதாவும்.... ''ம்ம். தெரியும். யமுனா... இவங்க?''



யமுனா : ''ஆன்ட்டி இது சுமதி! My best friend." "Hello! சுமதி எப்டி இருக்கிறீங்க? என்ன செய்றீங்க?''

"Hello! ஆன்டி நான் Tidel Parkல் வொர்க் பண்றேன். இவ உங்க ரெண்டு பேரையும் பற்றிச் சொல்லிகிட்டேயிருப்பா. ஐயாம் வெரி இம்ப்ரஸ்டு ஆன்டி. சார் பேசறதே Quotation மாதிரி இருக்கு'' என்றாள் சுமதி.

லலிதா : சுகுமாரன் ''அவங்க லிட்ரச்சர் GOLD-MEDALIST. காலேஜ்ல புரபசராயிருந்தவங்க.'' என்றார் பெருமிதப் புன்னகையுடன்.

சுமதி ''நீங்க ரெண்டு பேரும் SMILE பண்ணிகிட்டே இருப்பீங்களா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

சுகுமாரன் சொன்னார், "Why not Sumathy? A Smile Costs nothing, but does much. Mmm... U wear a nice salwar. Is it mauve colour?"

"Yea uncle. Thanks."

"Sumathy! Pay Compliments to 3 people in a day. Wherever U R, in the lift, in the lobby, At home .., u will be very popular very soon" என்று சிரித்தார் திரு. சுகுமாரன்.

யமுனா : ''சுமதி சொன்னேன்ல... நகைக்கடை மாதிரியே இல்லீல்ல?''

சுமதி : ''ஆமான்டி நான் இனிமே இங்கேதான் வருவேன். ஆன்ட்டி, Asmi டயமண்ட் கூட இருக்கில்ல? 1 கேரட்டில் 1 டயமன் நெக்லஸ் என்று advertisement கொடுத்திங்கல்ல?'' என்றவாறு டயமன் செக்‌ஷனுக்கு நகர்ந்தாள்.

திருமதி. லலிதா சொன்னார் ''ஆமாம்மா ஒரு காரட் டயமண்ட் நெக்லஸ் ரூ.45,000க்கும் ஏழுகல் டயமன் தோடு ரூ.19,750லிருந்தும், எங்கிட்ட இருக்கு. டயமன் GOLD வெள்ளி போக interesting gift items கூட நிறைய இருக்கு சுமதி''

"Like?"

"Like... Sangold Baby bangle, Kada 24 ct plated gods idols, Hipchain, imported Silver White Gold finish sets, Birthstones, Lucky Gems, Singing Ganesh idol, Divinity Gift Items, Photo-frames, Birthstone pen, ballpen sets, Tanjore Paintings (ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாய் வரை), Chinese Jars, Pooja Mantapam, Pooja மணை, ... இன்னும் பெரிய லிஸ்டே இருக்கு சுமதி.''

''My goodness அப்ப, Receptionக்கு dress பண்ணிட்டு இங்கு வந்து Gift வாங்கிட்டுப் போயிடலாம்'' என்றாள் சுமதி.

''என்னை மாதிரி..'' என்ற யமுனா ''வர்றோம் ஆன்ட்டி!'' என்று ரிசப்ஷனுக்கு வாங்கிய "Chinese pepper salt set" Gift-ஐ எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

கடை உரிமையாளர்களிலிருந்து Salesgirl வரை, "Bye" சொல்லி வழியனுப்பினார்கள்.

**கஸ்தூரி ராஜன்**


SWARNALAYA
Jewellery

5, Venkatnarayana Road,
T.Nagar, Chennai - 600 017
Tel : 52125353, 52125454,
Fax : 52124747 Mobile : 31020107
e-mail : asukumaran@eth.net
www.swarnalayajewellery.com

advt

# கோடி கோடி மின்னல்கள்

**9**

**வை**கையின் இருதய மையத்தில் ஸ்லோமோஷனில் இடி இறங்கியது போன்ற உணர்ச்சி.

"என்ன சொன்னீங்க... இளஞ்செழியனுக்கு ஆக்ஸிடெண்டா...?"

"பயப்படாதீங்க... மிஸ் வைகை...! பயப்படற அளவுக்கு எதுவும் இல்லை. உங்களை மீட் பண்றதுக்காக நானும் இளஞ்செழியனும் ஸ்கூட்டர்ல வேகமாக வந்துட்டிருந்தோம்... வடபழனி கங்கையம்மன் கோயில் வீதியில் வரும் போது, ஒரு குழந்தை குறுக்கால வரவும் இளஞ்செழியன் திடீர் பிரேக் போட, ஸ்கூட்டர் 'ஸ்கிட்'டாகிக் குப்புற விழுந்தது. பில்லியன்ல உட்கார்ந்துட்டிருந்த நான் தப்பிச்சுட்டேன். இளஞ்செழியனுக்கு மட்டும் கை கால்ல அடி. வலது கையில் ஒரு ஃபிராக்ச்சர்...! ஃபிராக்ச்சரும் சிவியரா இல்லை. பென்ஸில் லைன் ஃப்ராக்ச்சர் தான்...!" இளஞ்செழியனின் நண்பன் நவநீத கிருஷ்ணன் மறுமுனை டெலிபோனில் இயல்பான குரலில் சொல்லிக் கொண்டிருந்தாலும், வைகைக்குள் பதற்றம் அதிகரித்தது.

"எந்த ஹாஸ்பிடல்னு சொன்னீங்க...?"

"வடபழனியில் வாணி நர்ஸிங் ஹோம்."

"உடனே புறப்பட்டு வர்றோம்... எந்த வார்டு?"

> **எ... எ... என்னது... ஐ..ஸி யூனிட்டா...? இன்னும் ரெண்டு நாள்ல டிஸ்சார்ஜாகி வீட்டுக்குப் போகிற பேஷண்ட் அவர். நல்லாப் பார்த்துச் சொல்லுங்க...**



# ராஜேஷ்குமார்

**வா**ணி நர்ஸிங்ஹோமின் ரிசப்ஷன் கவுண்டரில் ஆர்த்தோ வார்டு எந்த மாடியில் என்று விசாரித்துக் கொண்டிருந்த போது, அந்த இளைஞன் பக்கத்தில் வந்து நின்றான்.

''மிஸ் வைகை... நான் நவநீத கிருஷ்ணன்...''

வைகையும் அர்ச்சனாவும் திரும்பினார்கள். நெற்றியிலும் முழங்கையிலும் இரண்டு பிளாஸ்டர்கள் பெருக்கல் குறி போட்டிருக்க, அந்த இளைஞன் புன்னகை செய்தான்.

''சீரியஸா எதுவும் இல்லையே...?''

''நோ... நோ...! நீங்களே வந்து பாருங்க... கையில் மாவுக்கட்டு போட்டுக்கிட்டு ஃபேஷன் டி.வி. பார்த்துட்டிருக்கான். ரெண்டு மூணு நாள்ல வீட்டுக்குப் போயிடலாம்னு டாக்டர் சொல்லிட்டார்.''

ஆர்த்தோ வார்டின் முதல் அறையிலேயே கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்திருந்த இளஞ்செழியன் பார்வைக்குக் கிடைத்தான்.

வைகையைப் பார்த்ததும் டி.வி.யை அணைத்து விட்டுப் புன்னகை செய்தான் இளஞ்செழியன்.

''நல்லவேளை... தலையில் அடிபடலை...''

''பட்டிருந்தாலும் எனக்கு எந்த பாதிப்பும் இருந்திருக்காது மிஸ் அர்ச்சனா...''

''ஏன்...?''

''எனக்குத்தான் மூளையே இல்லையே...''

அர்ச்சனா சிரித்தாள். வைகை சிரிக்காமல் இளஞ்செழியனை முறைத்தாள்.

''என்ன...? ஜோக்கடிச்சு பேசிட்டிருக்கிறதா நினைப்பா...? நானும் கொஞ்ச



நாளா உங்களை வாட்ச் பண்ணிட்டுத் தான் வர்றேன்... நீங்க டூ வீலரை ரொம்பவும் வேகமா ஓட்றீங்க...?"

நவநீதகிருஷ்ணன் குறுக்கிட்டான். "கரெக்டா சொன்னீங்க வைகை. நானும் எத்தனையோ தடவை படிச்சுப் படிச்சு சொல்லிட்டேன். அவன் கையில எந்த டூ-வீலர் கிடைச்சாலும், அது ஹரிகோட்டா ராக்கெட்தான். இன்னிக்குக் காலையில் உங்க மேட்டர் விஷயமா சாஸ்திரி பவனுக்குப் போகும் போது, அடையார் சிக்னலுக்குப் பக்கத்தில் ஒரு அம்பாஸிடர் காரில் மோதியிருக்க வேண்டியவன், எப்படியோ தப்பிச்சுட்டான்..."

"நான் ஒழுங்காத்தான் போனேன்... அந்த அம்பாஸிடர் கார்காரன்தான் ராங் சைடில் வந்தான்."

வைகை குழப்ப முகத்தோடு அவனை கையமர்த்தினாள்.

"வெயிட்... வெயிட்... என்னோட மேட்டர் விஷயமா சாஸ்திரிபவனுக்குப் போனீங்களா...?"

"ஆமா..."

"எ... என்ன மேட்டர் அது...?"

"அது... அது... வந்து... 'மஹிளா உன்னதி'க்காக"

"மஹிளா உன்னதியா...? அப்படீன்னா...!"

"அது ஒரு அவார்டுங்க வைகை...! மத்திய அரசு கொடுக்கிறது. அந்த விருதுக்குப் பேரு 'மஹிளா உன்னதி' 'பெண்களில் உன்னதமானவள்'ன்னு அர்த்தம்... அந்த விருதுக்கு 'மெட்டியோசை' சார்பா, உங்களைச் சிபாரிசு பண்ணத்தான் சாஸ்திரி பவனுக்குப் போய், அங்குள்ள ஹ்யூமன் வெல்ஃபேர் சேர்மனைப் பார்த்தேன். உங்களைப் பத்தின எல்லா டீடெய்ல்ஸும் ஃபேக்ஸ் மூலமா டெல்லிக்குப் போயாச்சு."

"இதெல்லாம் தேவையா இளஞ்செழியன்...?"

"வைகை! சத்தம் இல்லாமே நீங்க சோஷியல் ஒர்க் பண்ணிட்டு வர்றீங்க. வீட்ல ஆயிரத்தெட்டு பிரச்னைகள் இருந்தாலும், அதையெல்லாம் ஓரமாய்த் தள்ளி வெச்சுட்டு, இதுவரைக்கும் ஆயிரம் பேருக்கு கவுன்ஸலிங் பண்ணி அவங்களையெல்லாம் தற்கொலை முயற்சிகளிலிருந்து காப்பாற்றி புது வாழ்க்கைக்குத் தயார் பண்ணியிருக்கீங்க. இதெல்லாம் வெளியுலகத்துக்குத் தெரிய வேண்டாமா...? இந்த மஹிளா உன்னதி விருது, பெண்களுக்குத் தரப்படுகிற விருதுகளில் மிகப் பெரிய விருது. அந்த விருது உங்களுக்குக் கிடைக்கணும். இந்தியா முழுவதற்கும் உங்க பெயர் தெரியணும்ன்னு விரும்பறேன்... அது தப்பா...?"

சீஃப் டாக்டர் பஞ்சாபகேசனும் இரண்டு உதவி டாக்டர்களும் உள்ளே வந்தார்கள்.

"ப்ளீஸ்... எல்லோரும் அஞ்சு நிமிஷம் வெளியே போய் இருங்க."

வைகையும் அர்ச்சனாவும் வெளியே வந்தார்கள். அர்ச்சனா வைகையின் கையை மிருதுவாய்ப் பற்றினாள்.

"ஸாரி வைகை..."

"எதுக்கு ஸாரி...?"

"உன்னுடைய காதலையும் இளஞ்செழியனையும் அண்டர் எஸ்டிமேட் பண்ணனதுக்காக..."

"இப்ப என்ன சொல்றே...?"

"இந்த ஒரு இளஞ்செழியனுக்கு ஆயிரம் ஆதித்யாக்கள் சமம்..."

"இன்னொரு தடவை சத்தம் போட்டுச் சொல்லு..."

**நா**ட்கள் நான்கு கரைந்து போயிருக்க அன்றைக்கு சனிக்கிழமை. மத்தியானம் மூன்று மணி.

அர்ச்சனா அரைநாள் விடுப்பில் வீட்டுக்குப் போயிருக்க, வைகை மட்டும் தனி



## 'தலை'யாய கௌரவம்!

**ஏ**வி.எம். நிறுவனம் தனது புதிய தயாரிப்பான 'பேரழகன்' படச் செய்தியை, பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்தது. சூர்யா - ஹீரோ, ஜோதிகா ஹீரோயின், இரண்டு பேருக்குமே இரட்டை வேஷம், யுவன் சங்கர்ராஜா இசையில், சசி சங்கர் இயக்குகிறார், போன்ற பழைய செய்தி



களுடன் இன்னொரு புதிய செய்தியும் கிடைத்தது. அமரர் ஏவி மெய்யப்ப செட்டியாரின் படத்தை தபால் தலையாக ஆஸ்திரேலிய நாட்டுத் தபால் துறை வெளியிட்டிருக்கிறது. ஓர் இந்தியத் திரைப் படத் தயாரிப்பாளரின் புகைப்படத்தை, அஞ்சல் தலையாக ஆஸ்திரேலியா வெளியிட்டிருப்பது இதுவே முதல் முறையாம்!

- டாலி

யாகக் கம்ப்யூட்டருக்கு முன்பாய் உட்கார்ந்து அக்கௌண்ட் ஸ்டேட்மெண்ட்களை பிரிண்ட் அவுட் எடுத்துக் கொண்டிருந்தாள்.

பின்பக்கம் ஷூ சத்தம் கேட்டது.

திரும்பினாள்.

சீஃப் டாக்டர் சர்வேஸ்வரன்.

''டா.. டாக்டர்...'' நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு எழுந்தாள்.

"நாளைக்கு சண்டே... உனக்கு வேற ஏதாவது என்கேஜ்மெண்ட்ஸ் இருக்காம்மா...?''

வைகைக்கு வாணி நர்சிங்ஹோமில் இருக்கும் இளஞ்செழியனைப் பார்க்கப் போக வேண்டியிருந்தாலும், அதைப் பற்றிச் சொல்லாமல், இல்லை என்பது போல் தலையாட்டினாள்.

"எந்த என்கேஜ்மெண்ட்டும் இல்லை டாக்டர்..''

''அப்படீன்னா... நாளைக்குச் சாயந்திரம் ஆறரை மணி சுமாருக்கு நம்ம பங்களாவுக்கு வந்துடும்மா... ஆதித்யாவுக்கு கல்யாண நிச்சயதார்த்தம்.''

"ரொம்ப சந்தோஷம் டாக்டர்...''

''ஹைகோர்ட் சீஃப் ஜஸ்டிஸோட பொண்ணு. பேரு ஸ்வர்ணா. ஆதித்யாவுக்கும் பொண்ணைப் பிடிச்சிருந்ததால உடனடியா நிச்சயதார்த்தம். கல்யாணம் இந்த மாசக் கடைசியில் இருபத்து மூணாம் தேதி. மண்டபம் கூட ஃபிக்ஸ் பண்ணியாச்சு... ராகவேந்திரா கல்யாண மண்டபம். கல்யாணம் முடிஞ்ச அடுத்த நாளே, ஆதித்யாவும் மருமகளும் கலிபோர்னியாவுக்குப் புறப்பட்டுப் போயிடறாங்க.''

"கேட்கவே ரொம்பவும் சந்தோஷமாயிருக்கு டாக்டர்.''

"நீ கண்டிப்பா நிச்சயதார்த்தத்துக்கு வரணும். ஆதித்யா உன்கிட்டே ஸ்பெஷலா சொல்லச் சொன்னான்.''

''வர்றேன் டாக்டர்...''

''ஹாஸ்பிடல்ல வேற யாருக்கும் அழைப்பில்லை. உனக்கு மட்டும்தான்...''

"தேங்க்யூ வெரிமச் டாக்டர்.''

டாக்டர் தலையசைப்போடு புறப்பட்டுப் போய் விட, வைகை நிம்மதிப் பெருமூச்சொன்றை வெளியேற்றி விட்டு, நாற்காலியில் சாய்ந்து செல்போனை எடுத்துக் கொண்டு வாணி நர்சிங் ஹோமைத் தொடர்பு கொண்டாள்.

''மிஸ்டர் இளஞ்செழியன்.. பேஷண்ட்... ஆர்த்தோ வார்டு. ரூம் நெம்பர் ஃபோர்.''

"ஒன் மினிட்...''

வைகை காத்திருந்தாள். மனசு முழுக்க சந்தோஷம் புகை போல் பரவியிருந்தது.

இரண்டு நிமிஷ நிசப்தத்துக்குப் பிறகு அந்த ரிசப்ஷனிஸ்டின் குரல் கேட்டது.

''பேஷண்ட் பேர் என்ன சொன்னீங்க... இளஞ்செழியனா...?''

''ஆமா...''

''அவர் இப்போ ஐ.ஸி.யூனிட்ல இருக்காரே?''

"எ... எ... என்னது... ஐ..ஸி யூனிட்டா...? இன்னும் இரண்டு நாள்ல டிஸ்சார்ஜாகி வீட்டுக்குப் போகிற பேஷண்ட் அவர். நல்லாப் பார்த்துச் சொல்லுங்க...''

"இதோ! பக்கத்துல ஸ்டாஃப் நர்ஸ் இருக்காங்க. நீங்களே பேசிக்குங்க...''

வைகை தவிப்போடு காத்திருக்க, அந்த ஸ்டாஃப் நர்ஸின் குரல் கேட்டது.

"நீங்க சொல்ற பேஷண்ட் இளஞ்செழியன் ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி வரை நல்லாத்தான் இருந்தார். சிரிச்சுப் பேசிக்கிட்டுத்தான் இருந்தார். திடீர்னு...''

"திடீர்னு...?''

''ரத்தமா வாந்தி எடுத்தார். டாக்டர் வந்து பார்க்கிறதுக்குள்ளே கொலாப்ஸ் ஆயிட்டார். ஐ.ஸி.யூ.க்கு கொண்டு போயிருக்காங்க...''

(தொடரும்)

# வட்டமேஜை




## சிக்கினால் சிக்கல்தான்!

✉ வாக்குப்பெட்டியின் பக்கங்களை ஆக்கிரமித்துள்ள நம்ம அரசியல்வாதிகள்... தலையில் துண்டுடன் விதியே என்று கை வைத்துள்ள வாக்காளர்... 'தேர்தல் ஸ்பெஷல்-1' அட்டைப்படம் அசத்தல்!
போடிநாயக்கனூர்,
எஸ்.எம். பாலசுப்ரமணியன்.

✉ முப்பத்தொரு புதுமுகங்கள் குறித்த தலையங்கம் வித்தியாசமான பார்வையில் இருந்தது. வாக்காளர்களின் தேர்வுக்கு உதவுவதுடன், எதிர்க்கட்சிகளின் பிரசாரத்துக்கும் பயன்படும். மொத்தத்தில் தேர்தல் (ஸ்பெஷல் - 1) சூடு பிடித்துவிட்டது.
கோவை - 30, எஸ். சுந்தரேசன்.

✉ ஒரு சாதாரண அ.தி.மு.க தொண்டருக்காக ஒரு பக்கம் ஒதுக்கி, ஐயோ-டேட்டா - சாரி பயோடேட்டா தந்த உமது பெருந்தன்மையை எண்ணி பெருமைப் பட்டுப் போனேன்!
கும்பகோணம்,
புலவர் எஸ்.கே. மூர்த்தி.

✉ கலைஞரைக் கடுமையாக விமர்சனம் செய்வதையே தொழிலாகக் கொண்ட 'துக்ளக்' இதழின் உதவி ஆசிரியரை வைத்து, கலைஞருக்கு மார்க் போடச் செய்த தங்கள் நடுநிலை(?) பாராட்டுக்குரியது. இதே போல ஜெயலலிதாவுக்கு, நக்கீரன் கோபாலை வைத்து மார்க் போடச் செய்து, இன்னொரு வழக்கில் சிக்கிக் கொள்ள வேண்டாம் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.
சென்னை - 78, பா. லோகநாதன்.

✉ வைகோ - இந்தத் தேர்தலில் போட்டியிடாததற்கான காரணத்தை, 'கல்கி' மட்டுமே தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளது!
மதுரை - 9,
இரா. கல்யாணசுந்தரம்.

✉ 'ஆட்டோகிராஃப்' படத்தைத் தூக்கி நிறுத்துவதே கமலாவாக வரும் மல்லிகாதான். கோபிகா, சினேகா படங்களை வெளியிட்டு, மல்லிகாவை இருட்டடிப்புச் செய்த உம்மை வன்மையாகக் கண்டிக்கிறேன்.
திருவாரூர், எஸ். பாலச்சந்தர்.

✉ 'இந்தியா ஒளிர்கிறதோ' இல்லையோ! கல்கி 'மினி கல்கி'யை வழங்கி நிரம்பத்தான் மிளிர்கிறது. வாராவாரம் புதுப்புது விஷயங்களை வாரி வழங்கி, வாசகன் மனத்தில் வளர்கிறது. வாசகனின் உள்ளத்தில் மகிழ்ச்சியும் பாராட்டும் துளிர்க்கிறது.
சென்னை - 92, குவளை எழில்.

✉ 'ஜிம்' பற்றிய மினி கல்கி, 'ஜம்' என்று இருந்தது!
வேலூர் - 6, வே.ந. கதிர்வேல்.

✉ 'போணியாவாரா சோனியா?' என்ற தலைப்பில் கௌசி எழுதிய கட்டுரை படித்து மனம் நொந்தது. பாரம்பரியம் படைத்த ஒரு தேசியக் கட்சியின் தலைவியை, பாராளுமன்றத்தில் பலம் வாய்ந்த எதிர்க்கட்சி முதல்வியை, தியாகத்தில் புடம் போட்ட நேரு பரம்பரையின் பெண்மணியை, வரப் போகும் தேர்தலுக்கு முன்னதாக இவ்வாறு தலைப்பிட்டு எழுதுவது, அரசியல் நாகரிகம் ஆகாது.
சென்னை - 91, ஆ. கிருஷ்ணன்.

# மன்னிப்பு

சேவியர்



நான்
கேட்டிருக்க வேண்டும்
மன்னிப்பு.

நீ கேட்டால் என்னவாம்
என்று தான்
நேற்று வரை இருந்தேன்.

நீயும்
அப்படித் தான் இருந்தாய்
என்பதைக்
காலம் உணர்த்தியபோது.

மன்னிப்புக் கேட்பது
தோல்வியல்ல
ஒருவித வெற்றி என்பதை
காயம் உணர்த்திய போது.

நீயும் நானும் உதிர்த்த
மௌனம்
பாறையாய் இறுகி
இடையே சில
வருடங்களை இறுக்கி
நம்மை
இரு பக்கமாய் நிறுத்தி இருந்தது.

நினைவுகள்
கட்டி அணைத்துக் கொள்ள
நிகழ்வுகள்
தனித் தனியே
மெய் வருத்தி நடக்கிறது.

கோரப்படாத
மன்னிப்பின்
தண்டனையாய்.






# தண்ணீர் கலக்காத பால்!

சுவடுகள். ஆசிரியர்: திருப்பூர் கிருஷ்ணன். வெளியீடு: திருப்பூர் குமரன் பதிப்பகம், 57-பி, பத்மாவதி நகர், விருகம்பாக்கம், சென்னை - 600 092. விலை ரூ. 200/-

'அனுபவத்தைப் போன்ற ஆசான் வேறில்லை. ஆனால் கட்டணம் அதிகம்' என்று சொல்வதுண்டு.

அந்த ஆசானிடம் தாம் பெற்றவற்றைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார் திருப்பூர் கிருஷ்ணன்.

ஓர் எழுத்தாளன் பெறும் அனுபவங்கள் கற்பனை கலந்து கதைகளாகவும், நாவல்களாகவும் மாறுகின்றன. ஒரு பத்திரிகையாளனின் அனுபவங்களோ, கட்டுரைகளாகின்றன, கற்பனை கலக்காமல். அத்தகைய கட்டுரைகள் இவை.

ஒரே வாக்கியத்தைப் பலமுறை சொல்லும் புலவர் கீரனின் பழக்கத்தைச் சுட்டிக் காட்டி, அவரது கோபத்திற்கு ஆளானதும், பின்னர் அந்த விமர்சனம் சரியே என்று நாடோடியின் விளக்கத்தைக் கொண்டு கீரனுக்குப் புரிய வைத்ததும், 'சுவடுகளை' ஆரம்பத்திலேயே களை கட்ட வைக்கின்றன.

கிருஷ்ணனுக்குக் கிடைத்த நகைச்சுவை அனுபவங்களுக்கும் பஞ்சமில்லை.

பெரியவர் ஏ.என்.சிவராமன் வார இதழ்ப் பகுதிக்கு வந்து "நீங்களெல்லாம் வீக்லி" என்று சொல்லிவிட்டு, தொடர்ந்து "ஆனால் நாங்களெல்லாம் ஸ்ட்ராங்லி" என்று தமது துறையான நாளிதழைத் தூக்கி வைத்துப் பேசியதாகட்டும் - "ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று டாக்டர் அறிவுறுத்தியபோது, "ஐ டேக் ரெஸ்ட் அண்ட் லீவ் த ரெஸ்ட் டு யூ" என்று கி.வா.ஜ. ஆங்கிலத்தில் அடித்த சிலேடையாகட்டும் - பிள்ளையார் கோயிலில் 'விக்கின விநாயகர்' என்று எழுதியிருந்த இடத்திலிருந்த விநாயகரைக் காட்டி, அர்ச்சகரிடம் "இவருக்கு நிறையத் தண்ணீர் நிவேதனம் செய்யுங்கள்" என்று தூமிலனிடமிருந்து வந்து விழுந்த 'ஜோக்'காகட்டும் - இயல்பான நகைச்சுவையின் இயல்பைக் காட்டுகின்றன.

'...வல்லிக்கண்ணனைப் பார்க்கும்போது ஒல்லிக் கண்ணனாக...'

'இடது கையால் ஓவியம் வரையும் கோபுலுவைப் பார்ப்பதற்கு முன், அவரது வலது கரத்தைப் (அவர் மனைவி) பார்த்தேன்!

இப்படிப் பல இடங்கள் ரசனைக்குரியன.

தண்ணீர் கலக்காத பால் மாதிரி, பொய் கலக்காமல் இந்தக் கட்டுரைகள். தாளும் அச்சும் தரம்.

'கல்கி'யில் தொடராக வந்த 'சுவடுகள்' நெஞ்சில் அழுத்தமாகப் பதிகின்றன. இருநூறு ரூபாய் விலை. சற்று அதிகமோ என்று தோன்றக் கூடாது.

அனுபவ ஆசானின் கட்டணம் சற்று அதிகமாகத்தான் இருக்கும்.

- ராணிமைந்தன்



# திருவரசு புத்தக நிலையம்

## புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| அருள் தரும் அபிராமி - கோ. செல்வம் | 100.00 |
| காஞ்சி மகாசுவாமிகளிடம் கிடைத்த அநுபவ அமுதம் - - தொகுப்பாசிரியர் சர்ச்சில் பாண்டியன் | 45.00 |
| குரு (காஞ்சி மகா ஸ்வாமிகள் அருளுரைகளிலிருந்து தொகுக்கப் பெற்றது) | 50.00 |
| காலம் நம் கைகளில் - குமுதம் ஜோதிட ஆசிரியர் ஏ.எம். ராஜகோபாலன் | 100.00 |
| அருள் தரும் ஆதி பராசக்தி - முருகன் பாடல்கள் - கவிஞர் ம. அரங்கநாதன் | 60.00 |
| முருகன் அல்லது அழகு - திரு.வி.க. | 40.00 |
| தவமுதல்வர் சம்பந்தர் (தலயாத்திரைப் படங்களுடன் ஆய்வு நூல்) - வித்வான் மா. சிவகுருநாதப் பிள்ளை | 100.00 |
| கடவுளைக் காணலாம் வாரீர்! - பேராசிரியர் கே. காசிம் | 30.00 |
| நெஞ்சை நெகிழவைக்கும் நிகழ்ச்சிகள் - ஆர். சீனிவாச மூர்த்தி | 45.00 |
| அறிவியல் சிந்தனைகள் - நெல்லை சு. முத்து | 50.00 |
| அறிவுக்கு விருந்து - ஆர். ஜெகந்நாதன் | 80.00 |
| உங்களுக்குத் தெரியுமா உங்களை? - ஜி.எஸ்.எஸ். | 65.00 |
| சீரடி சாய் பகவான் வரலாறு (படங்களுடன்) - சு. லலிதாம்பாள் | 60.00 |
| தேசியக் கொடியும் தியாக சீலர்களும் - ஜி. லட்சுமி நாராயணன் | 70.00 |
| பாரதி நவ கதைகள் - புலவர் தமிழ் முடி | 30.00 |
| நன்னெறி நற்கதைகள் - பொன். பரமகுரு | 30.00 |
| முத்துலிங்கம் கவிதைகள் - கவிஞர் முத்துலிங்கம் | 90.00 |
| அரங்கேறி வருகின்ற அன்னப் பறவைகள் (கவிதைகள்) - கவிஞர் பொன்னடியான் | 100.00 |
| அற்புத அறிவியல் - கண்ணாடி ராஜேந்திரன் | 30.00 |
| கண்களைப் பாதுகாக்க இயற்கை வைத்தியம் - பி.சி. கருணாகரன் | 25.00 |
| புத்தர் போதித்த தியானம் - ஆசார்ய குலாகபாலா | 30.00 |

தேவையான புத்தகங்களுக்கு **THIRUVARASU PUTHAKA NILAYAM** என்ற பெயருக்கு *DD* அல்லது *MO* அனுப்புக. வி.பி.பி. மூலமும் பெறலாம். தபால் செலவு தனி.

விவரங்களுக்கு : **திருவரசு புத்தக நிலையம்**

23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை-17. போன் : 24342810, 24310769

திருவரசு புத்தக நிலையம்

எழுத்தாளர் வாஸந்தி அமெரிக்கா பற்றி பகிர்ந்து கொள்ளும் எண்ணங்கள் 'கல்கி' ஆன்லைனில் இடம் பெற்று வருகின்றன. சென்ற வாரக் குறிப்புகள் இங்கே சுருக்கமாகத் தொகுக்கப்பட்டுள்ளது.



# கள்ளிக்காட்டு இதிகாசம்!

**வாஸந்தி**

அரிஜோனா மாநிலத்துக்கு 'சூரியனின் பள்ளத்தாக்கு' என்று ஒரு காரணப் பெயர் உண்டு. அதுவே சுற்றுலாத்துறையின் விளம்பரமும் கூட. இது ஒரு பாலைவனப் பிரதேசம். ஆனால் வளம் கொழிக்கும் சோலையாக அதை மாற்றியிருப்பது, அமெரிக்கர்களின் சாமர்த்தியம். வெறும் கள்ளிக்காட்டுப் பாலையாக இருந்த இடம், இன்று அமெரிக்காவில் வசிப்பதற்குத் தலை சிறந்த இடம் என்ற பாராட்டைப் பெறும் அளவுக்கு மாறியிருக்கிறது. ஆனால் கள்ளிக்காடு அழியவில்லை. அழிப்பது சட்டப்படி குற்றம். பாலைவன பொட்டானிக்கல் கார்டன் என்று, வகை வகையான கள்ளிச் செடிகளும், கற்றாழைகளும் கொண்ட பிரம்மாண்டமான தோட்டம் ஒன்று இங்கு இருக்கிறது. கள்ளிச் செடிகளுக்கு இத்தனை அழகிருக்குமா என்று வியப்பை அளிக்கும் தோட்டம். இந்த ஊர் கள்ளிக்காட்டு இதிகாசத்தை யாரும் எழுதியிருப்பதாகத் தெரியவில்லை.


## ஓரினத் திருமணம்

மாஸாசூஸெட்ஸ் மாநிலத்தில், ஒரு நீதிபதி ஹோமோசெக்சுவல்ஸ்ஸும் லெஸ்பியன்ஸும் (இருவரையும் இங்கு பொதுவாக 'கே' என்கிறார்கள்) ஓரினத் திருமணம் வரும் மே மாதம் 17ம் தேதிக்குப்பிறகு சட்டப்படி செய்து கொள்ளலாம் என்று உத்தரவு போட்டாலும் போட்டார், அதுதான் சாக்கு என்று, ஸான்பிரான்ஸிஸ்கோ (வேறு மாநிலம்) மேயர் உடனடியாகவே 'கே' நபர்கள் தம் மாநிலத்தில் திருமணம் செய்து கொள்ள, தமது அலுவலகம் லைசென்சுகள் வழங்கும் என்ற சொல்லி விட்டார். தேசம் முழுவதிலிருந்தும், உடனே, 'கே' ஜோடிகள் ஆயிரக்கணக்கில் ஸான்பிரான்ஸிஸ்கோவுக்குப் படை எடுத்ததும்,

பரவசத்துடன் மோதிரம் மாற்றி மணம் செய்து கொண்டதும் நம்ப முடியாத அதிசயம். இது உலக சரித்திரத்தில் இடம் பெற வேண்டிய சமூகப் புரட்சியாக எனக்குப் படுகிறது.

கிட்டத்தட்ட மூவாயிரம் பேர் மூன்று நாட்களுக்குள் ஸான்பிரான்ஸிஸ்கோ ஸிடி ஹாலில் திருமணம் செய்து கொண்டதைப் பார்த்து, அமெரிக்காவின் பழைமைவாதிகள் அரண்டு விட்டார்கள். அடுத்த அதிபர் தேர்தலுக்குத் தயாராகும் அமெரிக்காவில், பழைமைவாதிகளின் நாயகனான அதிபர் புஷ், உடனடியாக அதை ஒரு தேர்தல் ஆயுதமாக்கிக் கொண்டார். 'கே' திருமணங்கள் கண்டனத்துக்கு உரியன என்றும், நாகரிக சமுதாயத்தைக் குலைப்பவை என்றும், மாநிலங்கள் தான்தோன்றித்தனமாகச் செயல்படுவதைத் தடுக்க, சாஸனத் திருத்தம் கொண்டு வர, விரும்புவதாகவும் சொன்னார். அவரை எதிர்க்கும் டெமொக்ராட்டுகள் ஓரினத் திருமணத்தை தாங்களும் ஒத்துக் கொள்ளவில்லை, ஆனால் அதற்கு மாநிலங்களின் சுதந்திரத்தைப் பறிக்கக் கூடிய சாஸனத் திருத்தம் தேவையில்லை என்றும் வாதாடுகிறார்கள்.

# அமெரிக்க டயரிக் குறிப்பு 2



## அமெரிக்க மக்களை வருத்தும் விஷயம்

அமெரிக்கப் பொருளாதாரம் மிக மிக மோசமாக இருக்கிறது என்று நான் சந்தித்தவர்கள் எல்லாம், ஏதோ சொல்லக் கூடாத விஷயத்தைச் சொல்ல வேண்டியிருப்பது போல, ரகசியக் குரலில் சொல்வது எனக்கு முதலில் வினோதமாக இருந்தது. அமெரிக்க மக்கள், சுபிட்சத்தையே கண்டவர்கள். உலகத்தின் சொர்க்க பூமியாக, மாபெரும் வல்லரசாக, நாமார்க்கும் குடியல்லோம் என்ற இறுமாப்புடன் வாழ்ந்தவர்கள். நமனாய் வந்த இரட்டை கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு, அச்சம் எல்லோரையும் பிடித்துக் கொண்டது. கூடவே பொருளாதாரத் தேக்கம், அதை இன்னும் மோசமாக்கும் ஈராக் போர், சந்தைச் சரிவால் பணி நீக்கங்கள் என்று ஏமாற்றங்கள் தொடர்கின்றன. ஆறு மில்லியன் பேர் வேலை இல்லாமல் இருப்பதால் வயிற்றெரிச்சல் ஏற்படுவது இயற்கை என்றாலும், இந்த மாற்றத்துக்குக் காரணம் இந்தியாவோ, இந்தியர்களோ இல்லை. அமெரிக்க கார்ப்பொரேட் கம்பெனிகளின் வியாபாரத் தந்திரம் அது. இன்டர்





"அண்டை நாடுகளை அச்சுறுத்தும் காரியம் ஒண்ணு பண்ணியிருக்காராமே நம்ம சேனாபதி, அது என்ன அமைச்சரே?"

"அரசியாரின் மெகா சைஸ் கட் அவுட்களை எல்லைப் பகுதியில் ஆங்காங்கே நிறுத்தியிருக்கிறார் மன்னா!"

- வசந்தி வள்ளுவன்

---

னெட் யுகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் வேலைக்கு ஆட்களை எடுக்க முடியும். அமெரிக்கர்களுக்குக் கொடுப்பதைவிட, குறைவான சம்பளத்திற்கு புத்திசாலி இந்தியர்களை வேலைக்கு அமர்த்துவது கம்பெனிகளுக்கு லாபமாக இருப்பதாலேயே இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று, அமெரிக்கர்களுக்குத் தெரியும்.

டெமொக்ராட்டுகள் ஆட்சிக்கு வந்தாலும், வேலைகள் வெளியில் செல்வதைத் தடுக்க முடியாது. ஒளிர்கிறது பாரதம் என்று நாம் பெருமிதம் பொங்க தொடர்ந்து பாடலாம்.

## பெருமை சேர்க்கும் இந்தியர்

நமக்கு உண்மையிலேயே பெருமிதம் சேர்க்கும் விதமாக சமீபத்தில் ஒரு செய்தியை, மிக பிரபலமான நாளேடான நியூயார்க் டைம்ஸில் பார்த்தேன்.

'பாம்பே ட்ரீம்ஸை'ப் பிரதானமாகப் பிரசுரித்து ஒரு முழுப் பத்தியில் ஏ.ஆர். ரஹ்மான் பற்றிப் புகழ்ந்து எழுதப்பட்டிருந்தது கண்டு, மிகவும் பெருமையாக இருந்தது.

'பாம்பே ட்ரீம்ஸ்' லண்டனில் ஆரம்பிப்பதற்கு முன் நியூயார்க் டைம்ஸுக்குப் பேட்டி அளித்த அதன் தயாரிப்பாளர் லாயிட் வெப்பர், ரஹ்மானின் சங்கீதம் இசை அரங்கத்திற்கு புதிய ஆடியன்ஸையும், புதிய உத்வேகத்தையும் கொடுக்கும் என்று நம்புவதாகச் சொல்லியிருக்கிறார். இந்திய இசையும், சினிமாவும், மேற்கில் பிரபலமாகி வருவதாக நாளேடு குறிப்பிட்டதற்கு, "ஒவ்வொரு கலாசாரத்திற்கும் அதன் காலம் வரும், இப்போது இந்தியாவிற்குக் காலம்" என்று ரஹ்மான் பதில் சொல்லியிருக்கிறார்.

## சாப்பாடுதான் பிரச்னை

அமெரிக்கர்கள் சகட்டு மேனிக்கு சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்கள். அதுவும் 'ஜங்க் ஃபுட்' என்ற அதிகக் கொழுப்பும், மாவுச் சத்தும் கொண்ட உணவைத் தின்று தின்று, ஊட்டமான பாலையும் வெண்ணெயையும் விழுங்கி, திமு திமு என்று உடம்பை வளர்த்ததில், ஒரு தலைமுறையே குண்டர் தலைமுறையாக எனக்குத் தோன்றுகிறது. குண்டு என்றால் எப்படிப்பட்ட குண்டு என்கிறீர்கள்! பார்க்கவே பரிதாபம் ஏற்படுத்தும் விகாரமான, ஆரோக்கியமற்ற எடை.

சில ஆண்டுகளாக டாக்டர் ஆட்கின்சனின் முறை பிரபலமாகி விட்டது. எண்ணெய்ப் பண்டங்கள்தான் உடம்பைப் பருக்க வைப்பது என்று எல்லோரும் சொல்வார்கள். அத்தனை பெரிய தியாகமே தேவையில்லை, எல்லாவற்றையும் நன்றாக மொசுக்கலாம், அதன் பின் எடையையும் குறைக்கலாம், என்றார் டாக்டர் ஆட்கின்சன்.

சுகாதார நிபுணர்களும் மருத்துவர்களும் அதை எதிர்த்து வந்தார்கள். ஆனால் ஆட்கின்சன் டயட் பலருக்கு மத நம்பிக்கை போல தீவிரமாயிற்று. சென்ற ஏப்ரல் மாதம் டாக்டர் ஆட்கின்சன் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார்.

அமெரிக்கப் பொருளாதாரத் தேக்கத்தை விட, முறையற்ற உணவு ஆபத்தானது.

(தொடரும்)

# "மோசம் பண்ணிட்டாங்க தலைவா!"



''நம்ம படத்துல ஹீரோ கிராமத்திலேருந்து சென்னைக்கு வர்றதை சிம்பாலிக்கா காட்டுறோம்.''

''எப்படி?''

''தண்ணீர் வாளியையும் பிளாஸ்டிக் குடத்தையும் மாற்றி மாற்றிக் காண்பிக்கப் போறோம்!''

- வி. கிருஷ்ண குமார்

''மோசம் பண்ணிட்டாங்க தலைவா!''

''யாரு? என்ன மோசம்? விபரமா சொல்லுங்க...''

''நம்ம கூட்டணியில் பேசி அஞ்சு இடம் வாங்கினவங்க, எதிர்க் கூட்டணியிலும் ஆறு இடம் வாங்கிட்டாங்களாம்!''





'''புள்ளிராஜாவுக்கு எய்ட்ஸ் வருமா' விளம்பரம் நாட்டையே கலக்கின மாதிரி, அதே பாணியில் இப்ப இன்னொரு அதிரடி விளம்பரம் தரப் போறோம்!''

''என்ன விளம்பரம் சார்?''

''பட்சிராஜாவுக்கு பேர்ட்ஸ் ஃப்ளு வருமா?''

- கேஜிஎஸ். கோவிந்தன்

''சமாதானக் கமிட்டின்னு நம்ம கட்சியில் புதுசா ஒரு கமிட்டி போட்டிருக்காங்களே! எதுக்கு!

''சீட் கிடைக்காதவங்களைச் சமாதானப் படுத்த!''

- பம்மல் நாகராஜன்



**எ**ன் குழந்தைகள் படிக்கிற ஸ்கூலில் பேரண்ட்ஸ் மீட்டிங் நடக்கும் போது, டீச்சர்களிடம் இங்கிலீஷில் பேச ஆசை.

குழந்தைகள் பாடத்தில் சந்தேகம் கேட்டால், ‘உங்க அப்பாகிட்ட போய் கேளுங்க’ன்னு சொல்லாம நானே இங்கிலீஷில் அவங்க டவுட்டை கிளியர் பண்ணணும்னு ஆசை.



போன்ல யாராவது இங்கிலீஷ்ல பேசினால், நானும் கம்பீரமா இங்கிலீஷில் பதில் சொல்லணும்னு ஆசை.

என் கணவரோட பார்ட்டிக்குப் போனால், அங்க வர்றவங்களுக்கு சமமா இங்கிலீஷில் பேசி அசத்தணும்னு ஆசை.

எங்க லேடீஸ் கிளப் மெம்பர்கள் மத்தியில் இங்கிலீஷில் பேசி எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தணும்னு ஆசை.

என் ஆசையெல்லாம் நிறைவேற சரளமா இங்கிலீஷ் பேசத் தெரியலையேன்னு நெனைச்சா வருத்தமாத்தான் இருக்கு. அதுக்கு என்ன பண்றது?

இது ஒரு பிரச்சனையே இல்லை.

ஒரு போஸ்ட் கார்டில், ‘நான் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர விரும்புகிறேன்’ என்று எழுதி, உங்கள் விலாசத்தை தெளிவாகக் குறிப்பிட்டு, விவேகானந்தா இன்ஸ்டிட்யூட், *P.B.No. R 4986*, 9 மேட்லி ரோடு, தி.நகர், சென்னை—600 017 என்ற முகவரிக்கு இன்றே அனுப்புங்கள்.

இல்லேன்னா *(044) 24347034* என்ற நம்பருக்குப் போன் பண்ணுங்க. ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸை *VPP* மூலம் அனுப்பி வைக்கிறோம். ரூ.575/– செலுத்தி பாடங்களை வாங்கி தினமும் அரை மணி நேரம் சீரியல் பார்க்க காட்ற அதே ஆர்வத்துடன் பயிற்சியை ஆரம்பியுங்கள். உங்கள் ஆசை நிச்சயம் நிறைவேறும்.

அப்புறமென்ன... நீங்களும் அசத்தலாய் இங்கிலீஷ் பேசி ஜமாய்க்கலாம்! ●

# ஆசை நிறைவேறுமா?

ADVT

மார்ச், 21-2004

# மினி கல்கி

கௌரவ ஆலோசகர்கள்...

ஓவியர் மருது

டாக்டர் கே.ஸ்ரீஸ்ரீதர்

டாக்டர் எஸ்.அசோக்

டாக்டர் எல்.மகாதேவன்

சவேரா ஹோட்டல்ஸ் நீனா ரெட்டி

வழக்கறிஞர் கே.சுமதி


டாக்டர் இரா.அன்புமணி

பேராசிரியர் கு.ஞானசம்பந்தம்

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்



## 'செல்'லே... செல்லமே!



“ஸார்.. செல்ஃபோன்லே பேசிக்கிட்டிருந்த என் மனைவி, திடீர்னு காணாமப் போயிட்டா...”

“கவலைப்படாதீங்க... கண்டுபிடிச்சுடலாம்...அடையாளம் சொல்லுங்க”

“ஸோனி எரிக்ஸன்... லேட்டஸ்ட் மாடல்.”

ஜோக்குதான்! ஆனால் நாட்டு நடப்பும் இப்படித்தானே ‘செல்லே... செல்லமே’னு இருக்கு!

உண்மையைச் சொன்னால், செல்லக் குழந்தையைவிட அதிகம் ‘தூக்கிக்’ கொஞ்சப்படுவது செல்போன்கள்தான். பெருகி வரும் விலைவாசிகளுக்கு நடுவே, விலைச் சரிவினால் மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் மிகச் சில சங்கதிகளில் செல்போனுக்குத்தான் தனி இடம்.




சாதாரணத் தொலைபேசி (லாண்ட் லைன்) என்பது இரண்டு ஒயர்களின்மூலம் தொலைபேசி இணைப்பகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் செல்ஃபோன் என்பது, ஒயர் இல்லாமலேயே ரேடியோ அலைக்கதிர்களால் இயங்குகிறது.

மிகவும் எளிமையான வேறுபாடுதான். ஆனால் ஒரு புறம் ரிலையன்ஸூம், மறுபுறம் பிற பெரும்பான்மையான செல் ஆப்பரேட்டர்களுமாக அணி திரள, நம்நாட்டில் செல்ஃபோன் களம் சிக்கலாகிக் கொண்டு வருகிறது. இப்படி

இவர்கள் இரண்டுபட்டதில் செல்ஃபோன் வாடிக்கையாளர்களுக்கு (வருங்கால வாடிக்கையாளர்களுக்கும்தான்) நிறைய ஆதாயங்கள்.

ஏன் இரண்டு படவேண்டும்? காரணம், இரண்டு வெவ்வேறான தொழில்நுட்பங்கள். ஏர்டெல், ரிலையன்ஸ், டாட்டா, ஆர்.பி.ஜி, பி.எஸ்.என்.எல். என்று பல செல்ஃபோன் நிறுவனங்கள் இன்று களத்தில் போட்டி போடுகின்றன. என்றாலும் GSM (Global System for Mobile Communication), CDMA (Code Division Multiple Access) ஆகிய இரண்டு தொழில் நுட்பங்களில் ஒன்றைத்தான் இவை தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளன. (விதிவிலக்குகள் பிறகு)

உலக அளவில் முதலில் அறிமுகமான CDMA தொழில்நுட் பத்தை முதலில் பார்ப்போம். அமெரிக்க ராணுவத்தினர் முதன் முதலில் பயன்படுத்திய தொழில் நுட்பம் இது.

ஒரே அலைவரிசையில், ஒரே சமயத்தில் பலர் இதில் பேசமுடியும். ஒவ்வொரு




சிக்னலுக்கும் ஒவ்வொரு சங்கேதக்குறி. இதனால் அதே சங்கேதக்குறி அமைந்த செல்ஃபோன் கொண்ட வாடிக்கையாளர் தான் இதைப் புரிந்து கொள்ள முடியும்.

இதை இப்படி எளிமையாக விளக்கலாம். ஒரு சின்ன அறை. அதில் நிறையப்பேர் விதவிதமான மொழிகளில் பேசுவதாக வைத்துக் கொள்வோம். எல்லா மொழியும் எல்லாருக்கும் தெரியாது. கேட்பவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒரு மொழிதான் தெரியும் என்றால் என்னவாகும்? தமக்குத் தெரிந்த மொழியில் பேசப்படும் பேச்சில் மட்டும்தான் அவர் கவனம் செலுத்துவார் இல்லையா? இதுபோலத்தான் CDMA தொழில்நுட்பமும்.

ஆனால் இதில் ஒரு சிக்கல் இருக்கிறது. என்னதான் ஒரு மொழி தெரிந்தாலும், ஏதோ மாட்டுச் சந்தை போல் எல்லோரும் கத்தினால் சரியாகக் கேட்க முடியாதே! இதுபோன்ற களேபரங்களைத் தடுப்பதற்காக, பிற சங்கேதக் குறிகளை அழிக்கவும் இந்தத் தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பாடுகள் உண்டு.

CDMAவில் பொதுவாக செல்ஃபோனைச் சுற்றியுள்ள 25



கிலோமீட்டர் தூரத்தில் உள்ளவர்களோடுதான் பேச முடியும்.

இந்தியாவில் அறிமுகமான முதல் தொழில்நுட்பம் GSM தான். இது மிகவும் குறுகலான 'பாண்ட்விட்த்'தைக் கொண்டது. ஒரு நேரத்தில் ஒரே ரேடியோ அலைவரிசையில், அதிக பட்சம் எட்டுப்பேர் மட்டுமே கேட்கமுடியும் என்கிற வகையில் வடிவமைக்கப்பட்டது.

உண்மையில் மொபைல் என்பது GSM தொழில் நுட்பத்தைத்தான் குறிக்க வேண்டும். ஏனென்றால், மற்றொரு தொழில் நுட்பத்தில் குறிப்பிட்ட தூரத்தைத் தாண்டினால் பேச முடியாதே.





GSM தொழில்நுட்பம் ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. CDMA தொழில்நுட்பம் அமெரிக்கா மற்றும் தென்கொரிய நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.


சென்னையைப் பொறுத்தவரை முதலில் அறிமுகமானவை ஆர்.பி.ஜியும் ஸ்கை செல்லும்தான். பிறகு ஹட்ச். சமீபத்தில் பி.எஸ்.என்.எல்.லின் எக்செல். இவைதான் GSM தொழில் நுட்பத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளவை.

## முன்னணி மவுசு

கிடைத்த தகவல்களின்படி சென்னையைப் பொறுத்தவரை ஏர்டெல் (ஸ்கை செல்லின் மாற்றப்பட்ட பெயர்) முன்னணியில் இருக்கிறது. ஆர்.பி.ஜி. இரண்டாமிடத்திலும், ஹட்ச் அதற்கு அடுத்த இடத்திலும். அறிமுகமான ஆறே மாதங்களில் பி.எஸ்.என்.எல்லின் செல் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியிருக்கிறது. இதற்கு முக்கியக் காரணம் மலிவான கட்டணமும், அரசு நிறுவனம் என்பதால் மறைமுகக் கட்டணங்கள் இருக்காது என்ற நம்பிக்கையும்தான்.

ரிலையன்ஸ் CDMA தொழில் நுட்பத்தில் மட்டுமே தடம் பதிக்க, இரண்டுவித தொழில் நுட்பங்களிலும் இறங்கியிருப்பவர்கள்

மினி கல்கி




டாட்டாவும், பி.எஸ்.என். எல்லும். பிஎஸ்என்எல்லில் CDMA தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட 'தரங்', மக்கள் மத்தியில் பிரபலமாகவில்லை. குறைவான டவர்களையே இந்த அமைப்பு உருவாக்கிக் கொண்டதும் ஒரு முக்கிய காரணம்.

சென்னையைப் பொறுத்தவரை டாட்டா நிறுவனம் CDMA (ரிலையன்ஸ் போலவே) தொழில்நுட்பத்தை மட்டுமே பயன்படுத்துகிறது. என்றாலும், மும்பையில் 'ஐடியா' என்ற பெயரில் GSM தொழில் நுட்பமும் பயன்படுத்தப்படுகிறது.

ரிலையன்ஸூம் டாட்டாவும் களத்தில் இறங்கியவுடன், செல்ஃபோன் உலகில் போட்டித் தீ பற்றிக் கொள்ளத் தொடங்கியது. ரிலையன்ஸ் விளம்பரம் செய்யத் தொடங்கியவுடனேயே, பிற செல் ஆப்பரேட்டர்கள் தங்கள் எஸ்டிடி கட்டணத்தைக் குறைத்துக் கொண்டனர். அடுத்த கட்டமாக "ஒரு செல்லிலிருந்து இன்னொரு செல்லுக்கு வரும் இன்கம்மிங் காலுக்குக் கட்டணம் இல்லை. வழக்கமான தொலைபேசியிலிருந்து வரும் இன்கம்மிங் கால்களுக்கும் குறைக்கப்பட்ட கட்டணம்" என்று சரசரவெனத் தங்கள் கட்டணங்களை சீரமைத்துக் கொண்டன. இதனாலெல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டவை ஏர்டெல், ஹட்ச், ஐடியா, ஆரஞ்ச், ஸ்பைஸ் ஆகிய நிறுவனங்கள். இவை இணைந்து ரிலையன்ஸுக்கு எதிராகப் பல வழக்குகளைத் தொடுத்தன.




TRAI எனப்படும் இந்திய தகவல் தொடர்பு சீரமைப்பு மையத்துக்கு, பகிரங்கக் கடிதங்களை தேசிய நாளிதழ்களில் கொடுத்தன. தகவல் தொடர்பு அமைச்சகத்தில் பரபரப்பான 'லாபியிங்' நடைபெற்றது.

GSM செல் ஆப்பரேட்டர்கள் எக்கச்சக்கமான லைசன்ஸ் கட்டணத்தை அரசுக்குக் கட்டியிருக்கிறார்கள். ஆனால் CDMA நிறுவனங்களோ, குறிப்பிட்ட இடங்களில் தாமே அங்கங்கே சேவையளிக்கிறோம் என்ற போர்வையில் குறைவான கட்டணங்களையே செலுத்தியிருக்கிறார்கள்.

(GSM)செல்போன் எண்கள் நீளமாகவும், CDMA செல்போன் எண்கள் குறைவான இலக்கங்கள் கொண்டதாகவும் இருப்பதைக் கவனித்திருப்பீர்களே?)

## எங்கிருந்தாலும் பேசுக!

செல்போன் வைத்திருப்பவரை அவர் எங்கிருந்தாலும் எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ள முடியும். சென்னையில் வாங்கப்பட்ட செல் இணைப்பைக் கொண்டு, பிற ஊர்களுக்குச் செல்லும் போதும் இதைப் பயன்படுத்தலாம். இதைத்தான் 'ரோமிங்' என்கிறார்கள். இந்த வசதிக்கு தனிக்கட்டணம் வாங்கவில்லையென்றால், அதை 'ரோமிங் ஃப்ரீ'என்கிறார்கள். ஆனால் எஸ்.டி.டி. கட்டணம் பெரும்பாலும் கட்ட வேண்டியிருக்கிறது.



செயற்கைக் கோளின் உதவியுடன்தான் ரோமிங் செய்ய முடியும். அதாவது செயற்கைக் கோளைப் பயன்படுத்துவதற்கான கட்டணத்தை GSM ஆப்பரேட்டர்கள்தான் செலுத்துகிறார்கள்.

பின் எப்படி CDMA தொழில்நுட்பத்தில் இயங்கும் ரிலையன்ஸால், ரோமிங் வசதியைத் தன் வாடிக்கையாளர்களுக்கு அளிக்க முடிகிறது? 'கால் ஃபார்வர்டிங்' என்ற உத்தியை இதற்குப் பயன்படுத்துகிறார்கள். (இந்த உத்தியை நமது வழக்கமான லாண்ட் லைனிலேயே பயன்படுத்திக்



கொள்ள முடியும். உங்கள் வீட்டில் ஒலிக்கும் தொலைபேசியின் ரிஸீவரை யாரும் எடுக்கவில்லையென்றால், அந்தக் கால் தானாகவே நீங்கள் குறிப்பிட்டுள்ள வேறொரு தொலைபேசி எண்ணைச் சென்றடையும். குடும்பத்தோடு வீட்டைப் பூட்டிக் கொண்டு, அடிக்கடி வெளியே சென்று வருபவர் என்றால் இந்த வசதி மிகவும் பயன்படும்) இப்படிப் பயன்படுத்தி ஒரு மொபைல் போன்ற தோற்றத்தை ரிலையன்ஸ் உருவாக்குவது தவறு, என்று பிற செல் ஆபரேட்டர்கள் வழக்குத் தொடுக்க, ரிலையன்ஸ் நிறுவனத்தின்மீது சில கோடி ரூபாய்கள் அபராதம் விதிக்கப் பட்டிருக்கிறது. என்றாலும் இந்த வசதியை ரிலையன்ஸ் தொடர்ந்து, தன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. விரைவில் இது குறித்து ஒரு சீரான கொள்கையை அமல்படுத்துவோம் என அறிவித்திருக்கிறது அரசு.

மேலே குறிப்பிட்டதைத் தவிரவும், இரு தொழில் நுட்பங்களுக்கிடையே சில வேறுபாடுகள் உண்டு.

## குறைகளும் நிறைகளும்

CDMAவில் சில குறைபாடுகள் உண்டு. இவற்றுக்கு உலக அளவில் குறைவான 'ரோமிங்' ஒப்பந்தங்கள்தான். சிம் கார்ட் கிடையாது என்பதால், ஏதாவது பெரும்பிரச்னை ஏற்பட்டால் ஹாண்ட் செட்டையே மாற்றும்படி நேரலாம்.



ஏற்கெனவே GSM வகை செல்லைப் பயன்படுத்துபவர்கள் மற்றொரு தொழில் நுட்பத்துக்கு மாறுவதற்குச் செலவு அதிகமாகும். புதிய ஹாண்ட் செட்டுக்கு சுமார் ஐயாயிரம் ரூபாய், செக்யூரிட்டி டெபா சிட்டுக்கு மூவாயிரம் ரூபாய் என்று தேவைப்படும்.




ஒரு குறிப்பிட்ட பான்ட் வித்தில் CDMA தொழில்நுட்பத்தில் மிக அதிக வாடிக்கையாளர்களைக் கூட இணைக்க முடியும் என்பது ஒரு சாதகம்.

கதிரியக்கத்தைப் பொறுத்த வரை CDMA வின் அளவு




GSMஐவிட மிகக் குறைவுதான். அதாவது பேசும் சமயத்தில் இந்தக் கதிர்கள் வெளியாகுமே தவிர, கேட்பவர்களை இந்தக் கதிர் பாதிக்காது.

## எது சீப்? ஏன் சீப்?

CDMA தொழில்நுட்பம்தான் சந்தேகமில்லாமல் சீப்பானது.

CDMA தொழில்நுட்பம் செயற்கைக் கோளைப் பயன்படுத்துவதில்லை. எனவே இவர்கள் அரசுக்குப் பெரிய அளவில் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை. எனவே குறைவான தொகை

மினி கல்கி

வசூலிக்கக் கட்டுப்படியாகிறது. இவர்களாகவே உருவாக்கிய சிக்னல் டவர்களின் மூலமாகத்தான் தகவல் தொடர்பு நடைபெறும்.

GSM தொழில் நுட்பத்தைக் கடைப் பிடிக்கும் பி.எஸ்.என்.எல்.லின் எக்ஸெல்லினால் எப்படி மலிவான கட்டணத்தை விதிக்க முடிகிறது? பிற நிறுவனங்கள் அரசின் தகவல் தொடர்புத்துறைக்கு (செயற்கைக்கோளைப் பயன்படுத்துவதற்காக) கணிசமான தொகை செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் அரசு நிறுவனமான பி.எஸ்.என்.எல்லுக்கு இந்தச் செலவு கிடையாது.

எந்த செல்ஃபோன் அதிகமாக பர்ஸைக் கடிக்காது என்பதோடு, வேறு சில விவரங்களையும் மனதில் கொள்வது அவசியம்.



## பேசு... என் அன்பே!

GSMவகை செல்களில் மட்டுமே ப்ரீபெய்ட், போஸ்ட் பெய்ட் என்று இரு வகை உள்ளன.

ப்ரீபெய்ட் பிரிவில், செல்போனை உபயோகப்படுத்துவதற்கு முன்பே கட்டணம் செலுத்த வேண்டும். இதற்கு முதலில் ஸ்டாட்டர் பேக் என்ற ஒன்றை வாங்க வேண்டும். இந்த வசதியைப் பயன்படுத்த 'சிம்கார்ட்' என்ற அட்டை கொடுக்கப்படும். செல்போனைப் பயன்படுத்தப்படுத்த, அதில் உள்ள 'டாக் வேல்யூ' குறைந்து கொண்டே வரும். குறிப்பிட்ட காலக்கெடு முடிந்தாலோ, இந்த டாக் வேல்யூ சூனியத்துக்கு வந்தாலோ, அதற்குமேல் பேசமுடியாது. அட்டையை ரீசார்ஜ் செய்ய வேண்டும்.



போஸ்ட் பெய்டில் செல்போனை உபயோகப்படுத்திவிட்டு, பில் வந்தபிறகு கட்டணம் செலுத்தலாம். (நமது வழக்கமான தொலைபேசி மாதிரிதான்.)

கொஞ்ச காலத்துக்குத் தான் வேண்டியிருக்கும் என்றால் ப்ரீபெய்ட் தான் உங்களுக்கு வசதி. உங்கள்



அம்மாவை மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள். அல்லது மகளுக்குத் திருமணம் நிச்சயமாகிவிட, பல இடங்களுக்கும் அலைந்து திரியவேண்டிய கட்டாயம். அல்லது ஒரு மாதத்துக்கு எங்கோ ஒரு தொலைதூர ஊருக்குச் செல்கிறீர்கள். இது போன்ற நிலையில் ப்ரீபெய்ட் வசதிதான் உங்களுக்கு ஏற்றது. கட்டணத்தைச் செலுத்தினால் போதும், வாடகை என்று தனியே செலுத்த வேண்டிய தேவையில்லை.

முதல் முறை மட்டும் சிம்கார்ட் வாங்கி செல்போனில் பொருத்திவிட்டால், அது தீர்ந்தவுடன் ரீசார்ஜ் செய்து கொள்ளலாம்.

போஸ்ட் பெய்ட் வசதியில் இந்தக் கார்டு தேவையில்லை என்பதால், ரீசார்ஜ் செய்து கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. மிக அதிகமான அளவில் செல்லைப் பயன்படுத்தக் கூடிய வியாபாரிகள் போன்ற தரப்பினருக்கு இது ஏற்றது.

ஒரே இடத்தில் வசிப்பவர் என்றால், CDMA தொழில்நுட்ப செல்போனை (அதாவது ரிலையன்ஸ், டாட்டா போன்றவை) வாங்குங்கள். பல இடங்களுக்கு மாறி மாறிச் செல்பவர் என்றால், GSMதான் ஏற்றது (செல்ஒன், ஏர்டெல், ஆர்.பி.ஜி. ஹட்ச்



# பேச்சு பலவிதம்

- அமரர் கல்கி

சில நாளைக்கு முன், பிராட்வே முனையில், சற்று நேரம் நான் நின்று கொண்டிருக்க நேரிட்டது. அங்கே என்னை ஒருவரும் உட்காரச் சொல்லவில்லையாதலாலும், வண்ணாரப்பேட்டை டிராம் வண்டியை நான் பிடிக்க வேண்டியிருந்ததாலும், அவ்வாறு நின்று கொண்டிருந்தேன். அங்கே என்னருகில் இன்னும் இரண்டு பேரும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் பின்வரும் சம்பாஷணை நடந்தது:

முதல் மனிதர்: ஏன் ஸார்! நீங்கள் எழும்பூர் டிராமுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறீர்களோ?

இரண்டாம் மனிதர்: ஆமாம்; அரை மணியாய்க் காத்துக் கொண்டிருக்கிறேன். அம்பட்டன் வாராவதிக்கு நூறு டிராம் போய்விட்டது; வஸ்ஸுக்கு ஒரு வண்டிகூட வரவில்லை. பஸ்ஸிலே போக வேண்டியதுதான் போலிருக்கிறது.

மு.மனிதர்: என்ன சொல்கிறீர்கள்? பஸ்காரன் அம்பட்டனைத் தேடிக் கொண்டா போயிருக்கிறான்? அவனுக்கு என்ன இன்றைக்கு க்ஷவரக் கல்யாணம் பண்ணிக்க உத்தேசமோ?

---

போன்றவை).

செல்போன் வசதியைப் பொறுத்தவரை இந்தியா பலவித மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாநிலங்கள் என்றில்லை. பெரு நகரங்கள் ஒவ்வொன்றும்கூட தனித்தனி மண்டலங்கள் தான்! இந்த நிலையில் சென்னையிலிருந்து செங்கல்பட்டுக்கு செல்லில் பேசினால் கூட, எஸ்டிடி. கட்டணம். (ஏர்டெல் 'ஒரே மாநிலத்தில் எங்கு பேசினாலும் ஒரே விதக் கட்டணம்தான்' என்ற சலுகையை அறிமுகப்படுத்தியிருக்கிறது.)

செல்போன் தேவையென்றால், முதலில் ஒரு வழக்கமான தொலைபேசியும் (லாண்ட்லைன்) இருக்க வேண்டும். அப்போதுதான் தனியாக செக்யூரிட்டி டெபாசிட் தேவைப்படாது.




## கவர்ச்சிகரமான வசதிகள்!

கூடுதல் வசதிகள் தேவையா? அதற்கேற்ற செல் ஆபரேட்டரையும், ஹாண்ட் ஸெட்டையும் தேர்ந்

இ.மனிதர்: என் பெண்ணுக்குத்தான் கல்யாணம்; டாக்டர் குருநாதனின் பிள்ளைக்கு நிச்சயம் செய்திருக்கிறது. அப்பா! என்ன சத்தம் இங்கே? தலைவலி வந்துவிடும் போலிருக்கிறது.

மு.மனிதர்: டாக்டருக்கே தலைவலி வந்து விட்டால் ஆபத்துத்தான். ஏதாவது மருந்து வாங்கிப் போட்டுப் பார்க்கிறதுதானே?

இ.மனிதர்: பார்க்காமலென்ன? அதுதான் அவ்வளவு ஸ்பஷ்டமாய் எழுதியிருக்கிறதே; "காங்கிரஸுக்கே வோட்டுக் கொடுங்கள்; சாதிக்கட்சியை ஒழியுங்கள்" என்று.

மு.மனிதர்: நான் ஒன்றும் சாதிக் கட்சி பேசவில்லை. மாசிலாமணிதான், "நாங்கள் எப்படியும் உங்களைவிட ஓசத்தி; தொண்டை மண்டலம் முதலியார் அல்லவா?" என்றான். எனக்குக் கோபம் வந்து விட்டது.

இ.மனிதர்: தொண்டையிலே புண்ணிருந்தால், கோபித்துக் கொண்டு என்ன செய்வது? ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்து தடவிக் கொள்ள வேண்டும்.

மு.மனிதர்: ஆஸ்பத்திரியில்தான் என் சம்சாரத்தை விட்டிருக்கிறேன். அவளைப் பார்க்கத்தான் அவசரமாய்ப் போகவேண்டும். இந்த 'நர்ஸு'கள் இருக்கிறார்களே, அவர்கள் சரியாய்க் கவனிப்பதேயில்லை.

இ.மனிதர்: நர்ஸுக்கென்ன கவலை? அவளா பிரசவிக்கப்



மினி கல்கி



போகிறாள்? இதை உத்தேசிக்கும்போது தான் கர்ப்பத்தடை அவசியம் என்று தோன்றுகிறது. ரமேசும் கூட அதுதான் சொல்கிறார்.

முமனிதர்: ஆமாம், ராமேசுவரம் போனால் குழந்தை பிறக்குமென்பதுதான் பிரசித்தியாயிற்றே. போன வருஷத்தில் எங்கள் அடுத்த வீட்டுச் சின்னசாமியும் அவர் சம்சாரமும் போய்வந்தார்கள். இந்த வருஷம் குழந்தை பிறந்தது.

இமனிதர்: பின்னே, வருஷம் பிறக்காமல் என்ன செய்யும்? பிறந்துதானே ஆகவேண்டும்? யுவ வருஷத்துக்கப்புறம், தாது வருஷமாம். தாது வருஷத்துப் பஞ்சம் எப்படியிருக்குமோ தெரியவில்லை. எல்லாரும் சாப்பாட்டுக்குத் திண்டாட வேண்டியதுதான்.

முமனிதர்: சாப்பாடு இறங்காவிட்டால், பலகாரமாய்ச் சாப்பிட்டு விடுங்களேன்; அதில் என்ன கஷ்டம்?

இமனிதர்: கஷ்டப்படாவிட்டால், குடும்பத்தை எப்படிக் காப்பாற்ற முடியும்? பூர்வ ஜன்மத்தில் பட்ட கடனைத் தீர்த்துத்தானே ஆகவேண்டும்?

முமனிதர்: ஐயோ! பாவம்! கடனில் ஒன்றுக்குப் பாதி கூடக் கொடுக்க முடியவில்லையா? செட்டி நாட்டில் யாரோ ஒருவர் கடன் மிஞ்சிப்போய்ப் பட்டினி கிடந்தாராம். வியாபாரத்தில்

---

தெடுங்கள்.

'ஹட்ச்' அறிமுகமானபோது பல கவர்ச்சிகரமான கூடுதல் வசதிகளை அறிவித்தது. கிரிக்கெட் போட்டி முடிவுகளிலிருந்து, தலைப்புச் செய்திகள் வரை, பல விவரங்களை இவர்களின் செல்போன் மூலமாக அறியமுடிந்தது.



எஸ்எம்எஸ். என்பதும் செல்லுலார் தொலைபேசி மூலம் நடத்தப்படும் தகவல் தொடர்புதான். ஆனால் பேச்சு கிடையாது. தட்டச்சு இயந்திரம் போல செல்லிலேயே தகவலை டைப் செய்து (ஒவ்வொரு எண்ணுக்கும் சில ஆங்கில எழுத்துக்கள் என்பதுபோல் சங்கேதக்குறிகள் உண்டு) அனுப்பலாம். இதன் பெரிய வசதி, குறைவான கட்டணம்தான். உலகின் எந்த மூலையிலிருந்து இப்படித் தகவல் அனுப்பினாலும், ஒரு முறைக்கு ஒரு ரூபாய்தான். அதிகபட்சம் ஒரு முறைக்கு இவ்வளவு எழுத்துகள்தான் என்ற கணக்கு உண்டு. ''தகவல் போய்ச் சேர்ந்தால்போதும்'' என்பவர்களுக்கு, இது சிறந்த முறை. தகவல்

நஷ்டம் போலிருக்கிறது. அதைவிட இன்ஸால்மெண்டு கொடுத் திருக்கலாம்.

இமனிதர்: ஓஹோ! உங்களுக்கு இன்ஸ்டால்மெண்ட் வியா பாரமோ? அதில் நல்ல வருமானம் போலிருக்கிறது. என்னுடைய சிநேகிதர் ஒருவர் ஹோட்டல் நடத்துகிறார். அத்துடன் அவர் இன்ஸ்டால்மெண்ட் தொழிலும் நடத்தி வருகிறார்.

இதற்குள் வண்ணாரப்பேட்டை டிராம் வந்து விட்டபடியால், மேற்படி ரஸமான சம்பாஷணையை நடுவில் விட்டு நான் போக வேண்டியதாயிற்று.

மேற்படி சம்பாஷணை முறை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அந்த முறையில், ஒருவர் சொல்வதை இன்னொருவர் கவனிக்க வேண்டிய அவசியமேயில்லை. ஒருவர் சொல்வதில் ஏதாவது ஒரு வார்த்தையை எடுத்துக் கொண்டு, இன்னொருவர் தனக் கிஷ்டமானதைப் பேசவேண்டியது. இந்த முறையில் மூளைக்குக் கொஞ்சம் கூட சிரமம் கிடையாதல்லவா?

தமிழ் நாட்டில் பிரசித்தி பெற்ற வடமொழி - தென்மொழிப் புலவர் ஒருவர் இருக்கிறார். அவர் பேசும்போதெல்லாம் இடை யிடையே, ''விளங்கிற்றா?'' ''புரிந்ததா?'', ''நான் சொல்றது அர்த்த மாச்சா?'' என்று கேட்டுக் கொண்டுதான் மேலே போவார். இது மட்டுமல்ல. ''இந்த விஷயம் வேறே யாராவது சொல்லி

போய்ச் சேர்ந்ததா என்பதும் தானாக உறுதி செய்யப்படுகிறது.



இன்று செல்ஃபோனில் என்னென்ன கூடுதல் வசதி களைப் பெற முடியும் என்பதை அடுக்கினால் மூச்சடைக் கும். நோக்கியா, மோட்டரோலா, சாம்சங், சோனி ஆகிய நிறுவனங்கள் செல்ஃபோன்களுக்கான கருவிகளைத் தயாரிக்கின்றன. சாட்டிங், படங்களுடன் கூடிய தகவல் கள், அலாரம் அடித்து சேவை, தகவல்கள் நினைவூட்டல், புகைப்படக் கருவி. விளையாட்டுகள், கால்குலேட்டர், ஸ்டாப்வாட்ச், காலண்டர், ஒரு நாட்டு நாணயத்திலிருந்து மற்றொரு நாயணத்துக்கு மாற்றம், போன்ற பல வசதிகளை அளித்து இவை வாடிக்கையா ளர்களை ஈர்க்கப்பார்க்கின்றன.

இந்தியத் தொலைத் தொடர்பு சீரமைப்பு மையம் (TRAI) சமீபத்தில் ஒரே மாதிரியான தொலைத் தொடர்பு லைசன்ஸ் அளிக்கப்படும் என்று அறிவிக்க, GSM ஆப்ப ரேட்டர்கள் கலங்கிப் போயிருக்கிறார்கள். அதாவது CDMA ஆப்பரேட்டர்கள், இனி சட்டபூர்வமாக

மினி கல்கி



யிருக்கிறார்களா?'' என்றும் கேட்டுக் கொள்வார்.


ஒரு சமயம் இப் புலவர் பெருமானுடன் சில நண்பர்கள் பேசிக் கொண்டிருந் தார்கள். ஏதோ பேசிக் கொண்டிருந்தவர் சட்டென்று நிறுத்தி, என் அருகிலிருந்த நண்பரைப் பார்த்து, ''அய்யாசாமிப் பிள்ளை! உங்களுக்கு அர்த்தமாச்சா?'' என்று வினவினார். நான் அந்த நண்பருடைய காதோடு ''உங்களுடைய கிரகிக்கும் திறமை யில் மட்டும் அவர்களுக்கு அவ்வளவு சந்தேகம் ஏன் வந்தது?'' என்று கேட்டேன். ''அப்படி இல்லை; இங்குள்ளவர்களில் அவர் சொன்னதைத் தெரிந்து கொள்ளக் கூடிய சக்தி மற்றவர்களுக்குக் கிடையவே கிடையாது என்பது அவருக்கு நிச்சயம்; என் விஷயத்தில் தான் கொஞ்சம் நம்பிக்கை'' என்றார் அய்யாசாமிப் பிள்ளை.

மேற்கூறிய புலவரைப் போல், அடிக்கடி சந்தேகப்பட்டு, ''தெரிந்ததா?'', ''என்ன நான் சொல்கிறது?'' என்று கேட்டுக் கொண்டு பேசுகிறவர்களிடம் எனக்கு ரொம்பப் பயம். அவர் களைக் கண்டால் ஓட்டம் பிடிக்கக் கூடத் தயங்கமாட்டேன்.

விரிவாகப் படிக்க www.kalkionline.com பார்க்கவும்.

'மொபைல் ரோமிங்' சேவை அளிக்கலாம். என்ன, அதற்கெனத் தனியாக நுழைவுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

இனி பல GSM ஆப்பரேட்டர்கள் தாங்கள் நஷ்டப்படாமலிருக்க என்ன செய்வார்கள்? CDMA வசதியில்லாத இடங்களில் தங்கள் சேவையை அறிமுகப்படுத்தலாம். அல்லது டாடா நிறுவனம் போல இருவகைத் தொழில் நுட்பங்களிலும் கால் பதிக்கலாம். அவர்களும் முழுமையான CDMA ஆபரேட்டர்களாக மாறி, கடும் போட்டியை உருவாக்கலாம்.




தொகுப்பு : ஜி.எஸ்.எஸ்.

அட்டைப்படம் : ஸ்ரீஹரி

படங்கள்: அன்ஸார்

கார்ட்டூன்ஸ் : மருது

# அடிதடி



நல்ல நடிகர்களுக்குத் தட்டுப்பாடு வரலாம். ஆனால் நடிகர்களுக்குத் தகுந்த மாதிரி கதை சமைக்கிற கில்லாடிகளுக்கு கோலிவுட் வட்டாரத்தில் தட்டுப்பாடே கிடையாது.

சத்தியராஜின் மகன் சிபி ராஜுவுக்கு விசிலடிச்சான் குஞ்சுகள் முளைத்துவிட்ட தமிழ்ச்சூழலில், அன்னாருக்குப் பொருத்தமாக ஓர் அசத்தல் கதை பிடிக்க வேண்டும் என்று யோசித்திருக்கிறார், படத்தின் இயக்குனர் டி. ஷிவ்ராஜ். வழுக்கைத் தலை அழகும், நெற்றியில் திருநீற்றுப் பொலிவுமாக, வெள்ளை வேஷ்டி, வெள்ளைச் சட்டையில் வலம் வருகிற தாதா திருப்பதி, (சத்தியராஜ்) வீட்டில் பெண் வேலையாள் வைத்துக் கொள்ளத் தயங்கும் ஐம்பது வயது ஆசாமி. அப்படிப்பட்டவருக்கு காலம் கடந்து காதல் வருகிறது. அதுவும் கல்லூரி மாணவி மீது.

தமது ஒரு தலைக் காதலை அப்பாவித்தனமாக ரதி மீது திணிக்க, ஊரறிந்த தாதா என்பதால், ரதியும் அவரது குடும்பமும் செய்வதறியாமல் விழிக்க... படம் ரொமாண்டிக் களத்தில் காமெடியாகப் பயணிக்கிறது.

''நாங்க பண்ணினா அடிதடி. அதையே போலீஸ் செஞ்சா தடியடி'' என்று நக்கல் தத்துவம் பேசுவதில் தொடங்கி, ரதி தம்மைக் காதலிப்பதாக முடிவு செய்துகொண்டு, விக் வைத்து டைட் ஜீன்ஸ் டீ ஷர்ட்டில், வாயில் ரோஜா மலரைக் கவ்வியபடி, குரூசர் பைக்கில் இளவட்டமாய் வந்து வட்டமடிப்பதுவரை, சத்தியராஜ் தமது ''என்னம்மா கண்ணு சௌக்கியமா?'' பாணியில் பிரமாதப்படுத்துகிறார். வல்லூறிடம் சிக்கிக் கொண்ட கோழிக் குஞ்சு போல, திகைக்கும் ப்ரியா பாத்திரத்தில் ரதி கச்சிதம்.

அண்ணனுக்குக் காதல் கைடாக வந்து, ஐடியாக்களை அள்ளிவிடும் நெப்போலியனும் ஓ.கே!

எந்த நேரத்திலும் சத்தியராஜ்-ரதி டூயட் பாடலாம் என்ற பேராபத்தை எதிர்நோக்கி படம் பார்க்கும் நம்மைக் காப்பாற்றிவிடும் இயக்குனருக்கு, பிரத்யேக ஜே! படத்தில் தேவாவுக்கு 'இசை பிரம்மா' என்றொரு டைட்டில் போடுகிறார்கள். 'காப்பி'ய நாயகன் என்பதுதான் அவருக்குப் பொருத்தமான டைட்டில். இது 'அடிதடி'யிலும் அப்படியே நிருபணமாகி இருக்கிறது.

லாஜிக் பற்றிக் கவலைப்படாமல் ஜாலியாகப் பொழுது போக்க நினைக்கிறவர்களுக்கு, 'அடிதடி' அமர்க்களமான படம்.

- விஷுவல்தாசன்

- ஆவரெஜ்

**இவங்க இதையும் சொல்வாங்க; இதுக்கு மேலேயும் சொல்வாங்க!**



**வாஜ்பாய்:**

நான் கனவு காணுகிறேன் என்கிறார் காங்கிரஸ் கட்சித் தலைவி. ஆமாம். நான் கனவு தான் காண்கிறேன். ஆனால் என் கனவில் விவசாயி வருகிறான். கடன் வாங்குகிறான். கடனை அடைக்கிறான். கனவில் தானே கடன் கொடுக்கவும், அடைக்கவும் முடியும்? பத்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பும் இப்படித்தான் கொடுத்தோம். கனவில் பத்து லட்சம் பேருக்கென்ன, கோடிக்கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்க முடியாதா என்ன?



**அத்வானி:**

காங்கிரஸ் ஆண்ட 50 ஆண்டுகளில், எந்தப் பிரதமராவது பாகிஸ்தானுக்குப் போய் முஷரஃபின் கையையோ, காலையோ பிடித்துக் குலுக்கியதுண்டா? நாங்கள் பதவிக்கு வந்த பிறகு பாகிஸ்தானுக்குப் போய் வந்த ஒரே பிரதமர் வாஜ்பாய்தான். எல்லை தாண்டிய பயங்கரவாதம் இருக்கிறவரை, பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை கிடையாது என்றோம். இப்போது நாங்கள் பாகிஸ்தானுடன் பேசக் காரணம், அதிபர் முஷரஃப் தமக்குத் தாமே பேசிக் கொண்டிருந்தால் அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று உலகத் தலைவர்கள் எல்லாம் நினைத்து விடுவார்களே என்ற கவலையால்தான்.

**பிரமோத் மகாஜன்:**

எல்லோர் முன்னிலையிலும் பா.ஜ.கவில் சேர்ந்த டி.பி.யாதவ், மறுநாளே வெளியே தள்ளப்பட்டு விட்டார். அவர் மீது 25க்கும் மேற்பட்ட கொலை வழக்குகள், வழிப்பறிக் கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன என்கிறார்கள். இவற்றில் ஏதாவது ஒரு வழக்கில் அவர் தண்டிக்கப்பட்டிருக்கிறாரா என்று கேட்கிறேன். இத்தனை வழக்குகளில் சிக்கியிருந்தும் கூட, ஒன்றிலுமே தண்டிக்கப் படவில்லை என்றால் அவர் எத்தனை சக்தி வாய்ந்த மனிதராக இருக்க வேண்டும் என்று யோசித்துப் பாருங்கள். எங்கள் கட்சியில் இது மாதிரி ஏற்கெனவே நிறையப் பேர் இருக்கிறார்கள். அதற்காக அவர்களை எல்லாம் கட்சியிலிருந்து வெளியேறச் சொல்ல முடியுமா? அப்படி நாங்கள் சேர்த்துக் கொள்ளவில்லை என்றால், நாளைக்கே அவர்கள் பகுஜன் சமாஜ் கட்சியிலோ, சமாஜ்வாதி கட்சியிலோ சேர்ந்து எங்களையே திட்டித் தீர்க்க மாட்டார்களா? கொலைகள், வழிப்பறி எல்லாம் ஒரு பெரிய குற்றம் என்று சொல்ல வந்துவிட்டீர்களே!

**வெங்கய்ய நாயுடு:**

சினிமாக்காரர்கள், கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் எல்லாம்

பா.ஜ.கவுக்கு வருகிறார்கள் என்றால், அதற்கு நாங்கள் என்ன செய்வது? அவர்களால் இனிமேலும் சினிமாவில் நடிக்க முடியாது. கிரிக்கெட் ஆடவும் முடியாது. எதையுமே செய்ய முடியாது என்கிறபோது, அவர்கள் வேறு என்னதான் செய்வார்கள், பா.ஜ.கவில் சேருவதைத் தவிர?

**சோனியா காந்தி:**

நான் அமேதி தொகுதியிலும்,

# டெஸ்டிஸ்!



மேற்கு உ.பி.தொகுதியிலும் ப்ரியங்கா - ராகுலுடன் சுற்றுப் பயணம் செய்தபோது, எல்லோரும் என் மாமியாரின் மூக்கைப் பற்றிப் பேசிய போதுதான் மூக்கு ஒருவருக்கு எவ்வளவு முக்கியம் என்று தெரிந்தது. சொந்த மூக்கால் சுவாசிக்க வேண்டுமானால், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால்தான் முடியும். என் உடல் இத்தாலிய உடலாக இருக்கலாம். ஆனால் என் மூக்கு இந்திய மூக்கு.

**ஜெய்பால் ரெட்டி:**

நான் ஜனதா தளத்தில் இருந்தபோது, ராஜீவ் காந்திக்கு போஃபர்ஸ் ஊழலில் பங்கு இருக்கிறது என்று சொன்னேன் என்கிறார்கள். அதற்கு என்ன செய்வது? நான் அப்போது காங்கிரஸ் கட்சி செய்தித் தொடர்பாளனாக இருக்கவில்லையே? என் மீது இப்போது குற்றம் சொல்லுகிறவர்கள், நான் அப்போது காங்கிரசில் இருந்திருந்தால் அப்படிப் பேசியிருப்பேனா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அனாவசியமாக என் மீது குறை சொல்லக் கூடாது.

**டாக்டர் கலைஞர்:**

'ராமர் கோயில் கட்டுவோம், ராமர் கோயில் கட்டுவோம்' என்று பல தலைவர்கள் பா.ஜ.கவில் சொல்லி வந்தார்கள். நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன், அவர்கள் அப்படியே கட்டித் தொலைத்தால், அதைக் காரணம் காட்டி கூட்டணியிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்று. முரசொலி மாறன் நோய்வாய்ப்பட்ட போதும் அவர்கள் ராமர் கோயில் கட்டவில்லை. சரி, தொலைகிறது. அவர் சிகிச்சை முழுவதும் முடியட்டும் அதற்குள்ளாவது கட்டித் தொலைப்பார்களா என்று பார்த்தேன். என் பொறுமையைச் சோதித்திட்டார்கள். எனவே நாங்கள் வேறு வழியில்லாமல் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து நட்புடன் பிரிந்தோம்.

**டாக்டர் ராமதாஸ்:**

அ.இ.அ.தி.மு.க.வுடனோ, பா.ஜ.கவுடனோ இனி ஆயுசுக்கும் நாங்கள் சேரப் போவதில்லை. அமைச்சர் பொறுப்புத் தந்தால் அது வேறு விஷயம்.

கற்பனை: **சாருகேசி**

# ஏர மனசு

மதுபாக்யா

"இன்னைக்கு உழவுக்குப் போக வேண்டாங்க. உடம்பெல்லாம் அனலாக் காயுது. காய்ச்சலா இருக்குமோ என்னவோ? டாக்டரிடம் காட்டிட்டு வாங்க.." செண்பகம் சொன்னாள்.

"இல்ல செண்பகம்... நான் கட்டாயம் உழவுக்குப் போகணும்... மூணு இடத்துல உழவு... ஒரு உழவுக்கு நூற்று ஐம்பது ரூபாய்... நான் இன்னைக்குப் போக லைன்னா, வயல்காரன் வேறு யாரையும் வச்சு உழுதுப் புடுவான்.." தங்கராஜ் பெண்டாட்டி பேச்சைக்கேளாமல் மாட்டுக்குத் தண்ணீர்க்காட்டி, புல் போட்டு, மாட்டை உழவுக்கு ஓட்டிக் கொண்டு போகத் தயார் செய்தான்.

நேற்றே சொல்லியிருந்தார் இராமசாமி நாடார். அவரது மூன்று வயல்களுக்கு நாற்று நடவேண்டும். காலையில் உழுது போட்டால்தான் நாற்று நடும் வேலை முடியும். ஆனால் இன்னிக்குப் பார்த்து உடம்பு கணகண என்று கொதித்தது. தங்கராஜுக்கு உழவை விட்டுவிட மனமில்லை. சுளை யாக ஒரே நாளில் நானூற்று ஐம்பது ரூபாய் கிடைக்கிறதே.

இன்னொரு காரணமும் இருந்தது. இதே காய்ச்சலிலும் கட்டா யமாய் உழவுக்குப் போக...! போன மாதம்தான் தங்க ராஜ், செண் பகத்தின் ஒரு பவுன் தோட்டை விற்று ஒரு சிவலப்பேரி மாடு பிடித்து வந்தான். ஏற்கெனவே இருந்த செவலை மாட் டோடு அருமையாக ஜோடி சேர்ந்து நின்றது.

வருகிற உழவை விடாமல் செய்தால் தானே, கிடைக்கிற பணத்தைச் சேர்த்து புது நகையை வாங்க முடியும்?

பொழுது மெல்ல மெல்ல விடிந்து கொண்டிருக்கிறது. வெயில் விழுமுன் மாடுகளை ஓட்டிச் சென்று, கருப்பக்கால் வயக்காட்டில், இராமசாமி நாடார் வயலில் உழவை ஆரம்பித்து விட்டான் தங்கராஜ்.

எட்டு மணிக்குள் உழுது முடித்து விட, நாற்று நடுபவர்கள் வந்து சேர்ந் தனர். பின்னால் இராமசாமி நாடாரும் வந்து விட்டார்.

நடவையைத் துரிதப்படுத்திவிட்டு, மெல்ல தங்கராஜிடம் பேச்சுக் கொடுத் தார்.

"என்ன தங்கராஜு, காலையிலே வந்து வேகமாக உழுதுப் போட்டுட்டே. நான் கூட எதிர்பார்க்கலை, இவ்வளவு சீக்கிரமா உழுதிடுவேன்னு... ஆனால் முகம்தான் என்னமோ வாட்டமா யிருக்கு.."

"காலையிலே இருந்து உடம்புக்கு சரியில்லையண்ணே! காய்ச்சலாய் இருக்கும்போல தெரியுது.."

"காய்ச்சல்னா... ஈரத்தில் கால் படக்கூடாதப்பா... நீ தண்ணில இறங்கி வேலைச் செய்யப்போயி, அது ஜன்னி யில கொண்டு விட்டுடும்பா... அடுத்த இரண்டு வயலையும் உழ, வேறு ஆளை ஏற்பாடு செஞ்சுக்கறேன். நீ வீட்டுக்குப் போ" என்றார் கனிவுடன்.

"வேண்டாம் இராமசாமியண்ணே. சாதா காய்ச்சல்தானே? அது போக்குல போயிடும்.."

உடம்பு தளர்ந்து விழுந்தாலும், இரண்டு வயல்களையும் உழுதுவிட்டே ஓய்ந்தான்.

மாட்டைக் குளிப்பாட்டி ஓட்டிச்

சென்று வீட்டின் அருகே மேய விட்டுவிட்டு, செண்பகத்திடம் ஐம்பது ரூபாய் வாங்கிக் கொண்டான். தாவீது நாடார் சைக்கிள் கடையில் வாடகை சைக்கிளை எடுத்துக் கொண்டு, வள்ளியூருக்குச் சென்றான்.

டாக்டரிடம் சென்றபோது கூட்டமாய் இருந்தது. அவர் ஒரு ஊசி போட்டு விட்டு, மருந்தும் எழுதிக் கொடுத்தார். ''இன்னும் நாலு நாளுக்கு நீ எந்த வேலையும் செய்யக் கூடாது. குறிப்பாக தண்ணிக்குள்ள கால் வைக்கக் கூடாது'' என்றார் கண்டிப்புடன்.

கவனமாகக் கேட்டுக் கொண்டானே தவிர, அவன் மனசெல்லாம், நடுவை சமயத்துல, முடிஞ்ச அளவு நிலம் உழுது, பணம் சேர்த்து, செண்பகத்துக்கு நகை செய்து போட வேண்டும் என்பதே!

> வேண்டாம்
> இராமசாமி
> அண்ணே,
> சாதா
> காய்ச்சல்தானே?
> அது போக்குல
> போயிடும்...



சாயங்காலம் மாட்டைக் கட்டும் நேரம். மாணிக்கம் வந்தார். இரண்டு வயல்களுக்குச் சொந்தக்காரர். "இரண்டுக்கும் நாளை நடுவை. நீதான் வர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

மனைவி திடீரென அவன் டாக்டரிடம் போய் வந்த கதையை ஆரம்பிக்க, அவன் அவள் வாயைப் படாரென்று மூடினான்.

"சும்மா ஒரு வேலையாட்டும் வள்ளியூர் வரை போய் வந்தேண்ணே. விடியறதுக்குள்ள வந்துடறேன்" என்றான்.



"நவீன், ஹோம் - ஒர்க் கணக்கை நான் போட்டுத் தரட்டுமா?.."

"வேண்டாம்ப்பா, நானே தப்பா போட்டுக்கறேன்!"

- அகராதி ப்ரியன்

"நேத்தெல்லாம் ஜுரத்துல பினாத்திக்கிட்டிருந்தீங்க. இப்படி ஓயாம உழைச்சா என்னத்துக்கு ஆவும். போதும்" என்று கையைப்பிடித்து இழுத்தாள். ஆனாலும் தங்கராஜு வயலில் இறங்கிவிட்டான். ஒரு வழியாக இரண்டே வாரத்தில் அவனுக்கு ஐயாயிரம் ரூபாய் வரை உழுத பணம் கிடைத்தது. செண்பகத்தோடு, நகைக் கடைக்குப் போய், ஒரு பவுனில் சிவப்புக் கல் வைத்த தோடு வாங்கி வந்தான்.

வயல்காட்டில் பாதி வயல்கள் நட்டு. பாசானம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இனி குறிப்பிட்ட நாட்களுக்குள் நடுவை வேலை முடியாவிட்டால், மிச்ச வயல்களுக்கு நெல் பொதி வரும் நேரம் தண்ணீர் கிடைப்பது குறைந்து விடும்.

ஆகையால் நடுவை மிகமிக வேகமாக நடந்தது. நிறையப்பேர் தங்கராஜையே கூப்பிட்டனர். அவனும் திறம்பட முடித்துக் கொடுத்தான். திடீரென்று ஒரு நாள் இரண்டு மாடுகளுக்கும் வாயில் கானாவானா புண் வந்தது. மாடுகள் புல் மேய மறுத்தன. வாயெல்லாம் நுரை தள்ள, களைத்து நின்றன.

உழவுக்குப் போகாமல் இருந்த தங்கராஜை, தட்டி எழுப்பினார் ரங்க நாயுடு.

"இதபாரு, தங்கராஜ், எனக்கு நடவு பிந்தி விட்டது. இப்ப நட்டாலே பொதி வர்ற நேரத்தில் தண்ணீர் கிடைப்பது கஷ்டம். சீக்கிரமா உழுது கொடுப்பா!"

"முடியாது அண்ணே... மாடுகளுக்கு இரண்டு நாளா கானாவானா புண் வந்து, தண்ணி குடிக்க மாட்டேங்குது. புல்மேய மாட்டேங்குது."


"அதுக்கென்ன வாயிலதானே புண், காலுல இல்லையே?"

"புல்மேய மாட்டேங்குது. வயித்துல ஒண்ணும் இல்லாம, ஏர்ல பூட்டறது பாவம்னே."

"ஒரு உழவுக்கு, இரண்டு உழவுக்குள்ள சம்பளம் தர்றேன்... உனக்கு சொகம் இல்லாம இருக்கையில் மாணிக்கம் அண்ணனுக்கு உழுது கொடுக்கலை நீ...?"

"எனக்கு சுகமில்லைன்னு இருந்தா, வந்திருப்பேன். ஆனா மாட்டுக்கு சொகம் இல்லைன்னா என் மனசு தாங்காது. நாளைக்கு மாட்டு ஆஸ்பத்திரி டாக்டரைக் கூட்டிக்கிட்டு வரப் போறேண்ணே. அதுங்க படற பாட்டைக் காண முடியலை" என்று தழுதழுத்தவன், ரங்கநாயுடுவின் பதிலுக்குக் காத்திராமல் வீட்டுக்குள் போனான். ○

* சுப்பிரமணியன் பாலாஜி



# "பெரிய மனிதர்கள் பிடிபடுவார்கள்!"

"பல்லாயிரம் கோடி முத்திரைத்தாள் மெகா மோசடியில், நாடு முழுக்கப் பலர் சம்பந்தப்பட்டுள்ளனர்; நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டும், இந்த தேசத் துரோகச் செயலை விசாரிக்கும் சில தமிழக அதிகாரிகளுக்கும், குற்றவாளிகளுக்கும் தொடர்பு உண்டு. எனவே தமிழகக் காவல் துறையின் குற்றப் புலனாய்வுத் துறை, உடனடியாக இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டும்" என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் சுப்பிரமணியம் பாலாஜி என்ற வழக்கறிஞர் பொதுநல வழக்கொன்றைப் போட்டார். நீதிமன்றம் தக்க ஆணை போடுவதற்கு முன்பே 'வழக்கை சி.பி.ஐக்குக் கொடுத்து விடுகிறோம்' என்று நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டுவிட்டது தமிழக அரசு.

மிக்க பரபரப்பான இந்த விவகாரத்தில் தமிழகக் காவல் துறையை சங்கடப்படுத்தும் விதமான பொதுநல வழக்கைத் தாக்கல் செய்த சுப்பிரமணியன் பாலாஜியைச் சந்தித்தோம்.

"கர்நாடக போலீஸ் சென்னை ஷெனாய் நகருக்கு வந்து ரூபாய் 160 கோடி மதிப்புள்ள போலி முத்திரைத் தாள்களைப் பறிமுதல் செய்கிறார்கள். ஆனால் தமிழகக் காவல்துறை கடந்த இரண்டு வருடங்களில் ரூபாய் ஒன்றரை லட்சம் மதிப்புள்ள போலி முத்திரைத் தாள்களைத்தான் பறிமுதல் செய்திருக்கிறது. இதிலிருந்து தமிழகத்தில் தீவிர விசாரணை நடத்த வேண்டிய அவசியம் இருப்பது புரியுமே" என்கிறார்.

இவரை மிரட்ட முடியுமா என்று மோப்பம் பிடித்துப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் பிரதமர் வரை இவருக்குச் செல்வாக்கு இருப்பதால் பின் வாங்கி விட்டார்கள். "நான் கோர்ட்டில் தாக்கல் செய்தவற்றுக்கு ஆதாரம் உண்டு. இந்தப் பணியில் என்னை வழி நடத்திச் செல்பவர் ஸீனியர் வழக்கறிஞர் சந்துரு" என்கிறார் சுப்பிரமணியம் பாலாஜி.

இவரது குடும்பமே வழக்கறிஞர் குடும்பமாம். இவரது அம்மா வழி சின்ன தாத்தா, ஓவியர் சந்திரா. அக்கா பத்திரிகையாளராக இருந்தவர். சுப்பிரமணியன் வைஷ்ணவா கல்லூரியில் படிக்கும்போதே ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தில் சேர்ந்து சேவை செய்ய இறங்கினார். அதன் பிறகு சென்னை பல்கலை கழகத்தில் பாதுகாப்பு மற்றும் போர்த்திறன் இயலில் ஆராய்ச்சிப் படிப்பை முடித்து, சட்டப் படிப்பையும் முடித்தார். சன் தொலைக்காட்சி, ஜே.ஜே தொலைக்காட்சி (ஜெயாவின் முந்தைய அவதாரம்) ஆகியவற்றில் மார்க்கெட்டிங் அதிகாரியாக வேலை செய்த அனுபவமும் உண்டு. மானஸரோவர் யாத்திரை சென்று வந்திருக்கிறார்.

முப்பத்தியிரண்டு வயதாகிறது சுப்பிரமணியத்துக்கு. பொதுப்பணியில் பிஸியாக இருப்பதால் கல்யாணத்தைப் பற்றி நினைக்கவே நேரமில்லையாம்.

"கல்யாணமானால் துணிச்சல் போய் விடுமே?" என்று ஜோக்கடிக்கிறார்.

- கௌசி

படம்: மீடியா ராமு

# மார்க் போடு தலைவா!

சிவப்புச் சிந்தனைகளோட சிறப்பா செயல்பட்டு வருகிறாரா தோழர் நல்லகண்ணு?

உங்கள் மதிப்பில் தலைவர் எப்படி?

கச்சிதமா கணிச்சு, அனுப்பி வையுங்க. முழு முகவரி முக்கியம். சிறந்த முறையில் மதிப்பெண் போட்டவங்களுக்கு டிக்கெட் தரப்படும். நான்கு பேர் அடங்கிய குடும்பத்துக்கு சினிமா டிக்கெட். உறையின் மீது 'மாண்புமிகு டாப்டென் - 8 என்று குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

**கடைசி தேதி: 28.3.2004**



# நல்லகண்ணு எப்படி?

| | தகுதி | முழு மதிப்பெண் | நல்லகண்ணு பெற்றது |
|---|---|---|---|
| 1. | தலைமைப் பண்பு (லீடர்ஷிப் குவாலிடி, வசீகரம்) | 10 | |
| 2. | முடிவெடுக்கும் திறன் | 10 | |
| 3. | கறைபடாத கரங்கள் | 10 | |
| 4. | அரசியல் சாணக்கியம் | 10 | |
| 5. | மனித நேயம் | 10 | |
| 6. | தொண்டர்களோடு தோழமை | 10 | |
| 7. | மேடைப் பேச்சு | 10 | |
| 8. | மாற்றுக் கட்சியினரை மதிக்கும் போக்கு | 10 | |
| 9. | தனிமனித ஒழுக்கம் | 10 | |
| 10. | நிர்வாகத் திறமை | 10 | |
| | மொத்தம் | 100 | |

மாண்புமிகு டாப் டென் - 8

பெயர் ........................

முகவரி ........................

........................

........................



■ 'ஆட்டுக்கார அலமேலு' - படத்தில்

ஒருநாள் திடீரென்று தேவரி டமிருந்து அழைப்பு வந்தது. போனேன். என்னை தம்முடைய காரில் ஏற்றிக் கொண்டு, ஸ்டுடியோவுக்குப் போனார். போகிற வழியில், தான் அப்போது எடுத்துக் கொண்டு இருந்த ஓர் இந்திப் படத்தைப் பற்றி ரொம்பவும் உயர்வாகச் சொன்னார். அந்தப் படத்தில் இடம் பெற்றிருக்கும் ஒரு பாடல் காட்சி பற்றி ரொம்பப் புகழ்ந்தார். "ஒண்ணரை லட்சம் ரூபாய் செலவு செய்து, பிரம்மாண்டமான செட் ஒன்றை இந்தப் பாட்டுக்கென்றே நிர்மாணித்து, டூயட் சாங் ஷூட் பண்ணியிருக்கு" என்றார்.

எடுக்கப்பட்டிருந்த பாடல் காட்சியை தேவருக்குத் திரையிட்டுக் காட்டினார்கள். நானும் உடன் இருந்தேன். திரையில் காட்சி ஓட, ஓட, தேவர் ஏதோ முணுமுணுத்தபடி இருந்தார். பாடல் காட்சி முடிந்தபின் ஆரம்பித்தார் தம்முடைய அர்ச்சனையை. அந்தப் படத்துக்கும் டைரக்ஷன், தேவர் படங்களையெல்லாம் இயக்கும் திருமுகம்தான்.



"அப்பா, நாகேஸு! நான் ஒரு கதை வைச்சிருக்கேன். அதை நீ டைரக்ட் பண்ணறியா?"

# 'இதெல்லாம் ஒரு கதையா?'

அடுத்த பத்து, பதினைந்து நிமிடங்களுக்கு திருமுகத்தை மட்டுமின்றி, தமது இஷ்டதெய்வமான முருகனையும் சேர்த்து, திட்டித் தீர்த்துவிட்டார்.

பாடல் காட்சிக்காக தேவர் ஒண்ணரை லட்சம் ரூபாய் செலவழித்து செட் போட்டிருக்கிறார். ஆனால், டைரக்டரோ, மொத்தப் பாடலையும், குளோஸ்-அப் காட்சிகளாகவே எடுத்துத் தள்ளி




''பஸ் ஸ்டாண்டல காத்திருக்கறப்ப குட்டிச் சுவர் மாதிரி ஆடாம அசையாம நிக்காதீங்கன்னு சொன்னா கேட்டாத்தானே?''

''ஏன் இப்ப என்ன ஆயிடுச்சு?''

''சட்டையிலே எவனோ கட்சிச் சின்னம் வரைஞ்சிருக்கான்.''

- கிருஷ்ணகுமார்

இருந்தார். அதைப் பார்த்துவிட்டுத்தான் தேவருக்குக் கோபமான கோபம்.

'ஒன்னரை லட்சம் விழுங்கிவிட்டு எழுந்து நிற்கும் செட்டை பாடல் காட்சியின்போது, ஜனங்களுக்குக் காட்ட வேண்டாமா? க்ளோஸ் அப்பில் பாட்டை எடுக்க, எதற்கு லட்சம் ரூபாய் செலவு செய்யணும்' என்பது அவரது அழுத்தமான கருத்து.

யோசித்துப் பார்க்கிறபோது, அவரது கருத்து ரொம்ப சரியானது என்று புரியும். சினிமாவில் செலவு செய்தால், அது திரையின் ரிச்னஸ்ஸைக் கூட்ட வேண்டும். இல்லையெனில் அந்தச் செலவை செய்யக் கூடாது என்பது சரியான கருத்துதானே?

**எ**னக்குள்ளே நடிகனைத் தவிர ஒரு டைரக்டரும் இருப்பதாக நினைத்தவர் தேவர். அவர், பலமுறை என்னிடம், 'அப்பா நாகேஷு! நான் ஒரு கதை வைச்சிருக்கேன். அதை நீ டைரக்ட் பண்றியா?' என்று கேட்டிருக்கிறார். அவர் ஏதோ தமாஷுக்குச் சொல்லுவதாகத்தான் நான் நினைத்துக் கொண்டு இருந்தேன். ஒரு கட்டத்தில், மனுஷர், சீரியஸாகத்தான் கேட்கிறார் என்பது எனக்குப் புரிந்தது. டைரக்ஷன் என்பது நம்மாலும் முடிகிற காரியம்தான் என்று எனக்கு உள்ளூர நம்பிக்கை இருந்தாலும், 'டைரக்ஷன் எல்லாம் வேண்டாம். நடிப்பு மட்டுமே போதும்!' என உறுதியாக இருந்தேன்.

ஒருநாள் படு சீரியஸாக என்னிடம் ஒரு கதையைச் சொன்னார் தேவர். படத்துல முக்கியமான வேடத்தில் ஒரு ஆடு நடிக்கும். அந்த ஆடு பண்ணாத வேலை இல்லை என்று ஆரம்பித்து, கிராமத்துக் காதல் கதையை விவரித்தார்.

'இதெல்லாம் ஒரு கதையா?' என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டேன். ஆனால் அதை வெளிப்படையாக தேவரிடத்திலே சொல்லிவிட முடியுமா?

''உங்க பாணியில, எத்தனையோ மிருகங்களை வைச்சு படம் எடுத்திருக்கீங்க! அது மாதிரி ஆட்டை வைச்சு, திருமுகமே டைரக்ட் பண்ணினாத்தான் ஜனங்களுக்குப் பிடிக்கும். நான் டைரக்ட் பண்ணினா, சரி வராது!'' என்றேன் நாகரிகமான முறையில். நான் சொன்னதை நம்பினாரா? இல்லை, என் உள் மனத்தில் இருந்ததைப் புரிந்து கொண்டாரா என்று எனக்குத் தெரியாது. ஆனால், அதற்குப் பிறகு, என்னைப் படம் இயக்கும்படி, தேவர் சொன்னதே இல்லை.

அதேசமயம், அந்தக் கதையை அவர் படமாக எடுத்தார். படம் சூப்பர் டூப்பர் ஹிட். அந்தப் படம்தான் ஆட்டுக்கார அலமேலு!

தேவர் என்கிற மகத்தான மனிதர், விட்டுச் சென்ற இடத்தை நிரப்ப, இன்றைக்கும் இன்னொருவர் கிடையாது. அவரைப் போன்ற பக்திமானை நான் இந்த உலகில் பார்த்தது இல்லை.

**சி**னிமா உலகம், என்னை அங்கீகரித்து, நடிகனாக ஏற்றுக் கொள்ளாத ஆரம்பக் கட்டத்தில், எனக்குச் சோறு போட்டது ஆல் இந்தியா ரேடியோதான். இதை பகிரங்கமாகச் சொல்லுவதில் எனக்குத் துளியும் தயக்கம் கிடையாது.

நம் ஊரில் டெலிவிஷன் ஒளிபரப்பு

ஆரம்பமான கால கட்டத்தில், வெள்ளிக்கிழமை இரவு ஒளிபரப்பாகும் 'ஒலியும் ஒளியும்' நிகழ்ச்சிக்கு எவ்வளவு வரவேற்பு இருந்ததோ, அந்த அளவு, ரேடியோவில் ஒலிபரப்பான நாடகங்களுக்கும் இருந்தது. ஆம்! இன்றைக்கு, டி.வி.யில் வருகிற மெகா தொடர்கள் போல, அப்போது, தொடர் நாடகங்களை ரேடியோவில் ஒலிபரப்புவார்கள்.

'துபாஷ் வீடு', 'காப்புக் கட்டிச் சத்திரம்' என்ற இரண்டு வானொலி நாடகங்களும் 'சித்தி', 'மெட்டி ஒலி' ரேஞ்சுக்கு மிகப் பிரபலமான விளங்கின. மனோரமாவுக்கும் இந்த நாடகங்களில் மிகவும் முக்கியமான ரோல்.

எழுத்தாளர் சுகி சுப்ரமணியமும், அகிலா சிவராமன் என்கிற பெண்மணியும் (பின்னாளில் சென்னை தொலைக் காட்சியின் இயக்குனராகப் பணியாற்றினாரே அதே அம்மையார்தான்) தான் அந்தத் தொடர் நாடக ஒலிபரப்பில் முக்கியப் பங்கு வகித்தார்கள். அப்போது, சென்னை வானொலி நிலையத்தின் இயக்குனராக இருந்த அகிலா சிவராமன் தொடர் நாடகங்களின் தீவிர ரசிகர். ஒவ்வொரு வியாழக்கிழமை இரவும் அந்தத் தொடர் நாடகங்கள் ஒலிபரப்பாகும் என்பதால், வியாழக்கிழமைகளில் மாலையில் எந்த நிகழ்ச்சிக்கு அழைத்தாலும் பங்கேற்க ஒப்புக் கொள்ள மாட்டார். இரவில் தமது குடும்பத்தினருடன் அமர்ந்து, ரேடியோவில் நாடகங்களைக் கேட்பார் என்றால், அகிலா சிவராமனின் ரசனையை நீங்களே நன்கு புரிந்து கொள்ளலாம்.

அந்தக் காலத்தில், ஒரு தடவை நாடக ரிக்கார்டிங்கிற்குப் போனால், பதினைந்து ரூபாய் தருவார்கள். அதுவும் ரொக்கமாகத் தர மாட்டார்கள். செக்தான். அந்தச் செக்கை வாங்கியவுடன், நேரே ரிசர்வ் பாங்க்குக்குப் போய், பணமாக மாற்றிக் கொண்டு, ஓட்டலுக்குப் போய் சாப்பிட்ட நாட்கள் பல உண்டு.

அப்போது ரேடியோ நிலையத்தில் பணி புரிந்து கொண்டிருந்த கூத்தபிரான் நண்பரானார். நாங்கள் இரண்டு பேருமாக ஓட்டலுக்குப் போய் சாப்பிட்டதுண்டு.

(சிரிப்பு தொடரும்)

படம் உதவி: ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

DISCOUNT SALE DISCOUNT SALE
வருடாந்திர அதிரடி
தள்ளுபடி விற்பனை
மார்ச் 1 முதல்
30 வரை
அடையாறில் கைத்தறி
புடவைகளின் உலகம்
சாந்திமணி
சாரீஸ் A/c
10% + 10%
ராணி சாரீஸ் செட்டிநாடு
காஞ்சி காட்டன் மங்களகிரி
சுத்வால் பாலிகாட்டன்
ஸ்பன் காட்டன் ஒரிஸா சில்க்
பெங்கால் காட்டன் பேன்ஸி சில்க்
ஃபேன்ஸி காட்டன்/ ஷிபான்/
டஸ்ஸர்/ பாலிசில்க் ஜார்ஜெட்
யமனேஸ்வர் காட்டன்
சுடிதார் மெட்டிரியல்,
ஹேண்ட்லூம் சல்வார்
பாவஞ்சிப் பாவாடை
மற்றும் வேஷ்டிகள்
போன்றவை தரமான நியாயமான
விலையில் கிடைக்கும் ஒரே இடம்
கடை எண். 5, அடித்தளம்,
கோகுல் ஆர்கெட், எண்.2,
சர்தார் பட்டேல் ரோடு,
(அடையார், சிக்னல் அருகில்)
அடையார், சென்னை - 20
☎.24451309/52117005
• வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப ஆர்டரின் பேரில் புடவைகள் நெய்து தரப்படும்.
9, 10, 10½ Yards also available.
All Major Credit Cards are accepted
Wholesale & Retail
Bring this cutting and avail extra discount. 2%
கெட்டி சாயம் மற்றும்
தரத்திற்கும் சிறந்த இடம்
ஞாயிறு கடை உண்டு
DISCOUNT SALE DISCOUNT SALE

## நீங்கள் கேட்டவை-தராசு

# சிம்ரன் மீண்டும் நடிப்பது அதிசயமா?

• மா.பிச்சைக்கனி,
ஓரிருக்கை.

? அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணிக்குப் பெயர் சரணாகதி கூட்டணி என்றால், காங்கிரசுடன் தி.மு.க. அமைத்துள்ள கூட்டணிக்குப் பெயர் என்ன..?

! அது சரணாகதிக் கூட்டணி என்றால், இது சமாதானக் கூட்டணி. எல்லாமே சந்தர்ப்பக் கூட்டணிகள்தாம்.

• வி.பி.கே. சரவணன்,
சின்னமனூர்.

? தேர்தலில் வன்முறை செய்பவர்களின் கைகளை ஒடிக்கச் சொல்லியிருக்கிறாரே வைகோ...?

! பொறுப்பான தலைவர் பேசக்கூடாத பேச்சு. கத்திக்கு பதில் ரத்தம்தான் என்பது, வன்முறையைத்தான் வளர்க்கும். இதற்கொரு பொடாவோ, தடாவோ, போட்டுக் கொள்வது நல்லது.

• கே. சம்பத்,
திருக்கழுக்குன்றம்.

? தேர்தல் ஆணையமும் நீதிமன்றங்களும் அரசியல்வாதிகளுக்குக் கிடுக்கிப்பிடி போடுகின்றனவே...?

! கிடுக்கிப்பிடியாவது, இடுக்கிப்பிடியாவது. எங்கள் தலைவர்களிடம் பதிலுக்கு டிமிக்கிப்பிடி இருக்கிறதே!

• எம்.சிவகுருநாதன்,
தஞ்சை.

? 'பாகிஸ்தான், இந்தியாவுக்குத் தீவிரவாதிகளையும் வெடிகுண்டுகளையும் அனுப்புகிறது. பதிலுக்கு நாம் பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் வீரர்களை அனுப்ப வேண்டுமா' என்று பிரவீன் தொகாடியா கேட்டிருப்பது பற்றி...?

! பாக்.குடன் நட்புப் பாலம் அமைத்து அதன் மூலம் பயங்கரவாதம் வாலைச் சுருட்டிக் கொள்ளச் செய்வது வாஜ்பாயின் முயற்சி. பாலத்தைத் தகர்த்து, பயங்கரவாதத்தின் வாலை முறுக்கி விடுவது வி.எச்.பி.யின் முயற்சி. இந்த இரண்டு துருவங்களும் இணைந்து, ஒத்துழைத்து வோட்டு கேட்பது, வாக்காளர்களை மூளைச் சலவை செய்யும் முயற்சி.

• சீர்காழி சாமா,
தென்பாதி

? கும்பகோணம் மகாமகத் திருவிழா உற்சவத்தில் அன்னதானத்துக்காக ஐந்நூறு மூட்டை அரிசி அளித்தார் ஒரு முஸ்லிம் அன்பர். இது குறித்து உங்கள் கருத்து என்ன...?

! என்ன அக்கிரமம்! விடக்கூடாது அவரை! அடுத்த இஸ்லாமியப் பண்டிகைக்கு, அவர் தொழுகிற தர்காவில் ஆயிரம் மூட்டையாக அரிசியைக் கொடுத்து, அவரையும் உட்கார வைத்து, அன்னதானம் செய்து பழிதீர்த்துக் கொள்ள வேண்டியதுதான்!


• ரஞ்சிதம் கோபிநாத்,
வத்திராயிருப்பு.

? ஒலிம்பிக் போட்டியில் நம் நாடு தங்கப்பதக்கம் பெற வேண்டுமானால், புதிதாக எந்த விளையாட்டைச் சேர்க்கலாம்...?

! கூட்டணி விளையாட்

• கூட்டிக் கழித்தால்...






• தேவை தடா!



• பழைய இலக்கணம்!



• துருவங்களின்...



• ... சேர்க்கை!



• தற்காலிக வரவு!

டைச் சேர்த்தால், பிளாட்டினம் பதக்கமே கிடைக்குமே!

• கிருஷ்ண ராஜ்கோபால்,
சென்னை - 92.

? என்னைப் போன்ற கல்கியின் நெடுங்கால வாசகர்கள், கல்கி நடுவு நிலைமையிலிருந்து விடுபட்டதாக உணர்கிறார்களே...?

! உணர்ச்சிவசப்படுவது வேறு; நாட்டு நலனை உத்தேசித்துச் சிந்திப்பது வேறு. உணர்வுகள் எல்லா நேரத்திலும் சரியான வழிகாட்டாது. கல்கியின் நிலைபாட்டினை இன்று உணர்வு பூர்வமாக எதிர்த்தாலும், எதிர்காலத்தில் அறிவு பூர்வமாக ஏற்பீர்கள்.

• டி.. சுப்ரமணியன்,
மேலையூர்.

? அரசியலில் இதெல்லாம் சகஜம் என்பதற்கு உதாரணம்...?

! ஆலடி அருணா!



• வித்தையும் வோட்டும்!

• ஜி. குப்புசாமி,
சங்கராபுரம்.

? சினிமாக் கலைஞர்களின் ஆதரவு எந்தக் கட்சிக்கு அதிகமாக உள்ளது...?

! ஒட்டுமொத்தமாக வலை விரித்திருக்கிறது பி.ஜே.பி. வலையில் விழுந்தவர்களில் லேட்டஸ்ட் - யுக்தா முகி. இன்னும் வரலாம். ஆனால், இதன் காரணமாக மக்கள் வோட்டை அள்ளி வீசுவார்கள் என்பது, எம்.ஜி.ஆரோடு முடிந்து போன ஒன்று.

• ஆர்.ஸ்ரீதரன்,
கும்பகோணம்.

? 'ராஜீவ் படுகொலை தொடர்பாக தி.மு.க. மீது காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியது இல்லை' என்று கபில் சிபல் கூறியுள்ளது பற்றி...?

! தி.மு.க.வும் அதன் தலைவரும் புலிகள் ஆதரவாளர்களாக இருந்தது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு ராஜீவ் படுகொலைக்குப் பிறகு அவர்கள் மனம் மாறியதும் உண்மை. காங்கிரஸ் முன்பு தி.மு.க.வைச் சந்தேகித்துத் தாக்கியது எவ்வளவு உண்மையோ, அவ்வளவுக்கு இன்று மனம் மாறி நேசக்கரம் நீட்டுவதும் உண்மை. கடந்த காலத் தவறுகளையே எண்ணிக் குமையாமல், இன்று செய்வதைச் சரியாகச் செய்வது அறிவுடைமை. கடந்த காலத் தவறுகளைச் சுற்றி வளைத்து மழுப்பப் பார்ப்பது பேதைமை.

• கே.துரைசாமி, மங்கலப்பட்டி.

? தீவிரமான பற்றுதல் எதில் போய் முடியும்...?

! கல்கி வெளியிடும் 'ஐயோ பேட்டா' மனிதர்கள் மாதிரி!

• பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? 'முன்னால் போனால் கடிப்பது; பின்னால் வந்தால் உதைப்பது - இதுதான் பத்திரி



''பைனான்ஸ் கம்பெனி முதலாளிக்கு கறுப்புப் பூனை பாதுகாப்பு போட்டிருக்கே, எப்படி?''

''அவர் எங்கேயும் ஓடி விடாம இருக்க முதலீட்டாளர்களே போட்டிருக்காங்க!''

- அம்பைதேவா

கையாளர்கள் வேலை' என்கிறாரே கருணாநிதி.

! அவரும் ஒரு பத்திரிகையாளர் தானே!

● ரா. சாலமோன், ஆலங்குளம்

? சூடான விமர்சனங்கள் உங்கள் மீது வரும்போது உங்கள் நிலை என்ன...?

! சூடோடு சத்தானதாகவும் இருந்தால் ஆற அமர ஏற்றுக் கொள்வேன். வெறும் சூடு மட்டும்தான் என்றால், ஒதுக்கித் தள்ளிவிடுவேன். எப்படியானாலும் மாற்றுக் கருத்துக்கான உரிமையை மதிப்பேன்.

● சு.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? சிம்ரன் மீண்டும் நடிக்க வந்திருப்பதை ஏதோ அதிசயம் போல் மீடியா கொண்டாடுகிறதே?

! சிம்ரன் நல்ல நடிகை; நல்ல என்டர்டெய்னர்; அவரது பங்கேற்பு அதிக ரசிகர்களை ஈர்க்கிறது என்பதை மறுக்க முடியாது. ஏற்கெனவே செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்றிவைக்க மட்டுமே தற்காலிகமாக வந்துள்ளார் என்பதுதான் வருத்தம்.

● அ. வித்தியாதரன், திண்டுக்கல் ★

? சர்வதேச மகளிர் தினமெல்லாம் கொண்டாடினாலும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படவில்லையே?

! வருத்தத்துக்குரிய உண்மை. லேட்டஸ்ட் அநீதி - காஷ்மீரிப் பெண்கள், அயல் மாநிலத்தவரை மணந்தால் சொத்துரிமை மறுக்கும் மசோதா. நல்லவேளை, மறுபரிசிலனை நடக்கிறது.

● கு. சின்னதுரை, சாக்காங்குடி ❐

? அவதூறு பொய் வழக்கு - இவற்றுக்கு மக்கள் வரிப்பணத்தைச் செலவிடும் ஆட்சியாளர்களிடமிருந்து, குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்னும் நிலையில், அதற்கான செலவுத் தொகையை வசூலிக்கும் சட்டத்தைக் கொண்டு வருவது ஏற்புடையதா...?

! செலவுத் தொகை வசூலிக்கும் அவதியெல்லாம் எதற்கு?... அரசு செலவில், தனி நபர் அவதூறு வழக்கே தொடரக்கூடாது என்று சட்டம் வருவதுதான் நல்லது.

● சி.ஆ. கேசவன், கு. கழுகாசலபுரம்.

? தத்துவங்கள் பெரும்பாலும் நடைமுறைக்கு ஒத்து வருவதில்லையே, ஏன்...?

! மெய்யான தத்துவங்கள் (இன்று ஆளுக்கு ஆள் தத்துவம் பேசறாங்க!) வாழ்க்கை நெறிகள். அவற்றை ஏற்றால், நடைமுறைப்படுத்தும் உறுதி இருந்தால் ஒத்து வரும். இல்லாவிட்டால் தத்துவத்தைப் பழிக்கத் தோன்றும்!

❐ ரூ.100 பரிசு பெறுபவர் :
கு. சின்னதுரை,
சாக்காங்குடி & அஞ்சல்
சிதம்பரம் வட்டம் - 608 201

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
அ. வித்தியாதரன்,
1/58, காவேரி நகர் இரண்டாவது தெரு,
நத்தம்சாலை,
திண்டுக்கல் - 624 003.

# நயம் மறந்த லயம்!




'கலக்கல்' (fusion) என்பதே ஒரு சுதந்திரமான விஷயம்தான்; அதிலும் 'சுதந்திரத்திற்கான கலக்கல்' (Fusion for Freedom) என்றால் கேட்கவே வேண் டாம்! 'அம்ருதம்' என்ற பெயரில் குரு காரைக்குடி மணி காஸ்மிக் மியூஸிக் கிற்காகச் செய்துள்ள இந்தக் கலவையில், பல இடங்களில் நயம் மறந்த லயம் வெளிப்படுகிறது. ஐந்து உருப்படிகள்; அதில் இரண்டு உருப்படி; மற்றவை தடா லடி! முதலில் வரும் 'லயக் கவிதை' தாள மும், மிருதங்க ஜதியும் இணைய, தாளத்தைப் பற்றியும், தாண்டவத் தைப் பற்றியும் ஆன கவிதை (வரிகள் - ரவி) ரசிக்கும்படி அமைந் திருக்கிறது. இடையே காற்று வாக்கில் வருவது போல் வரும் வயலின், குழல் ஒலியில் மிதக்கும் ஸரஸ்வதி ராகம், இந்த லயக் கோர்வைக்கு நயம் சேர்க்கிறது.

ஷர்ரத் கோத்துள்ள மூன்று இசைக் கோப்புகள்தான் 'செம கலக்கல்கள்'. 'த்வ மேவமாதா' என்று தொடங்கி, 'எந்தரோ மஹானுபாவுலு' என்று எதிர்பாராமல் வணங்கி (தலைப்பு: Salutation unto Thee), எங்கெங்கோ அலைபாய்ந்து, 'நகுமோமு கனலேனி' என்று முடியும் கொடுமையை என்னவென்று சொல்ல? கீபோர்டும், ஷர்ரத்தின் குரலும்தான் இதன் ஆதாரம். 'எந்தரோ' என்று ஆரம்பிக்கும்போது, சுரீ லென்று 'செண்டா' பாய்கிறது. எதிர் பாராத இடங்களில் முட்டிக் கொள்வது போல், எதிர்ப்படும் தாளவாத்தியங்களின் அசௌக்யமான கலவை! இந்த அதீத கற்பனைகளில் தயை செய்து தியாக ராஜ ரைத் தவிர்த்து விடுங்களேன்! பாவம் அவர்!

அடுத்து வருவது Piece for Peace. 'அஸதோமா சத்கமய' என்று துரித கதி யில் வரும் இதில் Peace, Piece-piece ஆகச் சிதறியிருக்கிறது.

'ஜயதி ஜயதி பாரத மாதா' என்ற கமாஸ் ராகப் பாடல் பலருக்குத் தெரிந் திருக்கும். நில்லுங்கள்; இது அதல்ல. ரஹ்மானின் 'வந்தே மாதரம்' ஸ்டைலில், பாரத மாதா பல நூதன அணி மணிகள் பூணுகிறாள். கடைசியில் 'கடவுளே' என்று கமாஸின் சாயலில் வந்து முடி கிறாள்.

கடைசியாக 'தூண்டுதல்' (stimulation) என்ற தலைப்பில், குரு காரைக்குடி மணி இசையையும், தாளத்தையும் லாகவமாக இணைத்திருக்கிறார். நல்லவேளையாக காபி ராகத்தில் அமைந்திருக்கும் இந்த வாத்திய விருந்தத்தில் முன் சொன்ன குழப்பக் கூத்துக்கள் இல்லை. இனிமை யாக இருக்கிறது. இதுதான் காரைக்குடி மணிக்கும் (மிருதங்கம்) திருவாலப்புத்தூர் கலியமூர்த்திக்கும் (தவில்) கொடுக்கப்பட் டுள்ள மிக நீ..........ண்ட தனி ஆவர்த்தன மேடை. பல கதிகளில் தனித்தனியாகவும், இணைந்தும் கனல் பொறி பறக்கும் தானக் கோர்வைகள் சீறிப் பாய்ந்து தூள் கிளப்புகின்றன. தவிலின் தொனி தனி யாகத் தெரிந்தாலும், மிருதங்கத்தின் கூர் மையான நாதத்துடன், தவிலின் ஆழ்ந்த சப்தம் இணைவது பிரமிப்பை ஏற்படுத்து கிறது.

இந்த சி.டியில் (CD) உயிரூட்டும் அம் சங்களாக இருப்பவை, பாலசாயியின் குழல்நாதம், துர்கா பிரசாதின் கோட்டு வாத்தியம், எம்பார் கண்ணனின் வய லினிசை, ராஜுவின் ஸாக்ஸபோன்.

ஷர்ரத்தின் கீபோர்ட் மற்றும் குரல் (பாலமுரளி கிருஷ்ணாவின் சாயல்) நன் றாக இருந்தாலும், அவை இந்த ஊடகத் தில் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம்.

- ஜி. ஸ்வாமிநாதன்

# புகழ் விளைத்த கழுகுமலை

ஆனந்தி

> கழுகுமலையடி வாரத்தில் உள்ள வீதிகளில் ஓயாமல் வேதம் ஒலிக்கிறது. சாம கீதம் கேட்கிறது. மலர்ச் சோலைகளிலுள்ள கிளிகளும் அதைக் கேட்டுக் கேட்டு வேதம் ஓதுகின்றனவாம்.

*தென்னுத் தமிழுக்குதவு சீலன்*
*துதி*
*செப்பணாமலைக்கும்*
*அனுகூலன் - வளர்*
*செழிய புகழ் விளைத்த கழுகு மலை*
*வளத்தை*
*தேனே! சொல்லுவேனே!*

ஆர்வத்துடன் கேட்கின்ற ஒரு பெண்ணை முன் வைத்து, அவளுக்கு இறைவன் பெருமையை எடுத்துச் சொல்வது கவி மரபு. அன்பு மிகுதியால் சொல்வதைக் கேட்க ஒரு கிளியோ, ஒரு பூவையோ, ஒரு ஸகியோ வேண்டு மல்லவா?

காவடிச் சிந்துகளை இயற்றிய அண்ணாமலை செட்டியார், முருகப் பெருமானிடம் அளவற்ற காதல் கொண்டவர். கழுகுமலை கோவிலில் குடிகொண்டுள்ள கருணை முருகனைப் போற்றி, அவர் பாடிய பாடல்களை என் தந்தையார் கல்கி அவர்கள் அடிக்கடி உற்சாகமாகப் பாடுவார். முருகப் பெருமான் அகத்திய முனிவருக்குத் தமிழை அளித்த தெய்வம் என்பதாலேயே ஓர் அன்பு.

*வீதிதோறும் ஆதி மறை வேதம் சிவ*
*வேதியர்கள் ஓது சாம கீதம் - அதை*
*மின்னுமலர்க்காவதனில் துன்னு*
*மடப் பூவையுடன்*
*வின்னும் கிள்ளைப் புள்ளும்;*


கழுகுமலையடிவாரத்தில் உள்ள வீதிகளில் ஓயாமல் வேதம் ஒலிக்கிறது. சாம கீதம் கேட்கிறது. மலர்ச் சோலைகளிலுள்ள கிளிகளும் அதைக் கேட்டுக் கேட்டு வேதம் ஓதுகின்றனவாம், தன் காதலி காது கேட்க.

*முத்தமிழ்சேர் வித்வஜனக் கூட்டம் -*
*கலை*
*முற்றிலும் உணர்ந்திடுங்*
*கொண்டாட்டம்- நெஞ்சில்*
*முன்னுகின்ற போது தோறும்*
*தென்மலையில் மேவு குறு*
*முனிக்கும் அச்சம் ஜனிக்கும்!*

முத்தமிழ் வித்தகர்கள் தமிழ்ப் பாடல்களை உணர்ந்து மகிழ்ந்து, கூட்டமாக இருந்து பாடிக் கொண்டாடுகிறார்கள். இதைப் பார்க்கும்போது, பொதிகை மலை குறு முனிக்கே மனத்தில் சற்று பயம் உண்டாகுமாம், நம்மை மிஞ்சி விட்டார்களே என்று!

இன்னும் பலவிதமாகக் கழுகு மலையின் அழகையும், வளத்தையும் சிறப்பையும் வர்ணித்து விட்டு,

# தெய்வத் தமிழ் நாட்டினிலே 21




"கள்ளவிழ் கடப்பமலர் வாகன் குறக்
கன்னியை அணைக்கும் அதி
மோகன் - வளர்
கழுகு மலை நகரின் வள
முழுமையும்என் நாவிலடங்
காதே - மட மாதே!"

என்று முடிக்கிறார் கவி.

அழகும் வளமும், முருகப் பெருமானின் கருணையும் மிகுந்த கழுகுமலை, கோவில்பட்டி வட்டத்தில், சங்கரன் கோவில் போகும் வழியில் இருக்கிறது.

குடைவரைக் கோயில். எழில் பொங்கும் முருகப் பெருமான் ஒரு முகத்தோடும், ஆறு கரங்களோடும் தரிசனம் தருகிறார். மையிலொடு இரு புறமும் வள்ளியும், தெய்வயானையும்,

முருகனைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். சந்நிதிக்கு எதிரில் நின்றால், அவர்களைப் பார்க்க இயலாது. குருக்கள் சொல்கிற இடத்தில் நின்று பார்த்தால் தான் தரிசனம் கிடைக்கும். பொதிகை மலையில் தவம் செய்யும் அகத்தியரைப் பார்த்துக் கொண்டு, முருகப் பெருமான் நிற்கிறாராம். அகத்தியருக்குத் தமிழ் அளித்த தலம். அதனாலேயே ஒரு சிறப்பு.

*"வேண்டும் அடியர் புலவர் வேண்ட*
*அரியபொருளை*
*வேண்டுமளவில் உதவும் —*
*பெருமாளே!"*

என்று அருணகிரிநாதர் பாடியதில் ஒரு சிறப்பு. ஒரு முகமும் ஆறு கரங்களும் கொண்ட வடிவம் ஒரு சிறப்பு. சம்பாதி முனிவருக்கு மோக்ஷம் அளித்ததால், ஒரு சிறப்பு. அருகில் தந்தையான ஜம்பு நாதரும் - அகிலாண்டேசுவரியும் எழுந்தருளியிருப்பது ஒரு சிறப்பு. துவார பாலகர்களாக வீரபாகுத்தேவரும், வீர மகேந்திரரும் நின்று பாதுகாப்பது ஒரு சிறப்பு. ஆம்பல் ஊருணியும், நோய் தீர்க்கும் குமார தீர்த்தமும் ஒரு சிறப்பு.

சம்பாதி முனிவர் என்பவர் யார் தெரியுமா? சாக்ஷாத் ஜடாயுவின் தமையனார். தம்பிக்கு அந்திமக்ரியைகளை ராமபிரான் செய்து விட்டார். தான் செய்யவில்லையே என்று வருந்தினார். தம்பியைக் காப்பாற்றத் தம் சிறகுகளையே பறிகொடுத்தத் தியாகி அல்லவா சம்பாதி!

ராமபிரான் வந்த போது, "சகோதரனுக்கு ஈமக் கடன் செய்யாத பாவியாகி விட்டேனே! அதற்கு ஒரு நிவாரணம் சொல்லுங்கள்" என்று வேண்டினார். "ஆம்பல் நதியில் மூழ்கி முருக வேளைப் பூஜித்தால், உன் மனம் சாந்தியடையும். எல்லாப் பாவங்களும் மறையும்" என்று கழுகாசலத்தில் உறையும் முருகனைப் பற்றி எடுத்துச் சொன்னார் ஸ்ரீ ராமர். "சம்பாதி உடனே கஜமுக பர்வதம், கழுகாசலம், குருகுமலை, கிருத்ரகிரி அரைமலை என்றெல்லாம் பெயருடைய மலைக்கு வந்து, முருகப் பெருமானைத் தரிசித்துப் பூஜித்து, முனிவராகும் தகுதி பெற்றார். இது தலபுராணம் கூறும் கதை. இதனால் சம்பாதிக்ஷேத்திரம் என்ற பெயரும் உண்டு.

முருகப் பெருமான் சந்நிதியை வலம் வர இயலாது. மலையைத் தான் வலம் வரவேண்டும். நேரமும் சக்தியும் உள்ளவர்கள், கிரிப்ரதக்ஷிணம் செய்யலாம். தெம்பு உள்ளவர்கள் முருகனைத் தரிசித்து விட்டு, மலைமீது ஏறி தொல் பொருள் ஆய்வுத்துறையினால் நிர்வகிக்கப்பட்டு வரும் வெட்டுவான் கோயிலையும், சமணர் பள்ளியையும் பார்க்கலாம். இன்னும் கொஞ்சம் மேலே போனால், விநாயகப் பெருமானையும் தரிசிக்கலாம்.

முருகன் கோவில் எட்டையபுரம் சமஸ்தானத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. நேர்த்தியாகப் பூஜைகள் நடந்து வருகின்றன. அதிமதுர பாண்டியன் கட்டிய கோயில் என்கிறார் நிர்வாகப் பொறுப்பில் உள்ள செயல் அலுவலர்.


கோவில் திருப்பணிகளை இன்றும் எட்டயபுரமன்னரே செய்து வருகிறார். வாகனங்களும், ஆபரணங்களும் செய்து, ஆறுமுக நாயனாரை வழிபாடு செய்திருக்கிறார்கள். தைப்பூசமும், பங்குனி உத்திரமும் சிறப்பான விழாக்கள்.

(தொடரும்)

"என்ன, இந்தப் பள்ளிக்கூட ஸ்போர்ட்ஸ் டேல, 'கட்சித் தாவல்', 'கோஷ்டி ஓட்டம்', 'காலை வாருதல்' என்றெல்லாம் பந்தயங்கள் நடக்குதே!"

"அரசியல்ல ஈடுபட்டு சம்பாதிச்ச பணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடமாச்சே?"

- பம்மல் நாகராஜன்



## இராமநாதபுரம் ஸ்பெஷல்

# கரடியாக மாறிய தம்பி!



—கவர் ஸ்டோரி

## 1000/- ரூபாய் பரிசுப் போட்டி!

# சரியா, தவறா?

—விளையாட்டு


# கோகுலம்

ஏப்ரல் 2004 ரூ.6/- மட்டுமே

# "என் புள்ளையே

கொஞ்சம் காற்றாட வெளியே வந்து நின்று கொண்டிருந்தேன். அப்போதுதான் அந்த அம்மாள் அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்களிடம் வேலை கேட்டுக் கொண்டிருப்பதைக் காண நேர்ந்தது. வீட்டு வேலைகள் எதுவானாலும் செய்வாளாம்.

"எங்கிருந்தும்மா வர்றீங்க?"

"திருப்பூரு அம்முணி."

"திருப்பூர்ல இருந்தா இங்க வந்து வேலை கேக்கறீங்க? இங்க எங்காவது குடி வந்திருக்கீங்களா?"

"இல்லீங்க. என் மகன் திருப்பூர்ல இருக்கறான். இத்தனை நாள் அவங்கூடத்தான் இருந்தன். அவன் அடிச்சு முடுக்கியுட்டுட்டான். அதனால ஊரை விட்டு வந்துட்டேன்."

"ஏம்மா, பொண்டாட்டி பேச்சக் கேட்டுட்டா அப்புடிப் பண்ணினான் உங்க பையன்?" என்று கேட்டாள் அவளைப் போல் வயதான ஒரு பெண்மணி.

"அய்யோ, இல்லீங்க. மருமக ஒரு அப்புராணிங்க. மகன்தான் குடிச்சுக் கூத்தடிச்சுட்டு, சம்பாரிக்கற காசை ஊதாரித்தனமா செலவு பண்ணிட்டுத் திரிவான். நானும் எத்தனையோ புத்தி சொல்லிப் பாத்துட்டன். திருந்துல. பொண்டாட்டி கேக்கப் போனா அவள அடிப்பான். ரெண்டு நா முந்தி அவகூட பெரிய தகராறாப் போச்சு. பொண்டாட்டிக்கு சொல்லிக் குடுத்து அவள உசுப்பியுடறது நாந்தான்னு போட்டு என்னையவும் அடிச்சுட்டான். அடிச்சாலும் தேவுலன்னு நான் பொறுத்திருப்பன். நீ இங்க இருந்தீன்னா என் நிம்மதியே போயிடும். எங்கயாவது தொலைஞ்சு நாசமாப் போ'ன்னு பொடணியப் புடிச்சு வெளிய தள்ளீட்டான்."

"அடப் பாவமே!"

அவளது கதையைக் கேட்டு பெண்கள் பரிதாப்ப்பட்டார்கள். ஆனால், வேலை கொடுக்க யாரும் தயாரில்லை. பெரும்பாலானவர்களுக்கு வேலைக்காரியை வைத்துக் கொள்ள வேண்டிய தேவை இல்லை. வீட்டுப் பெண்களே செய்து கொள்வார்கள். சிலருக்கு ஏற்கெனவே வேலைக்காரிகள் இருந்தனர்.

எனக்கு அந்த அம்மாளை வேலைக்கு வைத்துக் கொள்ளலாமா என்று யோசனை. நான் இங்கே தனியாகத்தான் இருக்கிறேன். ஹோட்டல் சாப்பாடு உடம்புக்கு ஒத்துக் கொள்வதில்லை. பணமும் கூடுதலாக செலவு. இவளை சமையலுக்கு வைத்துக் கொண்டால், வீட்டுச் சாப்பாடு சாப்பிடலாம். வயிற்று உபாதைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

"சரிங்கம்மா. சம்பளம் எவ்வளவு எதிர்பார்க்கறீங்க?" என்று கேட்டேன்.

"சம்பளம் எதுக்குங்க தம்பி? எனக்கு வயித்துக்கு இத்தினி சோறு, இருக்கறதுக்கு எடம் கெடைச்சாப் போதும்."

இது அரிய வாய்ப்புதான். சம்பளம்

## காணவில்லை

**பெயர் : சுப்பம்மாள்,**
**வயது : 60**

**காணாமல் போன அன்று பச்சை நிற புடைவை அணிந்திருந்தார். மூக்குக் கண்ணாடி அணிந்திருப்பார். இவரைப் பற்றி தகவல் தெரிந்தால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: தங்கவேலு, எண் 14, பாரதி தெரு, திருப்பூர் - 4**

**அன்புள்ள அம்மா, என்னை மன்னித்து விடு. நீ எங்கிருந்தாலும் உடனே வரவும். உனக்காக காத்திருக்கிறேன்.**

**இப்படிக்கு**
**உன் அன்பு மகன்**
**தங்கவேலு**



பேச வெளியே அழைத்துச் சென்றார்.

"ஏன் தம்பி, முன்னப் பின்ன தெரியாதவங்களை எப்படி வேலைக்கு வெச்சுக்கறது? இந்த மாதிரி வேலை கேட்டு வர்றவங்கள நம்ப முடியாது. ஆள் அசந்த நேரத்துல கெடைக்கறத சுருட்டிட்டுப் போயிடுவாங்க" என்றார்.

"அவங்களப் பாத்தா அப்படித் தெரியலிங்க" என்று எனக்குத் தெரிய வந்த அவளது வாழ்க்கைச் சுருக்கத்தைச் சொன்னேன். அவர் அதை முழு மனதாய் நம்பவில்லை. அப்படியே அவள் திருடுவதாயினும் என் அறையில் விலை மதிப்புள்ள, அவள் எடுத்துச் செல்லக்கூடிய விதமான பொருட்கள் ஏதும் இல்லை என்பதை அவருக்குத் தெளிவு படுத்தினேன்.

"சரி... உங்க பிரியம்..." என்றார் அவர்.

# இல்லை

ஷா

வேண்டாத வேலைக்காரி. சட்டென்று ஒப்புக் கொண்டேன்.

**ம**றுநாள் அவளைப் பற்றிய கூடுதல் தகவல்கள் தெரிந்தன. பெயர் சுப்பம்மாள். மகன் பனியன் கம்பெனியில் கட்டிங் மாஸ்டர். அவனுக்குக் குழந்தைகள் இல்லை. மருமகள் ஒரு தடவை உண்டாகி அவனது அடி, உதைகளாலேயே கர்ப்பம் கலைந்து விட்டது.

மேலுமான சங்கடங்களை அவள் சொல்லிக் கொண்டிருந்தபோது, வீட்டு உரிமையாளர் தமது மனைவியால் அனுப்பப்பட்டு என்னைச் சந்திக்க வந்தார். "இவுங்க தான் அந்தப் பொம்பளையா?" என்று கேட்டு விட்டு என்னிடம் தனியே

**சு**ப்பம்மா தனது துணிமணிகள் அடங்கிய மூட்டையோடு என் அறையிலேயே தங்கிக் கொண்டாள்.

மறுநாள் கையிருப்பை அனுசரித்து மண்ணெண்ணெய் ஸ்டவ்வும் அத்தியாவசியப் பாத்திரங்களும் வாங்கி, பால் காய்ச்சி உடனே சமையலையும் துவக்கி விட்டாள்.

"என் கைப் பக்குவம் உனக்குப் புடிக்குமோ புடிக்காதோ" என்றபடியே பரிமாறினாள்.

தொழில் ரீதியான சமையல்காரி இல்லை. அவளது சமையல் மெச்சும் படியாக இல்லைதான். என்றாலும் மோசம் கிடையாது. வாய்க்கு ருசியாகவே இருந்தது. அதைவிட அவள் பக்கத்தி லேயே உட்கார்ந்து கொண்டு பார்த்துப் பார்த்துப் பரிமாறிய வாஞ்சை, என்னை ஒரு பிடி அதிகமாகவே சாப்பிடச் செய்தது.

சுப்பம்மாவால் மூன்று வேளையும் வயிறாரச் சாப்பிட்டேன். பெட் காஃபி சுகத்தையும் அனுபவித்தேன். அறையில் உள்ளபோது இடை நேரங்களிலும் சரியான சமயத்துக்கு டீ, அதனுடன் கொறிக்க பலகாரங்கள் வந்தன. விசேஷ நாட்களில் வடை, பாயசத்தோடு விருந்து.

அறைகள் எப்போதும் சுத்தமாக இருந் தன. பொருள்களின் அலங்கோலம் உட னுக்குடன் அடுக்கி ஒழுங்குபடுத்தப்பட் டது. அழுக்குத் துணிகள் தேங்காமல், இரண்டு நாட்களுக்கு ஒரு முறை துவைக் கப்பட்டு இஸ்திரியும் போடப்பட்டுவிடும்.

காலையில் குளிக்க தண்ணீர் எடுத்து வைப்பதிலிருந்து, இரவில் தூங்க படுக்கை விரித்து வைப்பது வரை அவளின் பணி விடைகள்.

"இதெல்லாம் நான் செஞ்சுக்க மாட் டனா?" என்று தடுத்தால், "அட, விடு கண்ணு. இது என்ன பெரிய காரியமா?" என்பாள்.

மொத்தத்தில் நான் குடியிருந்த அறையை வீடாக ஆக்கிவிட்டாள். அதில் அவள் ஒரு வேலைக்காரியாக அல்ல. வீட்டு மனுஷியாகவே திகழ்ந்தாள். அதைப் பார்த்து, அறைக்கு வந்த வாடிக்கையாளர்கள் சிலர், "உங்க அம்மாங்களா?" என்று கேட்டார்கள். "அம்மா மாதிரித் தான்" என்று சொன்ன தற்கு அவள் ரொம்ப சந்தோஷப்பட்டாள்.

**நா**ன் தொழிற்துறை ஓவியனாக வேலை செய்து கொண்டிருந்தேன். நகரத் தில் உள்ள கலையகங்களில் சைன் போர்டுகள், பேனர்கள், வால் பெயிண்ட் டிங், ஹோர்டிங் போன்றவற்றை சப் காண்ட்ராக்ட்டாக எடுத்து, செய்து கொடுப்பது. இது போக சொந்த ஆர்டர் கள். அவ்வப்போது அறையில் வைத்து வேலை செய்வதும் உண்டு. அது இரவு



# தூசி தட்டிய ஹாட்டி

டி.வி.யில் வெளிவரும் ஏதாவது சீரியல் போரடிச்சாலோ, திக்கிவிக்கி தடுமாறினாலோ, உடனே வெளிநாட்டுக்குப் போய் விடுவார்கள். அல்லது, கதைக்

நேரங்களிலோ, விடுமுறை நாட்களிலோ இருக்கும்.

அப்படி அறையில் கடவுள் படங்கள் ஏதேனும் வரைவதாயிருந்தால், அப்போது சிகரெட் புகைக்கக் கூடாது என்று கண்டிப்பாள் சுப்பம்மாள். நான் எழுந்து அப்பால் சென்று புகைப்பேன்.

தினமும் வேலைக்குக் கிளம்பும்போது நான் செல்லும் திசை பார்த்துக் கும்பிட்டு வழியனுப்புவாள். பயணம் எவ்வித இடைஞ்சல் இல்லாமல் இருக்கவும், போகிற காரியம் நிறைவேறவுமான அவளது பிரார்த்தனை அது.

இப்படி என் மீது அக்கறையோடு உள்ள அவளுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. விடுமுறைகளில் அவளை சினிமாவுக்கும், பண்டிகைகளில் கோவில்களுக்கும் கூட்டிச் சென்றேன்.

இரண்டு சேலைகள் வாங்கிக் கொடுத் தேன். அந்த நேரங்களில் அவளது முகத்தில் வெளிப்பட்ட மகிழ்ச்சியில் எனக்குத் திருப்தி. இருப்பினும், அந்த மகிழ்ச்சியிலும் ஒரு குறை இருந்ததை உணர முடிந்தது.

**ஒ**ரு நாள் காலை, பக்கத்து குடித் தனக்காரர் தங்கமணி, "உங்க வேலைக்

களனை மாற்றி தூசு தட்டி சாம்பிராணி புகை போடுவார்கள்.

'ஜெயா'வில் ஒளிபரப்பாகும் 'வீட்டுக்கு வீடு லூட்டி'க்கும் கொஞ்சம் கமகம பவுடர் அடித்து பியூட்டி சேர்த்திருக்கிறார்கள்.

நானூற்று சொச்சம் எபிஸோடுகளைத் தாண்டியுள்ள நிலையில் 'வீட்டுக்கு வீடு லூட்டி' முதல் பாகத்துக்கு 'சுபம்' போட்டுவிட்டு, இரண்டாம் பாகத்தைத் தயார் செய்திருக்கிறார்கள்.

இதில், முக்கிய வேடத்தில் நடிகை ஊர்வசி நடிக்கிறார். இவரது கேரக்டர் என்ன தெரியுமா? எந்த ஒரு டி.வி. தொடரையும் விடாமல் பார்க்கும் சீரியல் பைத்தியம்.

- டாலி

காரம்மா மகன் அவங்களக் 'காணவில்லை'ன்னு 'தினமலர்'ல விளம்பரம் குடுத்திருக்காரு" என்று சொன்னார். சலூனுக்குப் போனவர் தற்செயலாகப் பார்த்தாராம்.

நான் போய் பெட்டிக் கடையில் செய்தித்தாள் வாங்கி வந்தேன். இதற்குள் சுற்றுப் பகுதி முழுக்கவே அந்தச் செய்தி பரவிவிட்டது. பலரும் என்னை விசாரிக்கத் தொடங்கிவிட்டார்கள். வீட்டிலும் ஆள் கூட்டம் சேர்ந்து விட்டது.

சுப்பம்மாவிடம் விளம்பரத்தைக் காட்டினேன். அவளது பழைய போட்டோவுடன், மகனைத் தொடர்பு கொள்ள முழு முகவரியும் கொடுக்கப்பட்டிருந்தது.

"பெத்த தாயின்னு பாக்காம அடிச்சு முடுக்கியுட்டுப் போட்டு, இத்தன மாசத்துக்கப்பறம் காணமுன்னு விளம்பரம் குடுக்கறானா? அவன் என் புள்ளையே இல்லே...?" என்றாள் சுப்பம்மாள்.

"ஏதோ கோவத்துல அப்படிப் பண்ணிட்டாரு. இப்ப தப்பை உணர்ந்திருப்பாரு" என்று நாங்கள் சொன்னோம். அவள் சமாதானமாகவில்லை.

"அவன் மூஞ்சிலயே முழிக்கமாட்டேன்" என்று வெறுப்பைக் காட்டிவிட்டு சமையற்கட்டுக்குள் போய்விட்டாள்.

அன்று ஞாயிறானதால் நான் வீட்டிலேயே இருந்தேன். வேலையும் இருந்தது. அதைச் செய்து முடிக்க இரவாகிவிட்டது.

சாப்பிட்டுவிட்டு சுப்பம்மாள் வழக்கம் போல சமையலறையில் படுத்துக் கொண்டாள். மற்ற அறையில் நான். எனக்கு தூக்கம் வரவில்லை. சுப்பம்மாளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன்.

மகனிடம் செல்ல மறுத்து இப்படி வீம்பு பிடிக்கிறாளே... இனி என்ன செய்வது? இன்னும் ஓரிரு வருடங்கள் நான் அவளுக்கு ஆதரவளிக்க முடியும். பிறகு எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டால் அவளது தேவை இராது. அப்புறம் அவள் என்ன செய்வாள்? மற்றொரு வீட்டைத் தேடிப் போக வேண்டியது தானா? இப்படியே எத்தனை காலம் இருந்துவிட முடியும்? அவளால் பாடுபட இயலாமல் ஆகிறபோது, யார் அவளுக்கு ஆதரவளிப்பார்கள்?

எனது சிந்தனைகள் என்னை வருத்திக் கொண்டிருந்தபோது, சமையலறை விளக்கு எரிந்தது. அந்த வெளிச்சத்தில் சுப்பம்மாள் இங்கே வருவது தெரிந்தது. பாத்ரூமுக்குப் போவாளாயிருக்கும் என்று நினைத்தேன். அவளோ, என்னை உன்னிப்பாகக் கவனித்து விட்டு டேபிளுக்குப் பக்கமாக நின்றாள். என்னவோ கள்ளத்தனம் அந்தச் செய்கையில்! நான் உஷாராகி அரைக்கண்ணாக மூடிக் கொண்டு இருட்டில் அசையாமல் கிடந்தேன்.

சுப்பம்மாள் டேபிள் மீதிருந்த தினமலரை எடுத்தாள். வெளிச்சத்துக்குச் சென்று பக்கங்களைப் புரட்டி, தன்னைப் பற்றி மகன் கொடுத்திருந்த விளம்பரத்தைப் பார்த்தாள். அதிலேயே பார்வையாக வெகு நேரம் நின்றாள். அவள் செய்தித்தாளை திரும்பக் கொண்டு வந்து வைக்கிறபோது, அவளது கண்கள் கலங்கியிருந்தன. சமையற்கட்டுக்குப் போய் விளக்கணைத்துப் படுத்துக் கொண்டாள். அந்த இருளிலிருந்து சன்னமான விசும்பல் கேட்டது.

அவள் தூங்கிய பிறகு அந்த விளம்பரத்தை எடுத்து, முகவரியைப் பார்த்து, அவளது மகனுக்குக் கடிதம் எழுதினேன். பின்னர் முழு நிறைவோடு தூங்கினேன்.●

# ஐயோ - டேட்டா!






# கதர் கதிரேசன்



நாற்பது வருடங்களாக காங்கிரஸில் பணியாற்றும் கதர் கதிரேசனின் ஐயோ (பாவம்!) டேட்டா:

பெயர் : க.கதிரேசன்

வயது, படிப்பு : 57, பழைய எஸ்.எஸ்.எல்.ஸி.

பிறந்தது : காளையார்கோயில் அருகே உறுதிக் கோட்டை கிராமம்.

காங்கிரஸ் பற்று : அப்பா கமலக்கண்ணன் சுதந்திரப் போராட்டத் தியாகி. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் கொடுமைகளைக் கண்டித்து, திருவாடனை தாலுகா ஆபீசை தீ வைத்துக் கொளுத்தியவர்களில் ஒருவர். அப்பா மட்டுமல்ல, மாமனார் சொர்ணக்காளையும் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் INAயின் படை வீரர். பிற்காலத்தில் அதற்காக இந்திய அரசு ஐந்து ஏக்கர் நிலமும், நிதியுதவியும், பென்ஷனும் தர முன் வந்து வற்புறுத்தியபோது, அதனை மறுத்து விட்டவர்.

| | | |
|---|---|---|
| குடும்பம் | : | மனைவி மணிமேகலை. இரண்டு மகன்கள். அதில் ஒரு மகன் சமீபத்தில் விபத்து ஒன்றில் மரணம் அடைந்து விட்டார். இன்னொரு மகன், மருமகள், பேரப் பிள்ளைகள் என அனைவரும் வாடகை வீட்டில். |
| கண்ட பலன் | : | இதுவரை பதினாறு முறை சிறைவாசம். மனைவியின் மனக்குறை - தான் போட்டு வந்த பத்து பவுன் நகையை கட்சி வேலைக்கு என கணவர் கொஞ்சம் கொஞ்சமாய் கரைத்து விட்டது. |
| இழந்தது | : | 1977ல் ஜனதா ஆட்சிக் காலத்தில் இந்திராகாந்தி சிறையில் அடைக்கப்பட்ட போது, காவல்துறையினரால் திருச்சியில் கைது செய்யப்பட்ட காங்கிரஸ் தொண்டர்களில் இவரும் ஒருவர். அதனால் திருச்சி பாய்லர் ஆலை தற்காலிக ஊழியர் வேலையையும் நிரந்தரமாய் இழந்தது. |
| தொழில் | : | மணவறை பூ அலங்கார வேலை |
| உயிர் மூச்சு | : | மனைவி, மக்கள் எல்லாம் இரண்டாம் பட்சம். காங்கிரஸ் ஒன்றுதான் உயிர்மூச்சு. |
| மறக்க முடியாதது | : | ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தபோது, பீகாரில் காங்கிரஸ் சேவாதள தொண்டர்களின் பதின்மூன்று நாள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டது. |

தொகுப்பு, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

# ப.சிதம்பரம்



# இன்னும் எத்தனைக் காலம்?

## நமக்கே உரிமையாம் 22

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முறையும் - என் மனக் கண் முன் ஒரு சித்திரம் தெரிகிறது. அந்தச் சித்திரத்தில் தெரிபவர் ஓர் இந்தியக் குடிமகன். அவர் எட்டு மணி நேரம் அல்ல, பத்து அல்லது பன்னிரண்டு மணி நேரம் உழைப்பதற்குத் தயாராக இருக்கிறார். அப்படி உழைக்கவும் செய்கிறார். ஒரு நாள் முழுவதும் உழைத்து விட்டு, அவர் வீடு திரும்பும் போது அவரிடம் என்ன இருக்கிறது? ஓர் ஓலைக் குடிசை; அரை வயிறு கஞ்சி குடிப்பதற்குப் போதுமான மட்டரக அரிசி; ஒரு மாற்று வேட்டி, சட்டை; கிழிந்த பாய்; ஏழ்மையைத் தவிர எதையுமே அறியாத குடும்பம். இப்படி இருப்பவர்கள் ஏதோ சோம்பேறிகள் என்றால், அது அவர்கள் தலையெழுத்து என்று ஒதுக்கிவிடலாம். ஆனால், இப்படி இருப்போர் உழைப்பாளிகள்.

கடந்த வாரம் இந்த ஏழை வர்க்கத்தின் பிரதிநிதிகளில் சிலர் என்னைச் சந்தித்தார்கள். அவர்கள் அனைவருமே குடும்பத் தலைவிகள். அவர்கள் சொன்ன செய்திகளில் சில:

ரேஷன் கடைகளில் ஊழல் தலைவிரித்தாடுகிறது. தட்டிக்கேட்டால் மிரட்டுகிறார்கள்.

இந்த ஆண்டு இலவச வேட்டி ஒன்று, இலவசச் சேலை ஒன்று ரேஷன் கடைகள் மூலமாகத் தந்தார்கள் (கடந்த ஆண்டு இலவசச் சேலைக்கு ரூ. 40 வாங்கிக் கொண்டார்களாம்!). இந்த ஆண்டு உண்மையிலேயே இலவசம்தான். சேலை ரூ.100 மதிப்புள்ளது. ஆனால் துவைத்தவுடன் சுருங்கி விடுகிறது.

குடி தண்ணீர் மிக மோசம். நாற்றம் அடிக்கிறது. அழுக்காக வருகிறது.

காவல் நிலையத்துக்குப் போனால், புகாரை வாங்கி எழுதுவதற்கே காசு கேட்கிறார்கள். பிறகு எதிர் 'பார்ட்டி'யிடம் காசு வாங்கிக் கொண்டு எங்கள் புகாரைக் கிழித்துப் போட்டு விடுகிறார்கள்.

முதியோர் பென்ஷன் பல மாதங்களாகக் கொடுக்கவில்லை.

இவற்றை எல்லாம் கேட்டு நான் வேதனையடைந்தேன்.





"என்னப்பா, உன் பையன் உன்கிட்ட பத்திரத்தில கையெழுத்து வாங்கிட்டுப் போறான்?"

"மார்க் குறைவா இருந்ததால வேற எதில வேணும்னாலும் கையெழுத்துப் போடுறேன். ஆனா மார்க் லிஸ்ட்ல கையெழுத்துப் போட மாட்டேன்னு சொல்லித் தொலைச்சுட்டேன்!"

- பி. கவிதா, நாமகிரிப்பேட்டை

ஐந்தாண்டுத் திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், நலத் திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள், ரேஷன் கடைகள், மகளிர் காவல் நிலையங்கள், முதியோர் பென்ஷன் என்பனவெல்லாம், 'நன்மை பயக்கும்' என்ற நோக்கத்துடன் தொடங்கப்பட்டன. இவற்றுக்காகப் பல்லாயிரம் கோடி ரூபாய்களை மத்திய, மாநில அரசுகள் ஒவ்வொரு ஆண்டும் செலவழிக்கின்றன. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், இவற்றை நிர்வகிப்பதற்கும் ஆயிரக் கணக்கான அரசு ஊழியர்கள் - உயர் அதிகாரிகள் முதல் கடைநிலை ஊழியர் வரை - இருக்கிறார்கள். இருந்தபோதிலும், பொது மக்கள் தங்களுடைய அனுபவத்தின் அடிப்படையில், இந்தத் திட்டங்களால் எந்த நன்மையும் கிடையாது என்ற முடிவுக்கு வருகிறார்கள். ஏன்?

நாடாளுமன்றமும், சட்டமன்றங்களும் நிறைவேற்றும் சட்டங்கள் எல்லாம் நன்மை தரும் சட்டங்கள் அல்ல. நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள் எல்லாம் நன்மை பயக்கும் தீர்ப்புகள் அல்ல. அதைப் போலவே, அரசு செயல்படுத்தும் திட்டங்கள் எல்லாம் நன்மை பயக்கும் திட்டங்கள் அல்ல.

அரசின் திட்டங்கள் தோல்வி அடைவதற்கு முக்கியக்காரணங்கள் இரண்டு. ஊழல், நிர்வாகத் திறமையின்மை.

ஏழை மக்களின் அனுபவங்களைக் கேட்கும்போது, இந்தத் திட்டங்கள் தேவையா என்ற கேள்வி எழுகிறது. இந்தத் திட்டங்களையெல்லாம் ரத்து செய்து விட்டால் என்ன என்று தோன்றுகிறது. ரேஷன் கடைகளை நீக்கிவிட்டால், சந்தைப் பொருளாதாரத்தில் யாராவது சிறிய கடைகளைத் திறந்து, அரிசி, சர்க்கரை போன்ற பொருள்களை நியாய விலைகளில் விற்க முன் வர மாட்டார்களா?

முதியோர் பென்ஷனுக்குத் தகுதியுள்ளோர் ஒவ்வொருவர் பெயரிலும் ஒரு வங்கிக் கணக்கைத் தொடங்கி, ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில், அந்த வங்கிக் கணக்கில் முதியோர் பென்ஷன் தொகையை வரவு வைக்க முடியாதா?

மகளிர் காவல் நிலையங்களால் மொத்தத்தில் நன்மையா, தீமையா? மற்ற பொது காவல் நிலையங்களுக்கும், மகளிர் காவல் நிலையங்களுக்கும் அவர்

## மாண்புமிகு டாப் டென் - 5 போட்டி முடிவு

### வைகோ பெற்றது 60/100

எல்லோரும் ஏழு வள்ளல்களையும் தோற்கடிச்சு வைகோவுக்கு மார்க்கை வாரி வழங்கிட்டீங்க!

'தி ஹிஸ்துஸ்தான் டைம்ஸ்' சிறப்புச் செய்தியாளர் ஜி.சி. சேகர் மிகுந்த உற்சாகத்துடன் கலிங்கப்பட்டிக்காரருக்கு மார்க் போட்டுத் தந்தார். அவர் போட்ட அதே மதிப்பெண்ணை ஐந்து வாசகர்கள் போட்டிருந்தாங்க. குலுக்கிப் போட்டதில் சினிமா டிக்கெட் பெற்ற அதிர்ஷ்டசாலி :

**மு. நடராஜன்**, 452, டாக்டர் அம்பேத்கார் சாலை, அசோக் நகர், லாஸ்பேட்டை, புதுச்சேரி - 605 008.



• வைகோ

களுடைய அணுகுமுறையிலோ, நேர்மையிலோ, திறமையிலோ ஏதாவது வேறுபாடுகள் இருக்கின்றனவா?

அரசு ஒரு திட்டத்தை அறிவித்தவுடன், அது ஏதோ பெரிய நன்மையைத் தந்து விடும் என்று எளிய மக்கள் நம்புகிறார்கள். ஆனால், அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்போது, அதே எளிய மக்கள் ஏமாற்றம் அடைகிறார்கள். என்னைப் பொறுத்தவரை, எந்தத் திட்ட அறிவிப்பையும் கண்டு நான் பெரிய எதிர்பார்ப்புகளை வளர்த்துக் கொள்வதில்லை. ஆகவே, அந்தத் திட்டம் நிலை தடுமாறும்போது நான் ஏமாற்றமும் அடைவதில்லை.

ஒரு திட்டம் வெற்றி பெற வேண்டுமென்றால், அத்திட்டத்தின் வடிவம் முக்கியம். அந்தத் திட்டத்தை வடிப்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். எங்கெல்லாம் அந்தத் திட்டத்திற்குத் தடங்கல் ஏற்படக் கூடும், எப்படியெல்லாம் அந்தத் திட்டம் சிதைக்கப்படும், எங்கு ஊழலுக்கு வழி இருக்கிறது என்பதையெல்லாம் நுணுக்கமாக ஆராய்ந்த பிறகே திட்டத்தை அறிவிக்க வேண்டும். பிறகு அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் போது, அதனைக் கண்காணிக்க வேண்டும். பயனாளிகளை அடிக்கடி சந்தித்து அவர்களுக்குத் திட்டத்தின் பயன்களை விளக்கி, அப்பயன்கள் அவர்களுக்குக் கிடைக்கின்றனவா என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். நமக்குக் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு, திட்டத்தைச் செயல்படுத்துவதில் தேவையான மாறுதல்களை அவ்வப்போது செய்ய வேண்டும். ஒவ்வொரு காலாண்டும் அத்திட்டத்தைத் தணிக்கை செய்ய வேண்டும். ஒரு திட்டம் முழுமையாக நிறைவேறிய பிறகு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றியதில் கற்ற பாடங்களை ஆராய வேண்டும். இதுவே நல்ல நிர்வாகம். இதுவே நல்லாட்சி.

எந்த அரசும் இதுபோன்ற வடிவமைத்த நிர்வாகத்தில் அக்கறை காட்டுவது கிடையாது. அதிரடி அறிவிப்புகள், அறிக்கைகள், விளம்பரங்கள் ஆகியவற்றில் செலுத்தும் அக்கறையில், நூறில் ஒரு பங்கைக் கூட நிர்வாகத்தில் செலுத்துவது கிடையாது. ஆகவேதான் பல திட்டங்கள் தோல்வி அடைகின்றன.

கடந்த முப்பது ஆண்டுகளில் பல 'வறுமை ஒழிப்புத் திட்டங்கள்' இந்த நாட்டில் நிறைவேற்றப்பட்டன. ஆனால், வறுமை முற்றிலும் ஒழியவில்லை. வறுமை ஒழிப்புத் திட்டங்களால் வறுமையை ஒழிக்க முடியாது என்ற கருத்துக் கூட பரவலாக இருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் மானியங்களுக்கு ஆகும் செலவு, வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு ஆகும் செலவு ஆகியவற்றைக் கூட்டி, அந்தத் தொகையைப் பிரித்து, வறுமையிலிருக்கும் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளித்தால், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு ஆண்டும் சில ஆயிரம் ரூபாய்களை உதவித் தொகையாக வழங்க முடியும்!

(தொடரும்)

படம் : மீடியா ராமு

ஜி.வி. சேகர் கணிப்பு

| | தகுதி | முழு மதிப்பெண் | வைகோ பெற்றது |
|---|---|---|---|
| 1. | தலைமைப் பண்பு (லீடர்ஷிப் குவாலிடி, கரிசுமா) | 10 | 7 |
| 2. | முடிவெடுக்கும் திறன் | 10 | 5 |
| 3. | கறைபடாத கரங்கள் | 10 | 6 |
| 4. | அரசியல் சாணக்கியம் | 10 | 4 |
| 5. | மனித நேயம் | 10 | 6 |
| 6. | தொண்டர்களோடு தோழமை | 10 | 7 |
| 7. | மேடைப் பேச்சு | 10 | 7 |
| 8. | மாற்றுக் கட்சியினரை மதிக்கும் போக்கு | 10 | 7 |
| 9. | தனிமனித ஒழுக்கம் | 10 | 6 |
| 10. | நிர்வாகத் திறமை | 10 | 5 |
| | மொத்தம் | 100 | 60 |



• 'தி ஹிந்துஸ்தான் டைம்ஸ்' சிறப்புச் செய்தியாளர் ஜி.வி. சேகர்

பருக பருக ஆனந்தம்
அதிக ஆனந்தம்

Jeeva Coffee

ESTD 1947

சுத்தமான தஞ்சாவூர் டிகிரி காப்பிக்கு

# ஜீவா காபி

Contact :
FREE HOME DELIVERY
28444725 / 28442667
(Chennai)

திருமணங்கள் மற்றும்
அனைத்து விசேஷங்களுக்கும்

100% பியூர் பில்டர்
காபி பவுடர்

தயாரிப்பாளர்கள்:

## ஜீவா காபி ஒர்க்ஸ்

28, பி.வி. நாயக்கன் தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

டெல்லி, மும்பை, கொல்கத்தா. E-mail:sales@jeevacoffee.com







# செய்திகள், திரிப்பது செம்பியன்

''மண்ணின் மைந்தனா அல்லது இத்தாலிய அன்டோனியோ மெய்னோவா? யார் பிரதமராக வேண்டும்? நீங்களே சொல்லுங்கள்!'' என்றார் ஜெயலலிதா.

''மண்ணின் மைந்தன்! மண்ணின் மைந்தன்!'' என்று உரக்கக் கத்தினேன்.

என்னுடைய கர்த்தபக் குரல் கூட்டத்தினரின் கூச்சலுக்கும் மேலாக ஜெ.யின் காதுகளைத் துளைக்கவே, திரும்பிப் பார்த்தார்.

''அட செம்பியனா! நீ கூட என் பக்கம் சேர்ந்துட்டியா!'' என்றார் அதிசயித்து.

''ஆமாங்க!'' என்று உரக்கக் கூறிவிட்டு, மேடைமீது தாவி அருகில் போய் நின்று, ''அதாவது ராகுல்லை மனசில் நினைத்துக் கொண்டு சொன்னேன்'' என்று மெல்லிய குரலில் தெரிவித்தேன்.

''அதானே பார்த்தேன்; இதையே இந்த இடத்துல மைக் முன்னால் நின்று சொல்லுவியா? தைரியம் இருக்கா?'' என்று சவால் விட்டார்.

''ஐயோ! மணிசங்கர் அய்யருக்கு நேர்ந்த கதி எனக்குத் தெரியாதா என்ன, ஆளை விடுங்க...''

''அப்படி வா வழிக்கு...''

''அது சரிங்க, உங்க கேஸ் தோற்றுப் போச்சே... 'பொடா மறு ஆய்வுக் குழுவுக்கு விசாரணை நடத்த நிறைய அதிகாரம் உண்டு'ன்னு உச்சநீதிமன்றம் சொன்னதோடு விடலை; 'தமிழ்நாட்டில் பொடா சட்டம் துஷ்பிரயோகம் ஆகுதுன்னு புகார்கள் எழுந்ததால் தான் மறு ஆய்வுக்குழு விசாரிக்கு'துன்னு வேற உங்க தலைல குட்டிட்டாங்களே...''

''ஹஉம்'' என்று கர்ஜித்தார் ஜெ. ''பொடா இல்லாமலேயே இரும்புக்கரம் கொண்டு என்னால ஆட்சி நடத்த முடியும்'' என்று பற்களை நறநறத்தார்.

''அதிலே எல்லாம் உறுதியாகவே இருங்க; ஆனா ஒரே ஒரு விஷயத்துல நீங்க விட்டுக் கொடுத்தா நல்லதுங்க...''

''என்ன அது?''

'' 'கத்துக்குட்டி பிரதமர் வேணுமா? அனுபவசாலி வேணுமா?'ன்னு மக்களைப் பார்த்துக் கேட்காதீங்க...''

''ஏன்?''

'நீங்க முதல்வரானப்ப, உங்களுக்கு என்ன முன் அனுபவம் இருந்ததுன்னு யாராவது திருப்பிக் கேட்டுடப் போறாங்க!''

ஜெயின் அனல் தெறிக்கும் விழிகள் நெருப்பைக் கக்க ஆரம்பிக்குமுன் ஓடின ஓட்டத்தில், மைலாப்பூர் ஸி.ஐ.டி. காலனியில் வந்து நின்றேன்.

''என்னப்பா தலை தெறிக்க ஓடி வர?'' என்று கேட்டார் ஜி.கே. வாசன்.


''உங்களைப் பார்க்கத்தான் ஸார்! அன்னிபெஸண்ட், நிவேதிதா தேவின்னு பல அயல்நாட்டுப் பெயர்களைச் சொல்லி, ஒரு கலக்குக் கலக்கிட்டீங்க.''


''பின்னே, இப்படியே போனா நாளைக்கு, 'மைசூர்ல பிறந்தவங்க

தமிழ்நாட்டிலே முதல்வராவதா? தமிழ் நாட்டில் பிறந்தவர் ஒரிஸ்ஸாவின் கவர்னராவதா?' என்றெல்லாம் அநியாயத்துக்கு அபத்தக் கேள்விகள் பிறக்கும்!"

"ரொம்பச் சரி சார். ஆனால் நிவேதிதா தேவியும் பெசண்ட் அம்மையாரும், இந்த நாட்டின் பிரதமர் பதவியை அலங்கரிக்க முன் வரலையே! அரசியல் தலைவராகவோ, ஆன்மிகத் தலைவராகவோ இருப்பது வேற, ஒரு நாட்டின் பிரதமர் பதவியை வகிப்பது வேற. இரண்டுக்கும் ஒரே அளவு கோல் சரிப்படுமா?"

கோபத்தில் வாசனின் உதடுகள் துடித்தபோது மீசையும் சிலிர்த்தெழுந்தது! "போய்யா! போய், அந்த அம்மா





பிரசாரம் பண்ணற மேடையிலே சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணிட்டு, கைகட்டி நின்னு இந்த விஷயத்தைப் பேசு, போ!" என்று சத்தம் போட்டார். அவருடைய அந்தக் கோபமே என்னை அலாக்காகத் தூக்கிச் சென்று, கோபாலபுரத்தில் தடால் என்று போட்டது.

உடம்பைத் தட்டிக் கொண்டு எழுந்து பார்த்தால், கலைஞர் காரில் ஏறிக் கொண்டிருந்தார்.

"**வே**ங்கடேச பண்ணையாருக்குக் குழந்தை பிறந்திருக்கு. அதைக் கண் குளிரப் பார்க்காமலேயே போயிட்டார், பாவம். நான் போய் ஆசி வழங்கி, பெயர் சூட்டணும்..." என்றார்.

"அதெல்லாம் சரிதாங்க; ஆனாலும் அவர் மனைவியை வேட்பாளராக்கி தொகுதி ஒதுக்கியிருக்க வேணாம், நீங்க..."

"ஏன்? ஆலடி அருணாவைப் பார்த்துட்டு வந்தியா? சாவி கொடுத்து அனுப்பினானா?"

"அவருக்குத்தான் பதில் சொல்லிட்டீங்களே! கப்பராயன் மகன், ராஜாஜி மகன், நேரு மகள், புஷ், மகன் புஷ் என்று பல அரசியல் வாரிசுகளை எடுத்துக்காட்டாகக் கூறி, திணற அடிச்சுட்டீங்களே... இருந்தாலும்..."

"இருந்தாலும் என்ன...?"

"ஸ்டாலின் கூட கட்சியில அடிமட்டத் தொண்டனாக உழைச்சு உழைச்சு, படிப்படியாகத்தான் முன்னேறி வந்தார். தயாநிதி..."

"அது மோட்டார் கார் யுகம்; இது ராக்கெட் யுகம்! இந்த யுகத்துல தயாநிதி ராக்கெட் வேகத்துலதான் முன்னேறுவான்" என்று கூறி காரின் முன் ஸீட்டில் அமர்ந்து, படீர் என்று கதவை அறைந்து






சாத்தினார் கலைஞர். அந்த அதிர்ச்சியில் பாக்கெட்டிலிருந்த செல் ஃபோன் எகிற, அதைக் கீழே விழாமல் பிடித்துக் கொண்டு, அத்வானியுடன் தொடர்பு கொண்டேன்.

"**கு**ஜராத் சம்பவங்கள், பி.ஜே.பி. ஆட்சியில் பட்ட துடைக்க முடியாத கறை'ன்னு ஒப்புக் கொண்டிருக்கீங்க... இதே மாதிரி டெஹல்கா டேப், ராணுவ சவப்பெட்டி ஊழல், யு.டி.ஐ. சமாசாரம் பற்றியெல்லாம் அடுத்தடுத்து ஒப்புதல் வாக்கு மூலம் வருமா?"

"கேட்கமாட்டியா பின்னே! காங்கிரஸிலே என்னமோ, எங்க ஆட்சியில் நடந்த ஊழல்கள்னு பட்டியல் போட்டு புத்தகம் வெளியிட்டிருக்காங்களாமே. அந்த விழாவுக்குப் போயிட்டு வந்தியா? ஏன், அதுக்கு முந்தின போபர்ஸ் ஊழல், ஏர் பஸ் ஊழல், சப்மெரின் ஊழல், பங்கு மார்க்கெட் ஊழல் எல்லாத்தையும் பட்டியல் போட்டு புத்தகம் வெளியிட எங்களுக்குத் தெரியாதா?" என்று ஆவேசமானார் அத்வானி.

"ஆக மொத்தத்தில் எல்லாமே ஊழல்" என்று சொல்லிவிட்டு, அவசரம் அவசரமாக ஸெல்லில் சிவப்பு பட்டனைக் கிளிக் செய்தேன்.

மூவர் அருளிய

# தேவாரம்

## மூலமும் உரையும்

சங்க காலத்தில், பண்டைத் தமிழரின் வீரம், காதல், மன்னரின் வெற்றிச் சிறப்பு, கொடைத்தன்மை, மான வாழ்க்கை, செங்கோன்மை, அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைத் தேனினும் இனிய செஞ்சொற்களால் பெரும் புலவர்கள் பாடியிருக்கின்றனர். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற பண்பட்ட இலக்கியங்களுக்கு ஈடாக உலகில் எந்த மொழியும் இலக்கியச் செல்வங்களைப் பெற்றதில்லை என்பது உண்மைதான்! ஆயினும் ஆன்மாவைப் பற்றியோ, அது வீடு பேறு அடையும் வழி பற்றியோ சங்கப்பாடல் எதுவும் வாய்திறக்கவே இல்லை. இம்மையினும் சிறந்த ஒன்று உண்டு என்று கூறிப்பக்தி மார்க்கத்தைப் புகுத்தி முத்திக்கு வித்திட்டவர் சமயச் சான்றோராவர். மிகச் சிறந்த குறிக்கோளுக்காக வாழ்ந்த அவர்கள் குறிக்கோள் இலாது கெட்டேன்! எனத் தன்னடக்கத்துடன் பாடி இறைநெறி போற்றினர். தனிமனிதனைப் பாடும் சங்க இலக்கியப் போக்கு மாறிப் பக்தி மார்க்கம் தழைக்கலாயிற்று! தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியங்கள் தோன்றலாயின!

பக்தி இலக்கியத்தில் முக்கிய இடம் வகிக்கும் தேவாரப் பாடல்கள் அனைத்தும் தெய்வத் தன்மை வாய்ந்த தமிழ் வேதப் பாடல்களேயாகும். இவைகளைப் பக்தியோடு ஓதுவார் இறைவனுக்கு உகந்த வழிபாடு செய்பவராவார். இப்பாடல்களை, அனைவரும் புரிந்து வழிபடவும், இவ்விலக்கியத்தின் மேன்மையை பற்றி அறியவும் எளிய உரையுடன் அமைக்கப்பட்டுள்ளன இந்நூல்கள். பல பதிப்புகளைக் கண்ட இவற்றை மீண்டும் மறுபதிப்பாக வெளியிடுகிறோம்.

திருஞானசம்பந்தர்
**தேவாரம்** 6 தொகுதிகள் - விலை ரூ. **600** சலுகை விலை ரூ. **350**

திருநாவுக்கரசர்
**தேவாரம்** 3 தொகுதிகள் - விலை ரூ. **400** சலுகை விலை ரூ. **250**

சுந்தரர்
**தேவாரம்** 1 தொகுதி - விலை ரூ. **150** சலுகை விலை ரூ. **100**

தனித்தனியாகத் தபால் மூலம் பெற, திருஞான சம்பந்தர் தேவாரம்; திருநாவுக்கரசர் தேவாரம்; சுந்தரர் தேவாரம் நூல்களுக்கான தபால் மற்றும் கட்டுச் செலவு முறையே ரூ.65, ரூ.45, ரூ.30 ஆகும்.


பத்துத் தொகுதிகளையும் ஒரே சமயத்தில் தபால் மூலம் பெறுவது மிகச் சிக்கனமானது. அதாவது பத்துத் தொகுதிகளின் சலுகை விலை ரூ. 700.00, தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.100.00 சேர்த்து ரூ.800.00 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெறலாம்.

நேரில், சென்னை : வர்த்தமானன்
கோவை : விஜயா (✆ : 2382614 / 2394614);
சேலம் : சந்திரா (✆ : 2265635);
திருச்சி : திருச்சி புக் ஹவுஸ் (✆: 2705098 /2764198);
மதுரை : செல்வி (✆: 2343510 / 2345169);
நெல்லை : அருள் நந்தி சிவம் (✆ : 2339692 / 3100710)
ஆகிய இடங்களில் சலுகை விலையினை மட்டும் ரொக்கமாகச் செலுத்தி உடனே பெற்றுக் கொள்ளலாம்.
நேரம் காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை (உணவு இடைவேளையின்றி) ஞாயிறு விடுமுறை

தபாலில் பெறக் கடிதம்
எழுத வேண்டிய முகவரி :
வர்த்தமானன் பதிப்பகம்
40, சரோஜினி தெரு,
தியாகராய நகர், சென்னை 17.
(உஸ்மான் ரோடு கீதாஞ்சலி
ஹோட்டல் அருகில்)

இச்சலுகை
3.4.2004 வரை
மட்டுமே!

ADVT



• ஓ அண்ட் எம்முக்கு விருது: டாக்டர் சி.வி.கே வழங்குகிறார்.

"கல்கி சதாசிவத்துக்கு அறிமுகமான டாக்டர்கள் எல்லாம் ரொம்ப வித்தியாசமானவர்கள். கோபாலகிருஷ்ணன் என்று ஒரு டாக்டர் அந்தக் காலத்தில் கல்கி அலுவலகத்துக்கு வருவார். சின்னச் சின்ன மருந்துப் பொட்டலங்கள் வைத்திருப்பார். தலைவலி என்று யாராவது அவரிடம் போனால், ஒன்பது பொட்டலங்களைக் கொடுத்து, "மூணு நாள், மூணு வேளை சாப்பிடுங்கள்" என்பார். வயிற்றுவலி என்று போனாலும் அதே மருந்துதான். ஒன்பது பொட்டலங்கள்தான். ஆச்சரியம் என்ன





• லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

# விளம்பரம் விரும்பா

வென்றால், அவர் கொடுக்கிற அந்த மருந்தில் எந்த வியாதியானாலும் குணமாகி விடும்.

''அதேபோல, சீனிவாசன் என்று ஒரு டாக்டர். அவருடைய வழக்கமான பிரிஸ்க்ரிப்ஷன்: மூன்று நாட்களுக்கு மோர்சாதம்.

''இவர்களைப் போன்றவர்தான் இங்கே அமர்ந்திருக்கும் டாக்டர் சி.வி. கிருஷ்ணசாமியும். நட்பும் நிதான அணுகுமுறையும் உடைய அரிய டாக்டர். இவர் மருந்து தரவே வேண்டாம். நோயாளியுடன் பேசிக் கொண்டிருந்தாலே போதும். உடம்பு சரியாகி விடும்'' இப்படி 'கல்கி' ராஜேந்திரன் பிரபல நீரிழிவு நோய் நிபுணரான டாக்டர் சி.வி. கிருஷ்ணசாமியைப் பற்றிக் குறிப்பிட்டார். இடம்: பாரதிய வித்யா




• விருது பெற்ற விளம்பரம்

• வாரஹரி ஸம்ப்ரதாய ஸங்கீர்த்தன ஹரிகதை



பவன் அரங்கம். மார்ச் 6 அன்று கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை நடத்திய, சிறந்த விளம்பரத்துக்கான விருது வழங்கும் விழா.

இப்போது வெளியாகிற விளம்பரங்களில், படங்கள் பளிச்சென்று இருந்தால், வாசகங்கள் டல்லடிக்கின்றன. வாசகங்கள் அர்த்தமுள்ளவையாக இருந்தால், அதில் சமூக அக்கறை மிஸ்ஸிங். இந்தப் பின்னணியில், கடந்த

# விளம்பரத்துறை முன்னோடி!

வருடத்தில் தமிழ் செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளில் வெளியான தமிழ் விளம்பரங்களிலிருந்து, தகுதியான ஒரு விளம்பரத்தைத் தேர்ந்தெடுத்து, பத்தாயிரம் ரூபாய் பரிசளிப்பது என்பது சாதாரணமான காரியமா என்ன?

அதை மிகச் சரியாகச் செய்து முடித்தார்கள், இந்து நாளிதழின் தலைமை விளம்பர மேனேஜர் வி. காளிதாஸ், மூத்த எழுத்தாளரும் 'சன் நியூஸ்' ஆசிரியருமான மாலன் ஆகியோர். அவர்கள் கடந்த ஆண்டின் மிகச் சிறந்த விளம்பரமாகத் தேர்ந்தெடுத்தது ஓ அண்ட் எம் நிறுவனம் தயாரித்த 'ஹட்ச்' செல்ஃபோன் விளம்பரத்தைத்தான். ''படைப்புத்திறன், எளிமை, புதுமை, மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான அன்னியோன்னியம் என்று பல அழகிய விஷயங்கள் பொதிந்துள்ள விளம்பரம். தகவல் தொடர்பின் அவசியத்தை ரசனையோடு எடுத்துச் சொல்லி, வெற்றிகரமான விளம்பரமாக்கி விட்டார்கள்!'' - பாராட்டிதழ் வாசித்தார் அறக்கட்டளையின் அறங்காவலர்களில் ஒருவரான லட்சுமி நடராஜன்.



• ககன் சபர்வால்



• என். ரதி சித்ரா

நெஞ்சு நெகிழப் பேசி மகிழ்ந்தார் டாக்டர் சி.வி. கிருஷ்ணசாமி.

ஒரு தடவை யாரோ, சதாசிவத்திடம், "நீங்க தினமும் டீ.வி பார்க்கிறதுண்டா?" என்று கேட்டபோது, அவர் பணிச்சென்று சொன்னாராம். "நான் டீ.வி பார்க்கிறதில்லை; டாக்டர் சி.வி.யைத்தான் தினமும் பார்க்கிறேன்."

''தொண்ணூறு வயதிலும், அவரது நிமிர்ந்த நடை எனக்கு வியப்பூட்டும். எளிமை, நகைச்சுவை உணர்வு, தெய்வ பக்தி, தேச பக்தி, இரக்க சுபாவம் என்று பல அரிய குணாதிசயங்கள் கொண்ட அபூர்வ மனிதர் சதாசிவம்.

'விளம்பரத் துறையில் அவர் ஒரு முன்னோடி.. விளம்பரங்களின் முக்கியத்துவத்தை, அவசியத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி, ஏராளமான விளம்பரங்களைப் பத்திரிகைக்கு பெற்றுத் தந்தார். ஆனால் தமது நல்ல காரியங்களை, ஏராளமான தான தர்மங்களை, உதவிகளை அவர் துளியும் விளம்பரப்படுத்திக் கொண்டது கிடையாது" என்று சுட்டிக் காட்டினார் டாக்டர் சி.வி.கே.

நேரத்தை வீணாக்குவது சதாசிவத்துக்குப் பிடிக்காத விஷயம். அவரது நினைவு நிகழ்ச்சி என்பதால், சரியாக ஆறு மணிக்கு இறைவணக்கம். பாடியவர் நிஷா ராஜகோபால். பாரதி பாடல் இனிமையாகக் களை கட்டச் செய்துவிட்டது. வரவேற்புரை ஆற்றியபோதே அனைவருக்கும் முறைப்படி நன்றியும் தெரிவித்து விட்டார், அறங்காவலர் கௌரி ராம்நாராயண்.

விழாவில் சிறப்புரையாற்றியவர் தீரர் சத்தியமூர்த்தியின் மகளான, லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி. லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி தமது வாழ்க்கை வரலாறை எழுதினால், அது சுதந்திரப் போராட்டக் காலத்தின் ஒரு 'குளோஸ் அப்' விவரணையாகவும் அமையும் என்று கோரிக்கை வைத்தார் கௌரி ராம்நாராயண்.

மைக் முன் வந்து நின்றதும், ரிவைண்ட் செய்திருந்த தமது நினைவுகளை பிளேபேக் பண்ணினார் லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி. காங்கிரஸ் கட்சி தொடங்கிய கதர் விற்பனை நிலையம், 'அச்சமில்லை அச்சமில்லை' என்று பாரதி பாடலைப் பாடியபடி ஊர்வலம் போனது, அன்னியத் துணிகள் பகிஷ்கரிப்பு, கள்ளுக் கடை மறியல் போராட்டம், சிறைவாசம் என்று ஏராளமான நிகழ்வுகளில், கல்கி சதாசிவத்தின் ஈடுபாடு குறித்து தமது நிதானமான குரலில் அவர் பேசியபோது, அரங்கமே உன்னிப்பாகக் கேட்டு நெகிழ்ந்தது.



• வரவேற்புடன் நன்றி: கௌரி ராம்நாராயண்

லக்ஷ்மி கிருஷ்ண மூர்த்தியின் உரை,



• காளிதாஸ்



• மாலன்

ராஜாஜி, கல்கி, சதாசிவம் – எம்.எஸ். தம்பதி என்ற நால்வரது பெருமைகளின் சந்தோஷப் பகிர்வாக அமைந்தது.

விருது பெற்ற விளம்பரத்தை உருவாக்கியது ஓ அண்டு எம் என்று விளம்பர உலகில் பிரபலமாக விளங்குகிற, ஆகில்வி அண்டு மாத்தர் விளம்பர நிறுவனம். அதன் சார்பில் விருதைப் பெற்றுக் கொண்ட ஆதித்யா, "பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் புனிதமான மகாமகத்தன்று விருது வழங்கப்படுவது, எங்களுக்குக் கிடைத்துள்ள பெரும் கௌரவம்" என்றார் ரத்தினச் சுருக்கமாக.

ஹட்ச் நிறுவனத்தைச் சேர்ந்த ஷெட்டி, 'கல்கி விநாயகர்' நினைவுப் பரிசைப் பெற்றுக் கொண்டார். விருதுக்குரிய விளம்பரத்தைத் தேர்ந்தெடுத்த நடுவர்கள் இருவருக்கும், ராஜாஜியின் கொள்ளுப்பேரன், கேசவன் எழுதிய ராஜாஜி குறித்த ஆங்கிலப் புத்தகங்கள் நினைவுப் பரிசுகளாக வழங்கப்பட்டன.

இன்று, சிறந்த விளம்பரங்களை உருவாக்கிக் கொண்டிருப்பவர்களுக்கு விருது வழங்கினால் போதுமா? நாளைய விளம்பர உலகினை ஆளப் போகிறவர்களை ஊக்குவிக்க வேண்டாமா? கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை, இதழியல் அல்லது மக்கள் தொடர்பு பயிலும் இரண்டு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்கி வருகிறது. அதன்படி, இவ்வாண்டு சென்னை பல்கலைக் கழக இதழியல் துறைத் தலைவர் ஜோஸபின் சிபாரிசு செய்த சுகன் சபர்வால், ரதிசித்ரா என்ற இரு மாணவிகளுக்கும், தலா ஐயாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி முடிந்ததும், நிகழ்ச்சி தொடங்கியது ஆம்! விருது வழங்கும் நிகழ்ச்சி முடிந்ததும், அடுத்து வாரஹரி ஸம்ப்ரதாய ஸங்கீர்த்தன ஹரிகதை நிகழ்ச்சி ஆரம்பமானது. துகாராம் கணபதி மகராஜ் குழுவினர் வழங்கிய ஹரிகதை நிகழ்ச்சி, சற்று வித்தியாசமானது.

மேடையை நிறைத்துச் சக பாடகர்களும், பக்க வாத்தியக் கலைஞர்களும் அமர்ந்திருந்தனர். அனைவர் தலையிலும் அழகான வெள்ளைக் குல்லா. மையத்தில் மகராஜ் சம்பிரதாயமான மஞ்சள் நிற தலைப்பாகை அணிந்து, அமர்ந்தபடி, மராட்டி மொழிப் பாடல்களை வழங்கினார். அந்தக் கீர்த்தனங்களின் அர்த்தத்தை அவர் நெக்குருகி நல்ல தமிழில் கூற, பக்தியோடு தேசிய ஒருமைப்பாடு உணர்வும் பெருக்கெடுத்தது.

துகாராம் என்ற மராட்டிய மகாமுனியின் கதையை அவர் விவரித்துச் சொன்னார். பசியில் அவர் குடும்பம் வாடிக் கொண்டிருக்க, பண்டரிபுர விட்டலனிடம் மூன்று வேளை உணவை வரமாகக் கேட்கும்படி அனுப்பினாளாம் அவர் மனைவி. விட்டலன் சன்னிதிக்குச் சென்றவர், அவன் கால் நோகக் காத்து நிற்பதைக் கண்டு கரைந்தார், வரம் கேட்க வந்ததை மறந்தார். 'எப்போதும் உன் நாமத்தை பிரேம பக்தியோடு உச்சரிக்கும் வரத்தைக் கொடு' என வேண்டினார்...



• இறை வணக்கம்: நிஷா ராஜகோபால்

அத்தகைய உயரிய பாவத்தில் பாடப்பட்ட துகாராமின் அபங்கங்களைப் பாடவும் கேட்கவும் உகந்த சபை இது, என துகாராம் கணபதி மகராஜ் ஆமோதித்து மகிழ்ந்தது நிகழ்ச்சிக்கு நிறைவான ஆசியாக விளங்கியது; பக்தி சங்கீதத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, தமது மனைவி எம்.எஸ்.ஸின் இசை, பக்தி சாகரமாக உருக்கொள்ள துணை நின்ற கல்கி சதாசிவத்தின் நினைவுக்குச் சிகரமான அஞ்சலியாகவும் அமைந்தது.

– எஸ். சந்திரமௌலி

படங்கள்: யோகா

பிரஹலாதன் சொல் காக்க ஓடோடி வந்த பரமாத்மா, எங்கும் நிறைந்து நம்முள்ளும் குறைவின்றி நிறைந்து ஒளிர்கிறான்; ஒலிக்கிறான்; ஜ்வலிக்கிறான்.

பிரஹலாதனின் வார்த்தையைக் காப்பதற்காக நரசிம்ஹனாக அவதரித்தான் எம் பெருமான். அந்த அவதாரத்திலே அவன் பிரும்மாவின் வார்த்தையையும் காப்பாற்றினான்... எப்படி...?

பிரும்மாதானே ஹிரண்ய கசிபுவுக்கு வரம் கொடுத்தார். 'அந்த வரம் எப்படியானாலும் இருக்கட்டும்; நான் எப்படி வேண்டுமானாலும் கொல்லுவேன்' என்று பகவான் கொன்றிருப்பானானால், அவனை யார் தடுக்க முடியும்?

இருந்தாலும் பிரும்மா கொடுத்த வரத்துக்கு எந்த பங்கமும் இல்லாமல் பகவான் அவதாரம் பண்ணினான். பிரும்மா கொடுத்த வரம் உலகிலே செல்லாது என்று ஏற்பட்டுப் போயிற்றென்றால், பிரும்மாவை யாராவது ஸேவிப்பார்களா! இப்போது பிரும்மாவை ஸேவிப்பார்கள் குறைவு இந்த உலகத்திலே!

பிரும்மாவினுடைய மந்திரத்தை மனத்திலேதான் சொல்ல வேண்டும். வாக் தேவதையினுடைய சாபம் பிரும்மாவுக்கு இருக்கிறது. பிரும்மாவுக்கு அதிகமாக பூஜை நடப்பதில்லை உலகத்தில். கோயிலும் அதிகமாகக் கிடையாது.

ராமாயணம் நாற்பத்தெட்டு நாட்கள் சொல்கிறார் ஒருவர் - உபன்யாஸகர். பட்டாபிஷேகம் முடிந்து போய்விட்டது. ஊருக்குக் கிளம்புகிறார். அப்போதுதான் ஒருத்தர் வந்து, "சுவாமி, இத்தனை நாட்களாக உங்களோடு பேசுவதற்கே முடியவில்லை; ஊருக்குக் கிளம்பி விட்டீர்களா?" என்றார். "ரொம்ப நாட்களாக எனக்கு ஒரு சந்தேகம். நித்யம் உங்களைக் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். முடியவில்லை. அதோடு இந்த நாற்பத்தெட்டு நாட்களில் புதிதாக ஒரு சந்தேகமும் வந்திருக்கிறது. அதையும் கேட்க வேண்டும். கேட்கட்டுமா...?" என்றார்.

ஊருக்குக் கிளம்பியவர் மூட்டையைக் கீழே வைத்துவிட்டார்! "கேளு" என்றார்.

"ரொம்ப நாட்களாக இருந்த சந்தேகம் என்ன...?" அவர் கேட்கிறார்.

"பிரும்மாவுக்கு அதிகமாக பூஜைகள் நடப்பது இல்லையே... கோயிலும் இல்லையே... ஏன்... - இது ரொம்ப நாட்களாக இருக்கும் சந்தேகம்...! நாற்பத்தெட்டு நாட்களாக நீர் சொல்லிக் கொண்டேயிருந்தீர். 'ராமன், ராமன், ராமன்' என்று நிறையச் சொன்னீர். 'ராவணன், ராவணன், ராவணன்' என்றும் சொன்னீர். நடுவிலே 'ராக்ஷஸன், ராக்ஷஸன், ராக்ஷஸன்' என்று சொன்னீர். இதிலே ராமன் ராக்ஷஸனா? ராவணன் ராக்ஷஸனா?" என்று கேட்டார் இவர்.

நடுநடுங்கிப் போய்விட்டார் உபன்யாஸம் பண்ணியவர்! நன்றாக உட்கார்ந்துவிட்டார். ஊருக்கே கிளம்பவில்லை.

"நீர் கேட்ட கேள்வியிலேயே பதிலும் இருக்கிறது" என்று சொன்னார். "உன்னையும் படைத்து என்னையும் படைத்து, உன் எதிரிலே நாற்பத்தெட்டு நாள் நான் ராமாயணம் சொல்லியும், ராமன் ராக்ஷஸனா, ராவணன் ராக்ஷஸனா என்பது உமக்குத் தெரியவில்லை. அவ்வளவு அழகாக நான் கதை சொல்லியிருக்கிறேன். நம் இரண்டு பேரையும் படைத்ததனாலேதான் பிரும்மாவுக்குக்

# குறையொன்றுமில்லை

கோயில் இல்லாமல் போய்விட்டது" என்றார்.

ஆகையினால், இந்த மாதிரி பிரும்மாவை நாம் பழிக்கலாகாது அல்லவா... அதற்காகத்தான் பகவான், பாருங்கள், கருணையோடு அவதரித்தான். பிரும்மா அவனுக்கு அடியவன்தான். ஆன போதிலும், பிரும்மாவுக்கு எந்த கெட்டப் பெயரும் வந்துவிடக் கூடாது; அவன் கொடுத்த வாக்கு பலிக்க வேண்டும் என்று அவதரித்தான். பிரும்மா வரம் கொடுத்தால் செல்லாது என்று ஆகிவிட்டால், உலகிலே யாரும் மதிக்க மாட்டார்கள். அதனால், பிரும்மா கொடுத்த வாக்குக்கு பங்கமில்லாமல் பரமாத்மா ஆவிர்ப்பவித்தான். ஹிரண்ய கசிபு கேட்ட வரத்துக்கும் பங்கமில்லாமல் அத்யாஸ்சர்யமான முறையிலே... 'ராத்திரியில் கூடாது, பகலில் கூடாது, கீழே கூடாது, மேலே கூடாது, உள்ளே கூடாது, வெளியே கூடாது, மறைந்த வஸ்துவினால் மரணம் கூடாது, உணர்ந்த வஸ்துவினாலும் மரணம் கூடாது' என்று ஹிரண்ய கசிபு கேட்டான்.

பகவான், சாயங்கால வேளையிலே, வாசல் படியிலே, தன் மடியிலேயே வைத்துக்கொண்டு ஹிரண்யனை முடித்தான்!

எவ்வளவு அகடிதகடனா சாமர்த்தியம்? இந்த நரசிம்ஹ அவதாரத்திலே! அவ்வளவு ஏற்றமுடையவ







# அருள்வாக்கு

எல்லா வர்க்கத்தினருக்கும் இடம் தரும்படியாக ராஜாங்கம் அமையட்டும். ஆனால் இப்படிப்பட்ட ப்ரதிநிதிகளை வயஸு வந்த எல்லா ஜனங்களுமே தேர்ந்தெடுக்கும் முறைதான் ஸரியான வழியா என்பதில்தான் நிறையவே அபிப்ராய பேதம் இருக்கிறது. ஆனால் இப்படி ரொம்பவும் கொஞ்சம் பேருக்கே இருக்கிறது. இப்படி இருப்பதால், தேசத்தில் பொதுவாயுள்ள அபிப்ராயத்தைக் கவனிக்கும்போது இந்த அபிப்ராய பேதம் கொஞ்சமாகவே தெரிகிறது.

'நம் தேசத்தில், தற்போதுள்ள நிலவரங்களில் இந்தக் கொள்கைகளின் அடிப்படையில் நிர்வாஹம் செய்வது நல்லதா?' என்று சீர்தூக்கி முடிவு பண்ணக் கூடிய

னாக அவதரித்தான், பிரும்மாவினுடைய வார்த்தையைக் காப்பதற்காக!

இந்த பிரஹ்லாதனுக்காக பகவான் நரசிம்ஹ அவதாரம் எடுத்தானே, அவன் சொல் காக்க, நரம் கலந்த சிங்கமாக வந்தானே... அந்த பிரஹ்லாதனுக்கு எவ்வாறு அவ்வளவு பக்தி வந்தது?

நாரதர் இருக்கிறாரே... அவர் கயாதுவைத் தம் ஆசிரமத்துக்கு அழைத்துக் கொண்டு வந்து, பக்தியினுடைய பிரபாவத்தை எடுத்துச் சொல்கிறார்: பூரண கர்ப்பவதியான அவள், அவர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டே தூங்கிப் போய்விடுவாள். ஆனால் அவள் வயிற்றுக்குள்ளே இருக்கிற சிசு, 'உம் உம்' என்று 'உம்' கொட்டியவாறு, நாரதர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டேயிருக்குமாம். நாரதருக்கு ரொம்ப உத்ஸாஹம்! இந்தக் குழந்தை கேட்கிறதே என்று அவரும் சொல்லுகிறார்:

அதனால்தான் சீமந்தம் என்று கர்ப்பவதியான பெண்களுக்கு, ஏழாவது எட்டாவது மாதம் பண்ணுகிற நிலையிலே, பகவத் சரித்திரத்தை அவர்கள் படிக்க வேண்டும்; கேட்க வேண்டும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறது. ஏனென்றால் உள்ளுக்குள்ளே இருக்கிற சிசுவானது பிறக்கிறபோதே பகவத் வாஸனையுடன், நல்ல புத்தியுடன் பிறக்க, அவ்வாறு நல்ல விஷயங்களைக் கேட்க வேண்டும். அதனால்தான், சீமந்தத்திலே உதகசாந்தி என்ற மந்திரத்தை வைத்தார்கள் பெரியோர்கள். அந்த மந்திரத்தை சிரவணம் பண்ணினால், குழந்தை உள்ளேயிருந்தபடி கேட்கிறது. அவ்வாறு எட்டாவது மாதத்தில் கேட்டால், நற்பண்புகளும் உயர்ந்த பக்தியும் வேதத்தில் பற்றும் ஏற்படும்.

அதனால்தான் பிரஹ்லாதன் எம்பெருமான் குறித்த ஞானத்தைக் கருவிலேயே திருவாக அடைந்தான். ஞான, பக்தி, வைராக்கியத்தை முன்பு வைத்து, அதை அனுபவிப்பதற்கென்றே பின்பு பிறந்தான் இந்தப் பிரஹ்லாதன். அப்படி உயர்ந்த ரீதியிலே, கர்ப்பத்தில் இருந்தபோது, நாரதரிடத்திலே பத்தாயிரம் வருட காலம் பகவத் குணத்தைக் கேட்டு அனுபவித்தான். ஆகவே பிரஹ்லாதன் பிறக்கிறபோது அவனுக்கு வயது என்னவென்று கேட்டால், பத்தாயிரம் வயது!

பத்தாயிரம் ஆண்டுகள் கர்ப்பத்தில் இருந்து, அவ்வளவையும் கேட்டு, இனிமேல் அவன் கேட்க வேண்டியது ஒன்றுமே இல்லை; கற்க வேண்டியது எதுவுமே இல்லை என்ற நிலையிலே பூரணமாய்க் கற்றுக் கொண்டான்.

பிறந்த பிறகு வெறுமனே அவனை குருகுலத்துக்கு அனுப்பி வைத்தான் ஹிரண்ய கசிபு. குருகுலத்துக்குப் போய் அவன் கற்பதற்கு என்ன இருந்தது! சர்வத்தையும் கற்றுக் கொண்டு பிறந்தது குழந்தை. எதைக் கற்க வேண்டுமோ அதைக் கற்றுக் கொண்டிருந்தது.

ஆகையினாலே, நாரதருடைய வார்த்தையைக் காப்பதற்காகவும், அத்யத்புத ரூபனாக எல்லாவற்றிலும் நிறைந்தான் பரமாத்மா.

நரசிம்ஹ ரூபமானது அத்யத்புத ரூபம் என்பதிலே, எல்லா மஹான்களும் ஒத்துப் போய் ஈடுபடுகிறார்கள்.

ஸ்ரீமத் பாகவதம் என்கிற புராணம்

வர்களாக வோட்டர்கள் இருக்க வேண்டும். "அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன்" என்று எதையாவது சொல்லிக் கொண்டு வோட்டு கேட்டால், "அது ஸாத்யந்தானா? ஸாத்யமானாலும் அப்படிச் செய்யலாமா?" என்று யோசித்துப் பார்த்து, பேச்சில் ஏமாந்து போகாமல் வோட்டுப் போடக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

இருக்கிறது பாருங்கள்... இந்தப் புராணம் இயற்றுவதற்கே காரணம் என்ன...?

சரஸ்வதி நதி தீரத்திலே வியாஸர் உட்கார்ந்து கொண்டிருந்தார். ரொம்ப சிந்தையோடு இருந்தார். அப்போது நாரதர் அங்கு வந்தார். "ஏன் இத்தனை சிந்தையோடு இருக்கிறீர்...? இப்படி நீங்கள் இருக்கலாமா?"என்றார் வியாஸரைப் பார்த்து.

வியாஸர் சொன்னார், "இவ்வளவு வேதங்களையெல்லாம் விவரித்தேன். வகுத்தேன். உயர்ந்த இதிகாச - சிரேஷ்யமான மகாபாரதத்தை எழுதினேன். இருந்தாலும் மனத்திலே ஒரு நிறைவு ஏற்படவில்லை. ஏதோ ஒரு குறை இருந்து கொண்டேதான் இருக்கிறது; அந்தக் குறை என்னவென்று தெரியவில்லை" என்றார்.

அப்போது நாரதர், "கிருஷ்ண சரித்திரத்தை, பகவான் வாசுதேவன் சரித்திரத்தை நீங்கள் விடிலமாக, விசிததமமாக - நன்கு விவரித்து எங்கும் சொல்லவில்லை; ஆங்காங்கே கோடி காண்பித்திருக்கிறீர்கள். அதனால், கிருஷ்ணனுடைய அவதாரம், அவனுடைய லீலைகள், அதைச் சொல்லக்கூடிய ஒரு புராணத்தை நீர் இயற்றும்; அப்போது உமக்குத் தெளிவு பிறக்கும்..." என்று உபதேசம் பண்ணினார்.

வால்மீகிக்கு உபதேசம் பண்ணிய மாதிரி, இங்கே வியாஸருக்குச் சொன்னவுடனே, வியாஸர் அவர் வாக்கை அனுசரித்து உயர்ந்த ஸ்ரீமத் பாகவத புராணத்தை இயற்றினார்.

பிரும்ம சூத்திராதிகளையெல்லாம் இயற்றிய பிற்பாடு இயற்றியதால்தான் பாகவதம் அவ்வளவு காடின்யம்! பாகவத ஸ்லோகம் அவ்வளவு சுலபமாகப் பிடிபடாது. ராமாயணம் மாதிரி அவ்வளவு சுலபமாக வராது. இரும்புக் கடலை என்றே பெயர்!

அவ்வாறு உயர்ந்த பாகவதத்தை, கிருஷ்ண சரித்திரத்தைச் சொல்வதற்கென்றே இயற்றிய வியாஸர்,

'நமத்புதம் பாலகம் அம்புஜேக்ஷணம்' என அற்புத பாலகனை, அற்புதமான அவதாரம் என்று கிருஷ்ணாவதாரத்தைக் கொண்டாடினார்.

அதே வியாஸர், நரசிம்ஹ அவதாரத்தைச் சொல்கிறபோது 'அத்ருச்யத அத்யத்புதம்' என்றார். கிருஷ்ணாவதாரம் அத்புதம் என்றால், இது அத்யத்புதம்!

ஆகையினாலே, நரசிம்ஹ அவதாரம் மிகவும் உயர்த்தி.

**ந**ரசிம்ஹ அவதாரத்தைச் சொல்ல வந்த நாராயண பட்டத்திரி, 'ஸ்தம்பே கட்டயத்' ஸ்தம்பத்தைத் தகர்த்தான் ஹிரண்யகசிபு என்று சொல்லிவிட்டு, 'குருபவனபுர பாஹிமாம்...' என்று நரசிம்ஹனைத் துதிக்க ஆரம்பித்து விடுகிறார்! வெறும் நாமங்களாகவே சொல்லிக் கொண்டு போகிறார்! 'ரூபத்தை விவரிக்க முடியுமா தன்னாலே' என்று எண்ணிக் கொண்டு, 'சர்வத்துக்கும் அந்தராத்மாவான உன்னை என்ன சொல்ல முடியும்?' என்று வியக்கிறார். 'பவனபுரமான குருவாயூரிலே எழுந்தருளியிருக்கும்படியான எம்பெருமானே, பாஹிமாம்! பாஹிமாம்!' என்று நாமங்கள் சொல்ல ஆரம்பித்து விடுகிறார்.

நரசிம்ஹன் பகவான் ஆவிர்ப்பவித்த போது தோன்றிய சப்தம்தான், மந்திர சப்தாதிகளிலேயும் கலந்து ஒலிக்கின்றது. அந்த மந்திரங்களைக் கேட்பவர்களும், அந்த எம் பெருமானை உபாஸிப்பவர்களும், அந்த பிரஹலாதனைப் போல் அவன் பரிபூர்ண ஆதரவுக்குக் குறைவின்றி பாத்திரமாவார்கள்.

பிரஹலாதன் சொல் காக்க ஓடோடி வந்த பரமாத்மா, எங்கும் நிறைந்து நம்முள்ளும் குறைவின்றி நிறைந்து ஒளிர்கிறான்; ஒலிக்கிறான்; ஜ்வலிக்கிறான்.

**(குறையொன்றுமில்லை ஆறாம் பாகம் நிறைந்தது.)**

ஆஹா!

# ரூ. 50,000 பரிசு!

## கல்கி வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி



இது தேர்தல் குவிஸ் 3வது போட்டி. பரிசுத் தொகை ரூ. 50,000/- கலக்குங்க!

● எல்லாக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதும் வாசகருக்கு ரூ.50,000/- பரிசு! ● நிறையப்பேர் சரியான விடைகளை எழுதியிருந்தால், பரிசு குலுக்கல் முறையில்தான். ● ஆறுதல் பரிசு 50 பேருக்குத் தலா ரூ. 100/- ● முதல் பரிசுத் தொகை வருமான வரி விதிமுறைகளுக்கு உட்பட்டது. ● உறையின் மேல் 'ஆஹா! ரூ.50,000' என்று கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். ● போட்டி தொடர்பாக விசாரணைக்கு அனுமதியில்லை. ● ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. ● முடிவு தேதி ஐந்தாவது கூப்பனுடன் குறிப்பிடப்படும்.

### தேர்தல் குவிஸ் போட்டி கூப்பன் - 3

1. புதுச்சேரியில் போட்டியிடப் போவதில்லை என அறிவித்த தேசியக் கட்சி ..............................
2. பா.ஜ.கவின் ரத யாத்திரையின் பெயர் ..........................................
3. (சரத்பவார்) தேசியவாத காங்கிரசுக்கு தேர்தல் கமிஷன் அங்கீகரித்த சின்னம் ........................................
4. திருமாவளவன் போட்டியிடும் மக்களவைத் தொகுதி ........................................
5. அ.இ.அ.தி.மு.க நிர்வாகிகளை நியமிக்க ஜெயலலிதா நேர்காணல் நடத்திய இடம் ..........................................
6. ஜெ. தேர்தல் பிரசாரம் செய்யத் தொடங்கிய நாள் ........................................

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

..............................................................................

கையொப்பம் : ..............................................................................

# நல்ல சம்பந்தி!

எங்கள் பெண்ணின் திருமணத்திற்காக மங்கையர் மலரில் சென்ற ஆண்டு ஜூன் இதழில் விளம்பரம் செய்திருந்தோம். இந்நிலையில் புத்தகம் வந்த இரண்டாவது நாளில் அதிகாலையில் தொலைபேசி ஒலித்தது. நெல்லையிலிருந்து திரு ஹரிஹரன் என்பவர் தன்னுடைய தம்பிக்கு வரன் பார்ப்பதாகவும், மங்கையர் மலரில் எங்களுடைய விளம்பரத்தினைப் பார்த்துப் பேசுவதாகவும் கூறினார். மேலும் தொடர்ந்து, நட்சத்திரப் பொருத்தம் இருப்பதால் ஜாதகப் பரிவர்த்தனை செய்து கொள்ளலாம் என்றார். விவரங்கள் பேசப் பேச பையனின் தாய் நாங்கள் திருச்செந்தூரில் இருந்தபோது கோவில், திருவிளக்குப் பூஜைகளில் அறிமுகமானவர் எனத் தெரிந்தது. தெரிந்த குடும்பம், நல்ல குடும்பமாக அமைந்து விட பெண்-பிள்ளை பார்த்து அருமையாகத் திருமணம் முடிந்தது. இப்போது மணமக்கள் மகிழ்ச்சியாக கலிபோர்னியாவில் இருக்கிறார்கள்.

நல்ல மாப்பிள்ளை கிடைப்பதுடன் நல்ல சம்பந்திகளும் கிடைப்பது அரிது. எங்களுக்கு மங்கையர் மலரால் நல்ல மாப்பிள்ளையும் நல்ல சம்பந்திகளும் கிடைத்துள்ளார்கள்.

- திருமதி. எஸ். விசாலாட்சி, சென்னை - 600 078.



ஏங்களுக்கு
மங்கையர் மலரால்
நல்ல சம்பந்தி கிடைத்துள்ளனர்

இந்தியாவின் நெ.1 மகளிர் இதழ்

# மங்கையர் மலர்

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்ய அணுகவும் :

மானேஜர், திருமண மலர் பகுதி, கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை-97 தொலைபேசி : 22345622/23/24 தொலைநகல் : 044-2234 5621
மங்கையர் மலர் இன்டர்நெட் முகவரி : www.mangayarmalaronline.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka



**அழகான ஒரு பெண்... அவளிடம் அழகற்ற கேசத்தைப் பார்த்திருக்கிறீர்களா?**

அப்படி ஒரு பெண்ணை நீங்கள் பார்த்திருக்கவே முடியாது. ஏனென்றால் அழகான பெண் என்றால், அவளுடைய கேசமும் அழகாகத்தான் இருக்க வேண்டும். அழகான கேசம் என்றால், அதில் பொடுகு இருக்கக் கூடாது. உரோமத்தின் வேர்ப்பகுதிகள் பாதிக்கப்படாமலும் முடி உதிராமலும் இருக்க வேண்டும். இதை எல்லாம் நிச்சயப்படுத்திக் கொள்ள ஒரு சிறந்த வழி - Franch Oil NH பயன்படுத்துவதுதான்... ஏனென்றால் நோய்த் தொற்றுகளை எதிர்த்து செயல்படுவதற்காக நம் உடலில் உள்ள இயற்கை எண்ணெய்கள், Franch Oil NH எண்ணெயில் உள்ளன. இதனால் முடி உதிர்வது தடுக்கப்படுகிறது. முடி வளர்ச்சியும் அதிகரிக்கிறது.




Recommended usage: Mix 100 ml of Franch Oil with 100 ml of coconut oil, for the best result for hair treatment.

• முடி உதிர்வதை தடுக்கிறது • பிரசவத்திற்கு பின் ஏற்படும் வயிற்றுச் சுருக்கங்களை மறையச் செய்கிறது • மாதவிடாய் வலியைக் குறைக்கிறது • சானிட்டரி நாப்கின்களால் உண்டாகும் தடிப்புகளை குணமாக்குகிறது • கால் விரல்களுக்கு இடையே காளான் தொற்று (athlets foots) பிரச்சினையை குணமாக்குகிறது • கால் ஆணிகளை (corns) மறையச் செய்கிறது •குதிகால் வெடிப்புகளை குணப்படுத்துகிறது • கடுமையான குளிரினால் ஏற்படும் சரும பாதிப்புகளை (chillblain) குணமாக்குகிறது • தீப்புண்களை ஆற்றுகிறது • புண்களை எதிர்த்துப் போராடுகிறது • உதடு வெடிப்புகளைத் தடுக்கிறது • சரும அழற்சியை குணப்படுத்துகிறது • முகப் பருக்களைப் போக்குகிறது • கரும்புள்ளிகளை மறையச் செய்கிறது • கழுத்து மற்றும் மூட்டு வலிகளைத் தணிக்கிறது • அரிப்பு இல்லாமல் தடுக்கிறது.

Certified by: *University of Madras. *Open International University for Complementary Medicine, Colombo.



உடல் மெலிவது ஒரு கலை,
அதைத் தெரிந்து கொள்ளுங்கள்...




**Franch Neutro Sliem**

FRANCH HERBS TECHNOLOGIES LIMITED Fax: 044 - 2644 4370 E-mail: franch@eth.net